போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

IV-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

SUPPLEMENT TO PART IV OF THE FORT ST. GEORGE GAZETTE.

JANUARY 9, 1923.

ந. 1.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1923-௵ ஜனவரி௴ 9௳. [விலை, 2 அ. 6 பை.

சென்னை கவர்ன்மெண்ட் மசோதா ஆக்ட்

BILL OF THE GOVERNMENT OF MADRAS.

சட்டதிட்டங்கள் செய்வதற்கான சென்னபட்டணம் கவர்னரவர்களின்
ஆலோசனை சபையில் கொண்டுவரப்போகும் மசோதா ஆக்ட்.

சென்னைச் சட்டநிரூபண சபையில் வேலை நடந்தேறுவதைக்குறித்த விதிகளைச் சேர்ந்த 18-வது விதியின்படி, அடியிற்கண்ட மசோதா ஆக்டும் அதன் ஹேதுக்களும் நோக்கங்களும் அடங்கிய சூசிகையும் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகின்றன :—

BILL No. 13 OF 1922.

1922-௵த்து 13-வது மசோதா ஆக்ட்.

THE MADRAS IRRIGATION BILL.

நீர்ப்பாய்ச்சலைக் குறித்த சென்னபட்டணத்து மசோதா ஆக்ட்.

பீடிகை.

சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியில் நீர்ப்பாய்ச்சலுக்கும் தண்ணீர் வரி விதித்து வாங்குவதற்கும் சம்பந்தப்பட்ட சட்டத்தைத் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியாலும், இந்த ஆக்டை ஜாரி செய்வதற்கு கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியை முன்னதாகப் பெற்றிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

1-ம் அத்தியாயம்.

பீடிகா விதிகள்.

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, நீர்ப்பாய்ச்சலைக் குறித்த 192 -ம் ௵த்திய சென்னபட்டணத்து ஆக்ட் என்று சொல்லலாம்.

வியாபகமும் வழங்கத் தொடங்குவதும்.

2. இது - சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸி முழுவதுக்கும் வியாபிக்கிறது ; மேலும், இது உடனே செலாவணியாகத் தொடங்கவேண்டும்.

ரத்து.

3. கட்டாயப்படுத்தி வேலை வாங்குவதைக் குறித்த 1858-ம் ௵த்திய சென்னபட்டணத்து ஆக்டும் நீர்ப்பாய்ச்சல் வரியைப்பற்றிய சென்னபட்டணம் 1865-ம்௵த்து ஆக்டும் இதனால் ரத்து செய்யப்படுகின்றன.

அர்த்தம்.

4. இந்த ஆக்டிலே, சங்கதியினாலாவது முன்பின் தொடர்ச்சியினாலாவது விரோதமொன்றும் இல்லாவிட்டால்,—

"கலெக்டர்."

(1) "கலெக்டர்" என்பதிலே, இந்த ஆக்டின்படி யாதொரு கலெக்டருக்குள்ள சகல அதிகாரங்களையுமாவது அவைகளில் எதையாவது செலுத்தும்படி பிரதேச கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டிருக்கும் யாதொரு உத்தியோகஸ்தர் என்பதும் அடங்கும் :

"தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலை."

(2) "தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலை" என்பதிலே, முழுவதுமோ அல்லது சிறிதுமட்டிலோ கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டாகிலும் பராமரிக்கப்பட்டாகிலுமிருந்து, கழிவுத் தண்ணீரையாவது மிச்சமாயுள்ள தண்ணீரையாவது வெளியே கொண்டுபோவதற்காக இயற்கையாகவோ செயற்கையாகவோ ஏற்பட்டிருக்கும் வாய்க்கால்களென்பதும், அப்படிப்பட்ட வாய்க்கால்களுக்குச் சம்பந்தப்பட்டாகிலும் அவைகளுக்குச் சகாயமாகவாகிலுமுள்ள சகல கட்டுவேலைகளென்பதும், யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையிலிருந்து வரும் போக்குக்கால்களென்பதும், அணைகள், மடைகள், கரைகள், மதகுகள், க்ராயின்கள் (வில்வளைவாயுள்ள இரண்டு சுவர்கள் சந்திக்கும் ஸ்தானங்கள்), வெள்ளத்திலிருந்தாவது தண்ணீரில் கரைந்துபோகாதபடியாவது நிலங்களைக் காப்பதற்காகவுள்ள சகல கட்டுவேலைகளென்பதும் அடங்கும் ; ஆனால், அதில் சாக்கடைத்தண்ணீர் முதலியவைகளை அப்புறப்படுத்துவதற்கான கட்டுவேலைகள் அடங்கமாட்டா :

"பூஸ்திதி."

(3) "பூஸ்திதி" என்பது—

(a) நிலையாகப் பைசலேற்பாடு செய்யப்பட்ட யாதொரு பூஸ்திதி அல்லது அங்காமியாகப் பைசலேற்பாடு செய்யப்பட்ட யாதொரு ஜமீன்தாரியென்றும்,

(b) நிலையாகப் பைசலேற்பாடு செய்யப்பட்ட அந்த பூஸ்திதியைச் சேர்ந்ததாகவோ அங்காமியாகப் பைசலேற்பாடு செய்யப்பட்ட அந்த ஜமீன்தாரியைச் சேர்ந்ததாகவோ, கலெக்டராபிஸில் பிரத்தியேகமாய் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் யாதொரு பாகமென்றும்,

(c) பைசலாகாத யாதொரு பாளையம் அல்லது ஜாகீர் என்றும்,

(d) எந்த இனாம் கிராமத்தை ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் கொடுத்திருக்கிறார்களோ அல்லது அப்படி கொடுத்திருப்பதை அவர்கள் ஊர்ஜ்ஜிதம் செய்திருக்கிறார்களோ அல்லது அங்கீகரித்திருக்கிறார்களோ அப்படிப்பட்ட யாதொரு இனாம் கிராமம் அல்லது அந்த கிராமத்திலிருந்து பிரிக்கப்பட்டிருக்கிற யாதொரு பாகமென்றும்,

(e) மேலே (a), (b), (c) அடையாளமிட்ட பகுதிகளில் கண்ட பூஸ்திதிகளில் யாதொன்றைச் சேர்ந்து ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்கள் அடங்கியதாய், சாசுவதமான கீழ்க்குத்தகையாகக் கைப்பற்றிலிருக்கும் யாதொரு பாகமென்றும் அர்த்தமாகும் :

"கவர்ன்மெண்ட் நிலம்."

(4) "கவர்ன்மெண்ட் நிலம்" என்பது - யாதொரு பூஸ்திதியாயிராத அல்லது அதில் அடங்கியிராத யாதொரு நிலமென்று அர்த்தமாகும் :

"நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தர்."

(5) "நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தர்" என்பதிலே, இந்த ஆக்டின்படி யாதொரு நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தருக்குரிய சகல அலுவல்களையுமாவது அவைகளில் எதையாவது செய்யும்படி பிரதேச கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டிருக்கும் யாதொரு நபர் என்பதும் அடங்கும் :

"நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலை."

(6) "நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலை" என்பதிலே—

(a) முழுவதுமோ அல்லது சிறிதுமட்டிலோ கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டு அல்லது பராமரிக்கப்பட்டு அல்லது அவர்களுடைய விசாரணையின் கீழிருந்து வருவதும், அல்லது பராமரிப்புக்காக கவர்ன்மெண்டார் பொருளுதவி செய்திருப்பதும், அல்லது நிலத்தையோ அல்லது நிலத்தீர்வையையோ ஒப்படை செய்திருப்பதும், தண்ணீரை சர்ப்பரா செய்வதற்காகவாவது சேர்த்துவைப்பதற்காகவாவது உபயோகிக்கப்படுவதுமான சகல கால்வாய்கள், வாய்க்கால்கள், குளங்கள், நீர்நிலைகள், கிணறுகள் என்பதும்,

(b) அப்படிப்பட்ட கால்வாய்கள், வாய்க்கால்கள், குளங்கள், நீர்நிலைகள் அல்லது கிணறுகளுடன் சம்பந்தப்பட்டிருக்கும் சகல கட்டுவேலைகள், கரைகள், கட்டுக்கோப்புகள், வரவுகால்கள், போக்குக்கால்களென்பதும்,

(c) அப்படிப்பட்ட கால்வாய்கள், வாய்க்கால்கள், குளங்கள், நீர்நிலைகள் அல்லது கிணறுகளின் காரியத்துக்காக கவர்ன்மெண்டாருடைய அனுபோகத்திலிருந்துவரும் சகல நிலங்களென்பதும், அப்படிப்பட்ட நிலங்களின்மேல் கவர்ன்மெண்டாருடைய அனுபோகத்திலிருந்துவருகிற அல்லது கவர்ன்மெண்டாருக்குச் சொந்தமாயிருக்கிற சகல கட்டிடங்கள், யந்திரங்கள், அடைப்புகள், வாயில்கள், இதர கட்டுக்கோப்புகளென்பதும்,

(d) எவைகளுக்குப் பிரதேச கவர்ன்மெண்டார் இந்த ஆக்ட் 7-வது பிரிவிற் கண்ட நிபந்தனைகளைப் பிரயோகித்திருக்கிறார்களோ அப்படிப்பட்ட யாதொரு ஆறு, ஓடை, ஏரி அல்லது இயற்கையாய்த் தண்ணீர் சேர்ந்திருக்குமிடம் அல்லது இயற்கையாயுள்ள வடிகால் முழுவதும் அல்லது அதன் யாதொரு பாகமென்பதும், அல்லது எந்தக் கட்டுவேலையின் விசாரணையை 7-வது பிரிவின்படி கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களோ அப்படிப்பட்ட யாதொரு கட்டுவேலை யென்பதும்

அடங்கும் :

"நிலத்துக்குடையவர்."

(7) "நிலத்துக்குடையவர்" என்பது - ஒரு பூஸ்திதி அல்லது அதன் பாகத்துக்குச் சொந்தக்காரரென்று அர்த்தமாவது மாத்திரமேயல்லாமல், அதிலே சொந்தக்காரரிடத்திலிருந்தாவது அவருக்கு முந்தி பாத்தியதை அடைந்தவரிடத்திலிருந்தாவது யாதொரு ட்ரான்ஸ்பர் பெற்றிருப்பதை அனுசரித்தாகிலும், தகுந்த அதிகாரமுள்ள யாதொரு கோர்ட்டாருடைய எந்த உத்தரவை அனுசரித்தாகிலும், சட்டத்திலுள்ள யாதொரு நிபந்தனையை அனுசரித்தாகிலும் அந்த பூஸ்திதி முழுவதன் அல்லது அதன் யாதொரு பாகத்தின் வரும்படியை வசூல்செய்யச் சுதந்தரமுள்ள யாதொரு நபரென்பதும் அடங்கும் :

"மாமூல் நஞ்சை நிலம்."

(8) "மாமூல் நஞ்சை நிலம்" என்பது - யாதொரு பூஸ்திதியில் ஒரு போகத்துக்காகவோ பல போகங்களுக்காகவோ நீர்ப்பாய்ச்சிக்கொள்ளும் காரியங்களுக்காக பிரத்தியேகமாய்த் தண்ணீர் வரி செலுத்த வேண்டியதிராமல் யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையிலிருந்து தண்ணீர் சர்ப்பரா பெற சுதந்தரமுள்ளதாக கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் நிலம் என்று அர்த்தமாகும் :

"அனுபோகதாரர்."

(9) யாதொரு நிலத்தின் விஷயத்திலே, "அனுபோகதாரர்" என்பது - அந்த நிலத்தில் பற்றுள்ளவராயிருந்து, அந்த நிலத்தைத் தாமாகவேயாகிலும் தம்முடைய வேலைக்காரர்களைக்கொண்டாகிலும் கூலியாட்களைக்கொண்டாகிலும் சாகுபடி செய்கிற யாதொரு நபர் என்று அர்த்தமாகும் :

"சொந்தக்காரர்."

(10) "சொந்தக்காரர்" என்பதிலே, குறிப்பிடப்பட்ட பொருளின் சொத்துவத்தில் கூட்டுபாத்தியதையுள்ள ஒவ்வொரு நபரென்பதும் அடங்கும் ; மேலும், இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி யாதொரு சொந்தக்காரருக்குரிய சகல சுதந்தரங்களும் பொறுப்புகளும் - ஷை சொத்துவத்தில் அந்தப்படி கூட்டுபாத்தியதையுள்ள சகல நபர்களையும் கூட்டாகவும் தனித்தனியாகவும் சேரும் :

"ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் கைப்பற்றுதாரர்."

(11) "ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் கைப்பற்றுதாரர்" என்பது - யாருடைய பெயரால் ஸர்க்கார் நிலமானது ரெவினியு கணக்குகளிலே அந்தந்த காலத்தில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு நபரென்று அர்த்தமாகும் :

ஆனால், ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் கைப்பற்றுதாரரல்லாத வேறே யாதொரு நபர் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் கைப்பற்றுதாரரின் ஏஜெண்டாகவோ ஊழியக்காரராகவோ அன்றி மற்றப்படியாவது கொதுவை வைத்துக்கொண்டவராகவோ குத்தகைதாரராகவோ அன்றி மற்றப்படியாவது கவர்ன்மெண்ட் நிலத்தைச் சட்டப்படி தம் நிர்வாகத்தில் வைத்திருந்தால், அப்படிப்பட்ட நபர் அந்த கவர்ன்மெண்ட் நிலம் சம்பந்தப்பட்டமட்டிலே ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் கைப்பற்றுதாரராகக் கருதப்படுவார் :

"ரயத்து"

(12) "ரயத்து" என்பது - பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்டில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடி யாதொரு ரயத்து என்று அர்த்தமாகும் :

"கிராமம்."

(13) "கிராமம்" என்பது - இந்த ஆக்டின் சகல காரியங்களுக்காகவுமாவது அவைகளில் எதற்காகவாவது கிராமம் என்று பிரதேச கவர்ன்மெண்டாரால் இப்போது அங்கீகரிக்கப்பட்டிருக்கிற, அல்லது அப்படிப்பட்ட காரியங்களுக்காக ஷை கவர்ன்மெண்டாராவாகிலும் அவர்களுடைய விசாரணை அதிகாரத்துக்குட்பட்டு ரெவினியு போர்டாராவாகிலும் கிராமமென்று இனிமேல் நிர்ணயிக்கப்படக்கூடிய யாதொரு பிரதேச விஸ்தீர்ணமென்று அர்த்தமாகும் :

"நீர்க்கால்."

(14) "நீர்க்கால்" என்பது - கவர்ன்மெண்டாருடைய செலவில் பராமரிக்கப்படாமல், யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையிலிருந்து தண்ணீர் சர்ப்பரா செய்யப்படும் யாதொரு வாய்க்கால் என்று அர்த்த

மாவதுமல்லாமல், அதில் அப்படிப்பட்ட யாதொரு வாய்க்காலுக்கு எதன் மூலமாய்த் தண்ணீர் சர்ப்பராசெய்யப்படுகிறதோ அப்படிப்பட்ட மதகு அல்லது புறத்துவாரம் தவிர அப்படிப்பட்ட யாதொரு வாய்க்காலோடு சம்பந்தப்பட்டிருக்கும் சகல உதவிக்கட்டுவேலைகளென்றும் அர்த்தமாகும்.

உத்தியோகஸ்தர்களை நியமிக்க அதிகாரம்.

5. பிரதேச கவர்ன்மெண்டாராகிலும், இந்த ஆக்டின்படி செய்யப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டு, இது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டார் அதிகாரம் கொடுக்கும் யாதொரு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தராகிலும் - விளம்பரம் பிரசுரித்து அந்த விளம்பர மூலமாக, இதில் பின்னால் கொடுக்கப்படும் அல்லது விதிக்கப்படும் சகல அதிகாரங்களையுமாவது அலுவல்களையுமாவது அவைகளில் எதையாவது இன்ன உத்தியோகஸ்தர்கள் இன்ன பிரதேச எல்லைகளுக்குள்ளாகச் செலுத்தவேண்டும் அல்லது செய்யவேண்டுமென்று நிர்ணயிக்கலாம்.

2-ம் அத்தியாயம்.

பொதுவான பாத்தியதைகளைக்குறித்தும் பொதுக்காரியங்களுக்காகக் கட்டுவேலைகளின் மேல் விசாரணையை ஏற்றுக்கொள்வதைக் குறித்தும்,

இயற்கையாயுள்ள ஆறுகள், ஓடைகள் முதலியவைகளிலிருந்து தண்ணீர் பாய்வதைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காக கவர்ன்மெண்டாருக்குள்ள பாத்தியதை

6. இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, இயற்கையான வாய்க்காலாகப் போய்க்கொண்டிருக்கும் யாதொரு ஆறு அல்லது ஓடையிலுள்ள தண்ணீரையாவது, இயற்கையாயுள்ள யாதொரு வடிகாலிலிருக்கும் தண்ணீரையாவது, யாதொரு ஏரி அல்லது இயற்கையாய்த் தண்ணீர் சேர்ந்திருக்கும் வேறே யாதொரு இடத்திலுள்ள தண்ணீரையாவது, கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டோ பராமரிக்கப்பட்டோ இருக்கும் அல்லது அவர்களுடைய மேல் விசாரணையின்கீழ் இருக்கும் யாதொரு குளம் - நீர்நிலை - வாய்க்கால் அல்லது வேறே கட்டுவேலையில் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிற அல்லது கட்டிவைக்கப்பட்டிருக்கிற அல்லது அவைகளினால் பங்கிடு செய்யப்படுகிற தண்ணீரையாவது நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான காரியங்களுக்காகவாயினும் வடித்துவிடும் காரியங்களுக்காகவாயினும் சேர்த்துவைப்பதையும் கட்டிவைப்பதையும் பங்கிடு செய்வதையுங் குறித்துத் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி ஒழுங்கேற்படுத்த கவர்ன்மெண்டார் மேலான பாத்தியதையுடையவர்களாவார்களென்று இதனால் நிர்ணயிக்கப்படுகிறது.

அப்படிப்பட்ட பாத்தியதையைச் செலுத்துவது.

7. தற்காலத்திலுள்ள அல்லது இனி ஏற்படுத்த உத்தேசிக்கப்படுகிற யாதொரு நீர்ப்பாய்ச்சலின் காரியத்துக்காகவாகிலும் தண்ணீரை வடிப்பதற்கான காரியத்துக்காகவாகிலும் யாதொரு ஆறு அல்லது ஓடையின் தண்ணீர் விஷயமாகவாவது, யாதொரு ஆறு அல்லது ஓடையின் பாகத்திலுள்ள தண்ணீர் விஷயமாகவாவது, இயற்கையாயுள்ள யாதொரு வடிகாலின் தண்ணீர் விஷயமாகவாவது, யாதொரு ஏரியிலுள்ள தண்ணீர் விஷயமாகவாவது, இயற்கையாய் வேறே யாதொரு இடத்தில் சேர்ந்திருக்கும் தண்ணீர் விஷயமாகவாவது மேலே கண்ட மேலான பாத்தியதையைச் செலுத்துவது யுக்தமாயிருக்குமென்று பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் தோற்றினாலும்,

தற்காலத்திலிருக்கிற அல்லது இனி ஏற்படுத்த உத்தேசிக்கப்படுகிற யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைக்காவது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலைக்காவது அப்படிப்பட்ட கட்டுவேலையிலிருந்தாவது தண்ணீர் பாய்வதை ஒழுங்குபடுத்துவதற்காகவோ அதைச் சீர்திருத்துவதற்காகவோ, நீர்ப்பாய்ச்சும் காரியத்துக்காகவாகிலும் தண்ணீரை வடிக்கும் காரியத்துக்காகவாகிலும் வெள்ளத்தில் முழுகிப்போகாமல் நிலங்களைப் பாதுகாக்கும் காரியத்துக்காகவாகிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கிற அல்லது உபயோகிக்கப்படுகிற யாதொரு கட்டுவேலையின் மேல் விசாரணையை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்வது யுக்தமாயிருக்குமென்று பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் தோற்றி, அந்தக் கட்டுவேலை கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்படாமலிருந்தாலும், பராமரிக்கப்படாமலிருந்தாலும், அவர்களுடைய விசாரணையின் கீழ் இராமலிருந்தாலும்,

விளம்பரம் பிறப்பிப்பது.

பிரதேச கவர்ன்மெண்டார் - விளம்பரம் பிரசுரித்து அந்த விளம்பர மூலமாக, அதன் தேதியிலிருந்து நான்கு மாதத்துக்கு உட்பட்டதாயிராமல் அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்படும் ஒரு தினத்துக்குப் பிறகு, ஷை பாத்தியதை அந்தப்படி செலுத்தப்படுமென்றாவது ஷை விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுமென்றாவது பிரசித்தஞ்செய்யலாம்; ஆனால், அந்தப்படி ஏன் செய்யக்கூடாதென்பதற்கு, இது விஷயத்தில் அக்கறையுள்ள யாதொரு நபர் விளம்பரத்தின் தேதிமுதல் இரண்டு மாத காலத்துக்குள்ளாக பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் திருப்தியுண்டாகும்படி தகுதியான காரணம் காட்டுகிற பட்சத்திலே, அவர்கள் அம்மாதிரி பிரசித்தஞ்செய்யக்கூடாது. அந்த விளம்பரத்தை போர்ட் ஸேயிண்ட் ஜார்ஜ் கெஜெட்டிலும், விதி மூலமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டார் கட்டளையிடக்கூடிய வேறே விதமாகவும் பிரசித்தம் செய்யவேண்டும்.

விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட பிறகு அனுமதியின்றி கட்டுவேலை முதலியவைகள் ஏற்படுத்துவது கூடாதென்பதும், இனி பாத்தியதைகள் ஏற்படுவதற்குத் தடையுண்டாவதும்.

8. 7-வது பிரிவின்படி விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட பிறகு, எந்த நபரும் - ஜில்லா கலெக்டரின் அனுமதியில்லாமல், ஷை தண்ணீர் அல்லது கட்டுவேலை சம்பந்தமாக யாதொரு அணையையாகிலும் மடையையாகிலும் கரையையாகிலும் மதகையாகிலும் வாய்க்காலையாகிலும் வேறே கட்டு வேலையையாகிலும் கிட்டவுங்கூடாது, புதுப்பிக்கவுங்கூடாது, அப்புறப்படுத்தவுங்கூடாது, மாற்றவுங்கூடாது; மேலும், அப்படிப்பட்ட யாதொரு ஆறு - ஓடை - இபற்கையாயுள்ள வடிகால் - ஏரி அல்லது இபற்கையாய்த் தண்ணீர் சேர்ந்திருக்கும் வேறே யாதொரு இடத்திலிருந்தாவது அப்படிப்பட்ட கட்டுவேலையிலிருந்தாவது அதன் மூலமாகவாவது தண்ணீர் எவ்வளவும் சர்ப்பரா செய்யப் பெறுவதற்கான பாத்தியதை எதுவும் - விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதற்கு முன்னதாக ஷை தண்ணீர் எவ்வளவுமட்டில உபயோகித்துக்கொள்ளப்பட்டிருக்கிறதோ அவ்வளவு மட்டிலன்றி மற்றபடி அல்லது அதற்குப் பிறகு கொடுக்கப்பட்ட க்ராண்ட் (பட்டயம்) மூலமாகவன்றி மற்றப்படி, கவர்ன்மெண்டாருக்கு விரோதமாக உண்டாயிருப்பதாகவோ, அடையப்படுவதாகவோ எண்ணவுங்கூடாது, அந்தப்படி அடையப்பட்டிருப்பதாக எண்ணவுங்கூடாது.

விவரணம்.—யாதொரு ஆறு, ஓடை, ஏரி அல்லது இயற்கையாய்த் தண்ணீர் சேர்ந்திருக்கும் இடம் அல்லது இயற்கையான வடிகாலிலுள்ள தண்ணீரானது பாய்ச்சிக்கொள்ளும் காரியங்களுக்காக பூமிமட்டத்துக்கு மேல் வரையறுத்து ஏற்படுத்தப்பட்டிருக்கும் யாதொரு வாய்க்காலுக்கு நேரே ஸர்ப்பரா செய்யப்படுவதாயிருந்து, அந்த வாய்க்கால் கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டாகிலும் பராமரிக்கப்பட்டாகிலும் அவர்களுடைய விசாரணையின் கீழாகிலும் இராதபட்சத்திலே, அந்தத் தண்ணீரானது மேலே கண்டபடி உபயோகித்துக்கொள்ளப்பட்டிருப்பதாக எண்ணப்படும். எவ்வளவுமட்டில் அந்தப்படி உபயோகித்துக்கொள்ளப்பட்டிருக்கிறதென்னும் விஷயத்தை, ஷை வாய்க்காலின் பரிமாணத்தையும் அந்த வாய்க்காலில் போகிற தண்ணீரின் அளவைக் கட்டுப்படுத்துகிற மதகுகள் மடைகள் ஆகிய இவைகளின் தன்மையையும் அளவையும் அனுசரித்து நிச்சயிக்கவேண்டும்.

விளம்பரம் பிரசுரித்த பிறகு பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரங்கள்.

9. நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் 7-வது பிரிவில் கண்ட காரணம் எதுவும் காட்டப்படாவிட்டால், பிரதேச கவர்ன்மெண்டார் - மேலேகண்ட பாத்தியதையைச் செலுத்தவோ அல்லது மேலேகண்ட விசாரணையை ஏற்றுக்கொள்ளவோ தொடங்கலாம்; மேலும், ஷை தண்ணீர் அல்லது கட்டுவேலையின விஷயமாக, இந்த ஆக்டின்படி கொடுக்கப்பட்டிருக்கும் சகல அதிகாரங்களையுமாகிலும் அவைகளில் எதையாகிலும் அவர்கள் செலுத்தலாம்.

பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம் ௵த்து ஆக்ட். 7-வது அத்தியாத்தில் கண்ட நிபந்தனைகளானவை - 7-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட விளம்பரத்தின் தேதியிலிருந்து அப்படிப்பட்ட தண்ணீர் அல்லது கட்டுவேலைக்குப் பிரயோகப்படுவது நின்றுபோகும்.

பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரங்கள்.

10. 7-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு விளம்பரத்தை, அம்மாதிரியே பிரதேச கவர்ன்மெண்டார் தள்ளிவிடலாம், ரத்துசெய்யலாம் அல்லது திருத்தலாம்.

3 - ம் அத்தியாயம்.

பொதுவாய்த் தண்ணீர் விஷயமாயும் கட்டுவேலைகள் விஷயமாயும் விசாரணை செய்வதையும் தண்ணீர் சர்ப்பரா செய்வதையுங் குறித்து.

ஒப்பந்தம் ஏற்பட்டிராத பட்சத்திலே, கவர்ன்மெண்டாரால் செய்யப்படும் விதிகளுக்குட்பட்டு தண்ணீர் சாப்பாரா செய்யவேண்டுமென்பது.

11. யாதொரு ஒப்பந்தம் ஏற்பட்டிராத பட்சத்திலாவது, அப்படிப்பட்ட யாதொரு ஒப்பந்தம் பிரயோகப்படாதவரையிலாவது, யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையிலிருந்து செய்யப்படும் தண்ணீர் சர்ப்பராவானது முதலில் இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்குமுன் செய்யப்பட்டாலுஞ்சரி வழங்கத்தொடங்கினபிறகு செய்யப்பட்டாலுஞ்சரி, அந்தப்படி சர்ப்பரா செய்யப்படும் தண்ணீரெல்லாம்-அது விஷயமாய் 99-வது பிரிவின்படி பிரதேச கவர்ன்மெண்டாரால் செய்யப்படும் விதிகளினால் நிர்ணயிக்கப்பட்ட வீதங்களின்படி தண்ணீர் வரி செலுத்துவதற்குட்பட்டும், அந்த விதிகளினால் நிர்ணயிக்கப்படக்கூடிய இதர திட்டங்களுக்குட்பட்டும் அடுத்துப்பிந்திய பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும் கொடுக்கப்படுவதாக எண்ணப்படும்.

தண்ணீர் சர்ப்பரா விஷயமாகவும் கட்டுவேலைகள் விஷயமாகவும் விசாரணை செய்ய பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரங்கள்.

12. (1) பிரதேச கவர்ன்மெண்டார் - இது விஷயமாய் உத்தரவு பிரசித்தஞ்செய்த பிறகு—

(a) எந்த நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையிலிருந்து தண்ணீர் சர்ப்பரா செய்யப்படுகிறதோ அந்தக் கட்டுவேலையை மாற்றவும்,

(b) யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையையாவது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையையாவது மூடிவிடவும், எடுத்துவிடவும், ஏற்படுத்தவும், மராமத்து செய்யவும், மாற்றவும் அல்லது விஸ்தரிக்கவும், அல்லது யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையிலிருந்து செய்யப்படும் தண்ணீர் சர்ப்பராவை நிறுத்திவிடவும் அல்லது குறைக்கவும்,

(c) யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையிலிருந்தாவது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையிலிருந்தாவது தண்ணீரைப் பங்கீடுசெய்யும் விஷயமாய் மேல்விசாரணை செய்யும்பொருட்டும், ஷை கட்டுவேலையிலிருந்து தண்ணீர் பாய்வதைக்குறித்து ஒழுங்கேற்படுத்தும் பொருட்டும் தங்களுக்கு அவசியமாகத்தோற்றும் வேறே எவையேனும் ஏற்பாடுகளைச் செய்யவும்

அதிகாரம் உடையவர்களாவார்கள்.

(2) குறித்த யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையிலிருந்து தண்ணீர் சர்ப்பரா செய்யப் பெறுவதற்கான பாத்தியதை எதுவும் - யாதொரு மாமூலின்படியாகிலும் ஒப்பந்தத்தின்படியாகிலும் கவர்ன்மெண்டாருக்கு விரோதமாக அடையப்படவுமாட்டாது, அடையப்பட்டிருப்பதாக எண்ணப்படவுமாட்டாது.

தண்ணீர் சர்ப்பரா விஷயமாய் விசாரணை செய்வதற்கு நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தருக்குள்ள அதிகாரங்கள்.

(3) யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையின் விசாரணை வகிக்கும் நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தர் - தமக்கு அவசியமாகத் தோற்றும் காலம் வரையிலே அடியிற்கண்ட விஷயங்களில் யாதொரு நீர்க்காலுக்காவது யாதொரு நபருக்காவது தண்ணீர் சர்ப்பரா ஆவதை நிறுத்திவிட அதிகாரமுடையவராவார் :—

(i) (a) பிரதேச கவர்ன்மெண்டாராலாவது இது விஷயமாய்க் கிரமமாக அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் யாதொரு நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தராலாவது உத்தரவு செய்யப்பட்டிருக்கும் யாதொரு வேலையைச் செய்துமுடிக்கும் காரியத்துக்காகவும்,

(b) தண்ணீர் சர்ப்பரா பெற பாத்தியதையுள்ள நபர்களுக்கு நியாயமாய் வேண்டியிருக்கும் தண்ணீரை வரிசைக்கிரமமாக சர்ப்பரா செய்யும் காரியத்துக்காகவும் மேலேகண்டபடி நிறுத்துவது அவசியமாயிருக்கும்போதும் ;

(ii) தண்ணீர் வீணாய்ப் போகாதபடி தடுக்கக்கூடிய விதமாக யாதொரு நீர்க்கால் பராமரிக்கப்படாமலிருக்கும்போதும்.

ஸர்வே செய்யும் காரியங்களுக்காகவும பார்வையிடும் காரியங்களுக்காகவும் பிரவேசிக்க அதிகாரம்.

13. யாதொரு நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தரும், யாதொரு நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தருடைய பிரத்தியேகமான உத்தரவின்படி பிரவர்த்திக்கும் யாதொரு நபரும்-யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைக்காவது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலைக்காவது அடுத்தாற்போலிருக்கிற அல்லது அதற்கு அருகாமையிலிருக்கிற எந்த நிலங்களிலாகிலும், அல்லது எவைகளின் மூலமாக யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையையாவது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையையாவது ஏற்படுத்த உத்தேசிக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட எந்த நிலங்களிலாகிலும் பிரவேசித்து, அவைகளின்மேல் ஸர்வே செய்யவோ மட்டம்பார்க்கவோ ஆரம்பிக்கலாம் ;

மேலும், கீழ்மண்ணைத் தோண்டித் தொளையிடலாம் ;

அல்லாமலும், தகுதியான நிலவெல்லைக்குறிகளையும் மட்டம் காட்டும் குறிகளையும் நீரளவுக்கருவிகளையும் தயார் செய்து நாட்டலாம் ;

அன்றியும், மேற்படி நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தரின் விசாரணையில் இருப்பதாய்த்தற்காலத்திலுள்ள அல்லது இனி ஏற்படுத்த உத்தேசிக்கப்படுகிற யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைக்காகிலும் தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலைக்காகிலும் சம்பந்தப்பட்ட யாதொரு விசாரணை நடத்துவதற்கு அவசியமான மற்றக் காரியங்களையெல்லாம் செய்யலாம் ;

மேலும், அந்த விசாரணையை மற்றப்படி பூர்த்திசெய்ய முடியாமலிருந்தால், நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தராவது அப்படிப்பட்ட வேறே நபராவது - அறுவடையாகாமலிருக்கும் யாதொரு பயிர், அடைப்பு அல்லது காட்டின் எந்த பாகத்தையாகிலும் வெட்டிப் பரிஷ்கரித்துவிடலாம்.

அவசரமான சந்தர்ப்பங்களில் பிரவேசிக்க அதிகாரம்.

14. யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைக்காவது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலைக்காவது தற்செயலாய் யாதொரு கெடுதி நேரிடுகிற விஷயத்திலாகிலும், நேரிடுமென்று அச்சங்கொள்ளப்படுகிற விஷயத்திலாகிலும், அப்படிப்பட்ட கட்டுவேலையைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காவது அதைப் பராமரிப்பதற்காவது நிர்வகிப்பதற்காவது, தண்ணீர் உபயோகிப்பதைப் பார்வையிடும் காரியத்துக்காவது அதைப்பற்றி ஒழுங்கேற்படுத்தும் காரியத்துக்காவது அவசியமாயிருக்கும் போதாகிலும், யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலை அல்லது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலை திறமையாய் வேலை

செய்வதற்குப் பிரமாதமான ஹானி நேரிடுவதைத் தடுப்பதற்காக யாதொரு புதிய கட்டுவேலையை உடனே ஏற்படுத்தவேண்டிய அவசியம் நேரிடுகிறவிஷயத்திலாகிலும், யாதொரு நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தராவது இது விஷயமாய் அவருடைய பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவுகளின்படி பிரவர்த்திக்கும் யாதொரு நபராவது - அப்படிப்பட்ட நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைக்காகிலும் தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலைக்காகிலும் அடுத்தாற்போலிருக்கிற அல்லது அதற்கு அருகாமையிலிருக்கிற எந்த நிலங்களிலாவது எப்போதேனும் பிரவேசிக்கலாம்; மேலும், ஷை உத்தியோகஸ்தராவது நபராவது - மேலேகண்ட கெடுதியைச் சீர்ப்படுத்தும் காரியத்துக்காகவோ தவிர்க்கும் காரியத்துக்காகவோ, அல்லது அவசரமான சந்தர்ப்பத்தில் யாதொரு புதிய கட்டுவேலையை ஏற்படுத்துவதற்காகவோ, அல்லது தண்ணீரை உபயோகிப்பதைப் பார்வையிடுவதற்காகவோ அதைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காகவோ, அல்லது ஷை நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையைக் குறித்தாவது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையைக் குறித்தாவது ஒழுங்கேற்படுத்துவதற்காகவோ அதைப் பராமரிப்பதற்காகவோ நிர்வகிப்பதற்காகவோ அவசியமாயிருக்கக்கூடிய சகல வேலைகளையும் செய்துமுடிக்கலாம்.

நிலத்தை அளப்பதற்காகப் பிரவேசிக்க அதிகாரம்.

15. யாதொரு நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தராவது இதுவிஷயமாய் அவருடைய பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவுகளின்படி பிரவர்த்திக்கும் யாதொரு நபராவது யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையினால் அல்லது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையினால் தண்ணீர் பாய்ச்சப்படும் யாதொரு நிலத்தை அளக்கும் காரியத்துக்காக அந்த நிலத்தின்மேல் எப்போதாகிலும் பிரவேசிக்கலாம்.

சாமான்களைப் போட்டுவைக்கும்பொருட்டாவது பெறும்பொருட்டாவது பிரவேசிக்க அதிகாரம்.

16. யாதொரு நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தரும் இது விஷயமாய் அவருடைய பிரத்தியேகமான உத்தரவுகளின்படி பிரவர்த்திக்கும் யாதொரு நபரும்—

(a) யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையிலிருந்தாவது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையிலிருந்தாவது எடுக்கப்பட்ட மண்ணையாகிலும் இதர பொருள்களையாகிலும், அந்தக் கட்டுவேலையில் உபயோகத்துக்காக வேண்டியிருக்கிற சாமான்களையாகிலும் யாதொரு நிலத்தின்மேல் போட்டுவைப்பதற்காகவோ,

(b) அப்படிப்பட்ட கட்டுவேலையை மராமத்து செய்வதற்கோ அல்லது மாற்றுவதற்கோ மண், கல் அல்லது இதர சாமானை அந்த நிலத்திலிருந்து பெறுவதற்காகவோ, ஷை கட்டுவேலையிலிருந்து பிரதேச கவர்ன்மெண்டார் விதிமூலமாய் நிர்ணயிக்கும் தூரத்துக்குள்ளாக அந்த நிலத்தில் பிரவேசிக்கலாம்.

நிலத்திலாவது கட்டிடத்துக்குள்ளாவது அடைப்பு ஏற்படுத்தியுள்ள யாதொரு இடத்துக்குள்ளாவது பிரவேசிக்க உத்தேசித்திருப்பதைக்குறித்து நோடிஸ் கொடுப்பது.

17. யாதொரு நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தராவது வேறே நபராவது, இந்த அத்தியாயத்தின்படி கொடுக்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துகையிலே, யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையிலிருந்து எதற்குள் ஜலம் பாயவில்லையோ அப்படிப்பட்ட யாதொரு நிலத்திலாகிலும் யாதொரு கட்டிடத்துக்குள்ளாகிலும் யாதொரு குடியிருப்பு வீட்டைச் சேர்ந்த அடைப்பு ஏற்படுத்தியுள்ள யாதொரு முற்றத்துக்குள்ளாகிலும் தோட்டத்துக்குள்ளாகிலும் அனுபோகதாருடைய சம்மதத்துடனன்றி மற்றப்படி பிரவேசிக்க உத்தேசித்தால், அவர் - அந்த நிலம், கட்டிடம், முற்றம் அல்லது தோட்டத்தின் அனுபோகதாருக்குத் தாம் அந்தப்படி பிரவேசிக்க உத்தேசித்திருப்பதாய் எழுத்துமூலமாக முன்னதாய் நியாயமான நோடிஸ் கொடுக்கவேண்டும். ஆனால், அவசரமான யாதொரு சந்தர்ப்பத்தில் நிலத்தில் பிரவேசிப்பதற்கு அப்படிப்பட்ட நோடிஸ் எதுவும் கொடுக்கவேண்டிய அவசியமில்லை.

கட்டுவேலைகளுக்குச் சேதம் உண்டானதனால் பிரயோஜனமடைந்திருக்கும் நிலங்களின் அனுபோகதார்களிடமிருந்து அந்த சேதத்தைச் சரிப்படுத்துவதற்காகப் பிடிக்கும் செலவை வசூலிக்க அதிகாரம்.

18. யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைக்காவது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலைக்காவது அநுமதியின்றி யாதொரு நபரால் எவ்விதமாகவாகிலும் சேதம் உண்டுபண்ணப்பட்டாலும், அது மாற்றப்பட்டாலும், பெரிதாக்கப்பட்டாலும், அதற்குத் தடங்கல் உண்டுபண்ணப்பட்டாலும், அந்த நபர் இன்னாரென்று கலெக்டருக்குத் தகுதியாகத் தோற்றும் விசாரணை செய்த பிறகு நிச்சயித்தறியக்கூடாமலிருக்கிற பட்சத்திலே அல்லது அடையாளம் கண்டுபிடிக்கமுடியாமலிருக்கிற பட்சத்திலே, கலெக்டரானவர் - மேலேகண்டபடி சேதப்படுத்தினதனாலோ, மாற்றினதனாலோ, பெரிதாக்கினதனாலோ, தடங்கல் உண்டுபண்ணினதனாலோ பிரயோஜனம் அடைந்திருப்பதாகத் தாம் அபிப்பிராயப்படும் சகல நிலங்களின் அனுபோகதாரர்களுக்கும் நோடிஸ் கொடுத்து, அவர்கள் இது விஷயமாய்ச் சொல்லிக்கொள்ள விரும்பும் யாதொரு சங்கதியைக் கேட்டபிறகாவது, அந்தப்படி அவர்கள் சொல்லிக்கொள்வதற்குத் தமக்குப் போதுமானதாகத் தோற்றும் காலம் கழிந்தபிறகாவது, அந்த சேதத்தைச் சரிப்படுத்துவதற்காகிலும், அந்தப்படி மாற்றியிருப்பதையோ பெரிதாக்கியிருப்ப

தையோ தடங்கல் உண்டுபண்ணியிருப்பதையோ அப்புறப்படுத்துவதற்காகிலும் பிடிக்கும் செலவை ஷை அனுபோகதாரர்களிடமிருந்து வசூல்செய்யலாம். இந்தப் பிரிவின்படி யாதொரு கலெக்டரால் செய்யப்படும் ஒவ்வொரு உத்தரவின்மேலும் ஜில்லா கலெக்டருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்; இவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

சிறிதுமட்டில் பூஸ்திதியைச் சேர்ந்த நிலத்துக்கும் சிறிதுமட்டில் கவர்ன்மென்ட் நிலத்துக்கும் உபயோகப்படுகிற நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைகளை மராமத்து செய்வதற்காகப் பிடிக்கும் செலவில் ஒரு பாகத்தை வசூலிக்க அதிகாரம்.

19. யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையானது சிறிதுமட்டில் யாதொரு பூஸ்திதியிலுள்ள நிலத்துக்கும் சிறிதுமட்டில் கவர்ன்மென்ட் நிலத்துக்கும் உபயோகபபடுவதாயிருந்து அதை மராமத்து செய்யவேண்டியிருந்தால், கலெக்டரானவர் - மராமத்துக்காகப் பிடிக்கக்கூடிய உத்தேச செலவைக்குறித்து நிலத்துக்குடையவருக்கு நோடிஸ் கொடுத்து, அவருக்கு ஆட்சேபணைகள் எவையேனும் இருந்தால் அவைகளைத் தெரிவிக்கும்படி அவருக்குச் சமயம் ஏற்படுத்திக் கொடுத்தபிறகு மராமத்து செய்யலாம்; அதன்மேல், அந்தப்படி மராமத்து செய்வதற்காகப் பிடிக்கும் செலவை, இதற்கு விரோதமாக ஏதேனும் உடன்படிக்கை ஏற்பட்டிராவிட்டால், ஷை நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையின்கீழ் இருக்கும் கவர்ன்மென்ட் நிலத்தின் விஸ்தீர்ணத்துக்கும் பூஸ்திதியைச் சேர்ந்த நிலத்தின் விஸ்தீர்ணத்துக்கும் தக்கபடி கவர்ன்மென்டாரும் நிலத்துக்குடையவரும் பிரித்துக்கொள்ளவேண்டும்:

ஆனால், ஷை மராமத்து செலவை அந்தப்படி பிரிக்கும்போது, எந்த விஸ்தீர்ணத்தின் விஷயமாக 34-வது பிரிவின்படி (தண்ணீர்) வரி விதித்துவாங்கத்தக்கதாயிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு விஸ்தீர்ணத்தை விலக்கிவிடவேண்டும்.

4-ம் அத்தியாயம்.

நீர்க்கால்களைக்குறித்து.

நீர்க்காலை ஏற்படுத்துவதற்காக விண்ணப்பம்.

20. நீர்க்காலை ஏற்படுத்த விரும்புகிற யாதொரு நபர் - நீர்க்காலை ஏற்படுத்தவேண்டுமென்றும், அந்தப்படி ஏற்படுத்துவதற்காகச் செய்யவேண்டிய சகல காரியங்களையும் விண்ணப்பதாரருடைய செலவிலேயே செய்யவேண்டுமென்றும் நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தரைக் கேட்டுக்கொண்டு அவருக்கு எழுத்துமூலமாய் விண்ணப்பம் செய்துகொள்ளலாம்.

அதன்மேல் நடத்தவேண்டிய நடவடிக்கை.

21. அப்படிப்பட்ட நீர்க்காலை ஏற்படுத்துவது யுக்தமென்று நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தர் அபிப்பிராயப்பட்டால், அவர் - ஆரம்ப நடவடிக்கைகளுக்காகப் பிடிக்கும் செலவுக்கும், வெகுசாய்ச் செலுத்தவேண்டியதாகும் பிரதிபலன் தொகை ஏதாகிலும் இருந்தால் அதற்கும் அவசியமானதென்று தாம் அபிப்பிராயப்படுகிற தொகையைக் கட்டிவைக்கும்படி விண்ணப்பதாரருக்கு உத்தரவு செய்யலாம்; அந்தப்படி தொகை கட்டிவைக்கப்படுவதன்மேல், அவர் - ஷை நீர்க்காலுக்காக மிகவும் தகுதியாயுள்ள மார்க்கத்தைக்குறித்து விசாரணை செய்விப்பதோடுங்கூட, அந்தக் காலை ஏற்படுத்துவதற்காக அவசியமென்று தாம் அபிப்பிராயப்படுகிற நிலத்தில் அடையாளம் செய்விக்கவும்வேண்டும்; மேலும், எந்த கிராமத்தின்மூலமாக அந்த நீர்க்காலைக் கொண்டுபோக உத்தேசிக்கப்படுகிறதோ அந்த கிராமத்தைச சேர்ந்த ஷை நிலத்தின் இவ்வளவு பாகத்திலே மேலேகண்டபடி அடையாளம் செய்யப்பட்டிருக்கிறதென்று அப்படிப்பட்ட ஒவ்வொரு கிராமத்திலும் உடனே ஒரு நோடிஸ் பிரசித்தம் செய்யவேண்டியதோடுங்கூட, அந்த நோடிஸுக்கு ஒரு பிரதியை ஜில்லா கெஜெட்டில் பிரசுரிப்பதற்காக அந்த நிலமிருக்கிற ஒவ்வொரு ஜில்லாவின் கலெக்டருக்கும் அனுப்பவும்வேண்டும்.

அப்படிப்பட்ட நீர்க்கால்மூலமாய்த் தண்ணீர் சர்ப்பரா செய்யப்பெற விரும்புகிற யாதொரு நபர் அந்த நோடிஸ் பிரசித்தஞ்செய்த முப்பது தினத்துக்குள்ளாக நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தருக்கு அதுவிஷயமாய் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டுமென்று அந்த நோடிஸ்மூலமாய் ஷை நபருக்குத் தெரிவிக்கவும்வேண்டும். அப்படிப்பட்ட யாதொரு விண்ணப்பதாரர் ஹாஜராகி அவருடைய விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படுகிற பட்சத்திலே, அவர் - அந்த நீர்க்காலை ஏற்படுத்துவதற்காகப் பிடிக்கும் செலவிலும் அந்த நீர்க்காலுக்காக நிலத்தை எடுத்துக்கொள்வதற்காகப் பிடிக்கும் செலவிலும் தாம் செலுத்தவேண்டிய பாகத்தைச் செலுத்த உட்பட்டவராவார்.

ஆரம்ப நடவடிக்கைகள் பூர்த்தியாய்விட்டால், செலவுக்கு ஒரு உத்தேச மதிப்பை நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தர் விண்ணப்பதாரருக்குச் சவதரிக்கவேண்டும். ஏற்கனவேயுள்ள நீர்க்கால்கள் பிரஸ்தாப நீர்க்காலுக்குக் குறுக்கே போவதற்காகவும், அதனால் தடைப்படக்கூடிய வடிகாலை அந்தப்படி கொண்டுபோவதற்காகவும், அந்தக் காலுக்குக் குறுக்கே தகுதியான போக்குவரவு சாதனங்கள் ஏற்படுத்துவதற்காகவும் கட்டுவேலைகள் எவையேனும் கட்டவேண்டியிருந்தால் அவைகளுக்காகப் பிடிக்கும் செலவும் மேலேகண்ட செலவில் அடங்கும்.

22. 21-வது பிரிவில் குறிப்பிடப்பட்ட நோடிஸானது ஜில்லா கெஜெட்டில் பிரசுரிக்கப்பட்டதிலிருந்து முப்பது தினத்துக்குள்ளாக, ஏற்படுத்த உத்தேசிக்கும் நீர்க்காலை ஏற்படுத்துவதனால் வெகுசாய் பாதிக்கப்படக்கூடிய யாதொரு நபராவது, அந்த நீர்க்காலை எந்த நிலத்தில் ஏற்படுத்த உத்தேசிக்கப்படுகிறதோ அந்த நிலத்தில் அக்கறையுள்ள யாதொரு நபராவது - உத்தேசித்திருக்கிறபடி நீர்க்கால் ஏற்படுத்தப்படும் விஷயத்தில் தமக்குள்ள ஆட்சேபணையைக் கண்டெழுதி மனுமூலமாய் ஜில்லா கலெக்டருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம். ஜில்லா கலெக்டரானவர் - விசாரணை நடத்தப்போகும் காலத்தையும் இடத்தையும் குறித்து நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தருக்கு முன்னதாய் நோடிஸ் கொடுத்தபிறகு, அந்த ஆட்சேபணையைக்குறித்து விசாரிக்கவேண்டும்.

ஆட்சேபணைகளைக் குறித்து விசாரணை.

ஏற்படுத்தப்போகும் நீர்க்காலை ஒரு ஜில்லாவல்லாமல் பல ஜில்லாக்கள் மூலமாய்க் கொண்டுபோக உத்தேசிக்கப்பட்டால், ஏற்படுத்தப்போகும் நீர்க்காலின் தலைப்பு எந்த ஜில்லாவிலிருக்குமோ அந்த ஜில்லாவின் கலெக்டரானவர் இந்தப் பிரிவின் காரியங்களுக்காக ஜில்லா கலெக்டராவார்.

ஜில்லா கலெக்டரானவர் - இந்தப் பிரிவின்படி தாம் பிறப்பிக்கும் சகல உத்தரவுகளையும் அவைகளுக்குரிய காரணங்களையும் எழுத்துமூலமாய் ரெகார்ட் செய்யவேண்டும்.

23. ஆட்சேபணை எதுவும் செய்யப்படாவிட்டாலும், ஏவையேனும் ஆட்சேபணைகள் செய்யப்பட்டு அவை தள்ளிவிடப்பட்டாலும், ஜில்லா கலெக்டரானவர் - அதைக்குறித்து நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தருக்குத் தெரிவித்து, அவசியமிருந்தால் ஷை நீர்க்காலுக்காக வேண்டியிருக்கும் நிலத்தை எடுத்துக்கொள்வதற்காக 1894-ம் வருஷத்து நிலமெடுத்துக்கொள்வதற்கான ஆக்ட் 6-வது பிரிவின்படி கவர்ன்மென்டாரால் யாதொரு நிர்ணயப்பத்திரிகை பிறப்பிக்கப்பட்டும், அதன்மேல் ஷை ஆக்ட் 7-வது பிரிவின்படி அந்த நிலத்தை எடுத்துக்கொள்வதற்காக ஒழுங்குபண்ணும்படி கவர்ன்மென்டார் கலெக்டருக்குக் கட்டளையிட்டும், (அவசியமாயிருக்கிற பட்சத்திலே) ஷை ஆக்ட் 17-வது பிரிவின்படி சுருக்கவகையாய் சுவாதீனம் பெறுவதற்காக கவர்ன்மென்டார் உத்தரவு பிறப்பித்தும் இருந்தால் எப்படியோ அப்படியே, ஷை ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி அந்த நிலத்தை எடுத்துக்கொள்ளத் தொடங்கவேண்டும்.

கலெக்டர் நிலமெடுத்துக்கொள்வது.

யாதொரு ஆட்சேபணை சட்டசம்மதமானதாயிருக்கிறதென்று ஜில்லா கலெக்டர் அபிப்பிராயப்பட்டால், அவர் அப்பிரகாரமே நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தருக்குத் தெரிவிக்கவேண்டும்; அதன்மேல், ஷை உத்தியோகஸ்தரானவர் - தமக்குத் தகுதியாகத் தோற்றுகிறபட்சத்திலே, ஏற்படுத்த உத்தேசித்திருக்கும் நீர்க்காலின் மார்க்கத்தை மாற்றலாம்; மேலும், ஜில்லா கலெக்டரானவர் - அந்தப்படி மாற்றுவதால் பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்கு நோடிஸ் கொடுத்தபிறகு, அப்படிப்பட்ட நீர்க்காலை ஏற்படுத்தவேண்டுமா கூடாதா என்பதைத் தீர்மானிக்கவேண்டும்.

24. எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கிற நிலங்கள் ஏவையேனும் வெவ்வேறு ஜில்லாக்களில் இருந்தால், அந்த நிலங்கள் இருக்கும் பற்பல ஜில்லாக்களின் கலெகடர்கள் அவைகளை எடுத்துக்கொள்ளவேண்டும்.

நிலமெடுத்துக்கொள்ள அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் உத்தியோகஸ்தர்கள்.

25. நிலம் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தாலும் விண்ணப்பதாரராலாவது விண்ணப்பதாரர்களாலாவது சவதரித்துக்கொடுக்கப்பட்டிருந்தாலும், நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தர் - ஷை நீர்க்காலை ஏற்படுத்திக்கொள்ளும்படி விண்ணப்பதாரருக்காவது விண்ணப்பதாரர்களுக்காவது அனுமதி கொடுக்கவாகிலும் வேண்டும், அதைத் தாமே ஏற்படுத்தவாகிலும் வேண்டும். ஆனால், யாதொரு விண்ணப்பதாரர் ஷை நிலம் எடுத்துக்கொண்டது விஷயமாய் பாக்கியாயிருக்கும் யாதொரு தொகையைச் செலுத்தியாகிறவரையிலே, நீர்க்காலை ஏற்படுத்திக்கொள்ளும்படி அவருக்கு அனுமதி கொடுக்கக்கூடாது.

நீர்க்காலுக்காக நிலம் எடுத்துக்கொண்ட பிறகு நடத்தவேண்டிய நடவடிக்கை.

நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தரே அந்த நீர்க்காலை ஏற்படுத்திக் கொடுக்கிறபட்சத்தில், அவர் - அந்த வேலை முடிவதன்மேல், 20-வது பிரிவின்படிக்கான விண்ணப்பதாரருக்கும் 21-வது பிரிவின்படிக்கான விண்ணப்பதாரர் எவராகிலும் இருந்தால் அவருக்கும் அதைக்குறித்து நோடிஸ் கொடுத்து, அந்த நிலத்தை எடுத்துக்கொள்வதற்கும் நீர்க்காலை ஏற்படுத்துவதற்கும் பிடிக்கும் செலவு விஷயமாய் ஷை விண்ணப்பதாரர் அல்லது விண்ணப்பதாரர்கள் செலுத்தவேண்டியதாயிருக்கும் யாதொரு தொகையைச் செலுத்தும்படி கேட்கவும்வேண்டும்.

முந்திய நிபந்தனைகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, நிலமெடுத்துக்கொள்வதற்காகப் பிடிக்கும் செலவாவது பிரஸ்தாப வேலைக்குப் பிடிக்கும் செல

வாவது அதிகமாயிருக்கிறதென்று யாதொரு விண்ணப்பதாரர் அபிப்பிராயப்படுகிற பட்சத்திலே, அவர் - கட்டிடவேலை ஆரம்பிப்பதற்குமுன் தம்முடைய விண்ணப்பத்தை வாபஸ் வாங்கிக்கொள்ள இஷ்டப்பட்டால அந்தப்படியே செய்யலாம். நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தர் எப்போதாகிலும் யாதொரு வேலையை விட்டு விலகிவிடலாம் ; ஆனால், அவர் அந்தப்படி செய்வதற்கு முன்னே, தமக்குள்ள நியாயங்களை எழுத்துமூலமாய் ரெகார்ட் செய்யவேண்டும்.

நீர்க்காலை ஏற்படுத்திக் கொள்ள அனுமதி கொடுக்கப்பெற்றிருக்கும் விண்ணப்பதாரரைக் கட்டுப்படுத்தக்கூடிய திட்டங்கள்.

26. யாதொரு நீர்க்காலை ஏற்படுத்திக்கொள்ள அடுத்து முந்திய பிரிவின்படி யாதொரு விண்ணப்பதாரருக்கு அனுமதி கொடுக்கப்பட்டால், அடியிற்கண்ட திட்டங்கள் அவரையும் பாத்தியதை விஷயத்தில் அவருக்குப் பிரதிநிதிகளாயுள்ளவர்களையும் கட்டுப்படுத்தக்கூடியவைகளாகும் :—.

முதலாவது.—ஷை நீர்க்காலையும், அந்த நீர்க்கால் ஏற்படுத்துவதற்குமுன்னே இருந்த நீர்க்கால்களும், அதனால் தடைப்படும் வடிகாலும் அந்த நீர்க்காலுக்குக் குறுக்கே போவதற்காகவும், அதற்குக் குறுக்கே தகுதியான போக்குவரவு சாதனங்கள் அமைத்துக் கொடுப்பதற்காகவும் அவசியமாயுள்ள சகல கட்டுவேலைகளையும விண்ணப்பதாரர் ஏற்படுத்தி, நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தருக்குத் திருப்திகரமாய் அவர் அவைகளைப் பராமரித்துவர வேண்டும்.

இரண்டாவது.—23-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படி நீர்க்காலை ஏற்படுத்தும் காரியத்துக்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் நிலத்தை அந்தக் காரியத்திற்காக மாத்திரமே உபயோகிக்கவேண்டும்.

மூன்றாவது.—ஏற்படுத்த உத்தேசிக்கும் நீர்க்காலை ஏற்படுத்திக்கொள்வதற்காக விண்ணப்பதாரருக்கு அனுமதி கொடுக்கப்பட்ட பிறகு ஒரு வருஷகாலத்துக்குள்ளாக ஷை நீர்க்காலை நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தருக்குத் திருப்திகரமாய் ஏற்படுத்தி முடிக்கவேண்டும். ஆனால், நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தருக்கு யுக்தமாகத் தோற்றுகிற பட்சத்திலே, அவர் இந்தக் கால அளவை அதிகப்படுத்திக் கொடுக்கலாம்.

இந்தப் பிரிவினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் திட்டங்களில் எதன்படியாவது நடந்துகொள்ளாவிட்டால், அந்த நீர்க்கால் மூலமாய்த் தண்ணீர் சர்ப்பராசெய்யப் பெறுவதற்காக விண்ணப்பதாரருக்காகிலும் அந்த பாத்தியதை விஷயத்தில் அவருக்குப் பிரதிநிதியாயிருப்பவருக்காகிலும் ஏற்பட்டிருக்கும் சுதந்தரத்தை, 33-வது பிரிவினால் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைச் செலுத்துவதற்கு பாதகமில்லாமலே, நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தர் அற்றுப்போகும்படி செய்யலாம் ; அந்த சுதந்தரம் அற்றுப்போகும்படி செய்யப்பட்டதற்காகப் பிரதிபலன் எதுவும் செலுத்தப்படத்தக்கதாகாது.

பெரிதாக்குவதற்காகவும் மாற்றுவதற்காகவும் செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்கள்.

27. 20 முதல் 26 வரையிலுள்ள பிரிவுகளில் நிபந்தனை கண்டிருக்கிற நடவடிக்கை முறையானது - யாதொரு நீர்க்காலைப் பெரிதாக்குவதற்காகவாவது, சீர்திருத்துவதற்காகவாவது, மாற்றுவதற்காகவாவது செய்துகொள்ளப்படுகிற யாதொரு விண்ணப்பத்துக்குப் பிரயோகப்படும்.

நீர்க்கால்கள் ஏற்படுத்துவதற்காக நிலங்களில் பிரவேசிக்க அதிகாரம்.

28. (1) இது விஷயமாக அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் யாதொரு நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தராவது அந்த நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தருடைய பிரத்தியேகமான உத்தரவுகளின்படி பிரவர்த்திக்கும் யாதொரு நபராவது - தமக்கு அவசியமாகத் தோற்றும் நீர்க்கால்களையும், ஏற்கனவேயிருந்த நீர்க்கால்களும் ஏற்படுத்தபோகும் நீர்க்கால்களினால் தடைப்படும் வடிகாலும் அந்த நீர்க்கால்களுக்குக் குறுக்கே போவதற்காகவும் அவைகளுக்குக் குறுக்கே தகுதியான போக்குவரவு சாதனங்கள் அமைத்துக்கொடுப்பதற்காகவும் அவசியமாயிருக்கும் கட்டுவேலைகளையும் தாமே ஏற்படுத்திக் கொடுக்கலாம், அல்லது ஏற்கனவேயுள்ள யாதொரு நீர்க்காலை அல்லது கட்டுவேலையைப் பெரிதாக்கலாம் அல்லது சீர்திருத்தலாம் அல்லது மாற்றலாம்.

(2) அப்படிப்பட்ட விஷயங்களிலே, அவர் - புதிய நீர்க்கால்களை ஏற்படுத்தவோ, ஏற்கனவே உள்ளவைகளைப் பெரிதாக்கவோ, மாற்றவோ அல்லது சீர்திருத்தவோ ஆரம்பிப்பதற்கு முன்னே, 21 முதல் 24 வரையிலுள்ள பிரிவுகளில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை முறையைக் கூடியமட்டில் அனுசரிக்கவேண்டும்:

ஆனால், நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையுடன் சம்பந்தப்பட்ட யாதொரு கவர்ன்மென்ட் வாய்க்காலை ஏற்படுத்தும்போதாவது, அது நீர்ப்பாய்ச்சலுக்காக உபயோகிக்க ஆரம்பிக்கப்பட்ட பிறகு மூன்று வருஷத்துக்குள்ளாவது அந்த வாய்க்காலிலிருந்து சர்ப்பராசெய்யப்படுகிற அல்லது சர்ப்பராசெய்ய உத்தேசிக்கப்படுகிற யாதொரு நீர்க்காலின் மார்க்கத்தைக் குறிப்பிடுவதற்காகவாகிலும் அந்த நீர்க்காலை ஏற்படுத்துவதற்காகவாகிலும் பெரிதாக்குவதற்காகவாகிலும் மாற்றுவதற்காகவாகிலும் சீர்திருத்துவதற்காகவாகிலும் செய்யப்படும் எந்த ஏற்பாடுகளுக்கும் (2) குறிப்பிட்ட உட்பிரிவு பிரயோகப்படமாட்டாது.

நீர்க்காலின் மார்க்கத்துக்கு ஆட்சேபணை எதுவும் செய்யப்படாமலிருந்தால் எப்படியோ அப்படியே, அப்படிப்பட்ட யாதொரு நீர்க்காலுக்காக வேண்டியிருக்கும் நிலத்தை ஜில்லா கலெக்டர் 23-வது பிரிவில் விதிக்கப்பட்டிருக்கும் மாதிரியாய் எடுத்துக்கொள்ளலாம்.

கவர்ன்மெண்டாரால் நீர்க்கால்கள் ஏற்படுத்தப்படுவதற்காகப் பிடிக்கும் செலவை நிலங்களின் சொந்தக்காரர்கள் அல்லது அனுபோகதாரர்களுக்குள் பங்கிடுசெய்யவேண்டுமென்பது.

29. 28-வது பிரிவின்படி யாதொரு நீர்க்காலை ஏற்படுத்துவதற்காவது பெரிதாக்குவதற்காவது மாற்றுவதற்காவது சீர்திருத்துவதற்காவது பிடிக்கும் செலவையும், இது காரியத்துக்காகச் செலுத்தத்தக்கதாயிருக்கும் அல்லது செலுத்தப்பட்டிருக்கும் யாதொரு பிரதிபலன் தொகையையும், ஷை நீர்க்கால் ஏற்படுத்துவதற்கு முன்னிருந்த நீர்க்கால்களும் அதனால் தடைப்படும் வடிகாலும் அதற்குக் குறுக்கே போவதற்காகவும், அதற்குக் குறுக்கே தகுதியான போக்குவரவு சாதனங்கள் அமைத்துக் கொடுப்பதற்காகவும் அவசியமாயுள்ள கட்டுவேலைகளை ஏற்படுத்துவதற்காகப் பிடிக்கும் செலவையும், அந்த நீர்க்காலிலிருந்து தண்ணீர் சர்ப்பரா செய்யப்பெறும் நிலத்தின் விஸ்தீர்ணத்துக்குத் தக்கபடி அந்த நிலத்தின் சொந்தக்காரர்களிடமிருந்தாவது அனுபோகதாரர்களிடமிருந்தாவது வசூலிக்கும்படி கலெக்டர் உத்தரவு செய்யலாம்.

இந்தப் பிரிவின்படி யாதொரு கலெக்டரால் ஜாரிசெய்யப்படும் எந்த உத்தரவும் ரெவினியு போர்டாரிடத்தில் அப்பீல் செய்துகொள்வதற்கு உட்பட்டதாகும்; அவர்களுடைய தீர்மானம் முடிவானதாகும்.

தற்காலத்திலுள்ள நீர்க்கால் மூலமாய்த் தண்ணீர் சர்ப்பராசெய்யும்படி விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல் அந்தப்படியே சர்ப்பராசெய்வது.

30. தற்காலத்திலிருக்கிற யாதொரு நீர்க்கால் மூலமாய்த் தண்ணீர் சர்ப்பரா செய்யப்பெற இதுவரையில் பாத்தியதையில்லாதிருந்த யாதொரு நபர் அந்தப்படி சர்ப்பரா செய்யப்பெற இஷ்டப்படுகிற பட்சத்திலே, அவர் - நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம். அந்தப்படி சர்ப்பரா செய்வதும் அதை அந்த நீர்க்காலின் வழியாய்க் கொண்டுபோவதும் நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தருக்கு யுக்தமாகத் தோற்றினால், அவர் - அந்த நீர்க்காலிலிருந்து தண்ணீர் சர்ப்பரா செய்யப்படுகிற நிலத்தின் சொந்தக்காரர்களுக்காவது அனுபோகதாரர்களுக்காவது நோடிஸ் சேர்ப்பித்து, அந்த நோடிஸ் சேர்ப்பித்தது முதல் பதினைந்து தினத்துக்குக் குறையாமலுள்ள ஒரு தினத்திலே, ஷை ஜலசர்ப்பராவை அந்தப்படி ஏன் கொண்டுபோகக்கூடாதென்பதற்குக் காரணம் காட்டும்படி, அவர்களை அந்த நோடிஸ் மூலமாய்க் கேட்கவேண்டும்; மேலும், விசாரணை செய்த பிறகு நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தரானவர் - ஷை தண்ணீர் சர்ப்பராவை அந்த நீர்க்கால் வழியாய்க் கொண்டுபோகவேண்டுமா என்பதையும், கொண்டுபோகவேண்டியிருந்தால் என்ன திட்டங்களின்படி கொண்டுபோகவேண்டுமென்பதையும் தீர்மானித்து உத்தரவு பிறப்பிக்கவேண்டும்; அதன்மேல் அந்த உத்தரவானது விண்ணப்பதாரரையும் ஷை சொந்தக்காரர்கள் அல்லது அனுபோகதாரர்களையும் கட்டுப்படுத்தக்கூடியதாகும்.

இந்தப் பிரிவின்படி நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தரால் செய்யப்படும் யாதொரு உத்தரவின்மேல் ஜில்லா கலெக்டருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்; இவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

விண்ணப்பதாரர் நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தரால் விதிக்கப்படும் திட்டங்கள் எவையேனும் இருந்தால் அவைகளின்படி நடந்துகொண்டு, அந்த நீர்க்கால் வழியாய் அவருக்குத் தண்ணீர் சர்ப்பரா செய்யப்படுவதற்கு அவசியமாயிருக்கக்கூடியபடி அந்த நீர்க்காலில் செய்திருக்கும் யாதொரு மாறுதலுக்காகப் பிடித்த செலவை அவர் செலுத்தியாகிறவரையிலே, அவர் - இந்தப் பிரிவின்படி செய்யப்பட்டிருக்கும் யாதொரு உத்தரவு காரணமாக தண்ணீர் சர்ப்பரா செய்யப்பெற அர்ஹராகமாட்டார்.

நீர்க்கால்களில் மாறுதல் செய்யக்கூடாதென்பது.

31. 25, 28, 30-வது பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளின்படி ஏற்படுத்தப்பட்டோ பெரிதாக்கப்பட்டோ அல்லது சீர்திருத்தப்பட்டோ இருக்கும் எந்த நீர்க்காலையும் நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தரின் சம்மதமில்லாமல் மாற்றலாகாது.

யாதொரு நீர்க்காலிலிருந்து தண்ணீர் சர்ப்பரா செய்யப்பெறுகிற நிலத்தின் சொந்தக்காரர்களுக்காவது அனுபோகதாரர்களுக்காவது ஏற்பட்டிருக்கும் கடமைகள்.

32. யாதொரு நீர்க்காலிலிருந்து தண்ணீர் சர்ப்பரா செய்யப்பெறுகிற நிலத்தின் ஓவ்வொரு சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரரும்—

(a) அந்த நீர்க்கால் ஏற்படுத்தும் காலத்திலே உபயோகத்திலிருந்துவரும் யாதொரு ராதாரி பாட்டையும் அல்லது நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையும் அல்லது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையும் அதனால் தடைப்படும் வடிகாலும் அந்த நீர்க்காலுக்குக் குறுக்கே

போவதற்காகவும், அதற்குக் குறுக்கே தகுதியான போக்குவரவு சாதனங்கள் அமைத்துக் கொடுப்பதற்காகவும் அவசியமான சகல கட்டுவேலைகளையும் பராமரித்துவரவும்,

(b) அந்த நீர்க்காலைத் தக்கபடி சரியான ஸ்திதியில் வைத்திருக்கவும்

கடமைப்பட்டவராவார்.

இந்தப்படி செய்யத் தவறுகிற பட்சத்திலே, ஷை நீர்க்கால் மூலமாய்த் தண்ணீர் சர்ப்பரா செய்யப்பெறுவதற்கான பாத்தியதையை, நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தர் - 33-வது பிரிவினால் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைச் செலுத்துவதற்கு பாதகம் இல்லாமலே, அற்றுப்போகும்படி செய்யலாம்; மேலும், அந்த பாத்தியதை அற்றுப்போகும்படி செய்யப்பட்டதற்காகப் பிரதிபலன் எதுவும் செலுத்தப்படத்தக்கதாகாது.

33. 25-வது 26-வது அல்லது 32-வது பிரிவினால் விதிக்கப்பட்டிருக்கும் திட்டங்கள் அல்லது கடமைகளில் எதுவாவது நிறைவேற்றப்படாமற்போனால், இது விஷயமாய்க் கிரமமாக அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் யாதொரு நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தர் - அந்தப்படி நிறைவேற்றத் தவறிப்போனவருக்கு எழுத்துமூலமாய் நோடிஸ் கொடுத்து, பதினைந்து தினத்துக்குக் குறையாமல் அந்த நோடிஸில் நிர்ணயிக்கப்படும் ஒரு கால அளவுக்குள்ளாக அவசியமான வேலையையாகிலும் மராமத்தையாகிலும் செய்துமுடிக்கும்படி அவருக்கு அந்த நோடிஸ் மூலமாக உத்தரவு செய்யலாம்; அவர் அந்தப்படி செய்யத் தவறுகிற பட்சத்திலே, ஷை உத்தியோகஸ்தரே அவருக்காக அதைச் செய்துமுடிக்கலாம்; மேலும், அந்த வேலை அல்லது மராமத்து செய்வதற்காகப் பிடிக்கும் சகல செலவுகளும் - அதைச் செய்யத் தவறிப்போனவரிடமிருந்து வசூல் செய்யப்படத்தக்கவைகளாகும். பல பேர் இந்தப்படி செய்யத் தவறிப்போயிருந்தால், பிரஸ்தாப நீர்க்காலின்கீழ் அவர்களில் ஒவ்வொருவருடைய கைப்பற்றிலும் இருக்கும் நில விஸ்தீர்ணத்துக்குத் தக்கபடி ஷை செலவுகளை வசூல் செய்யவேண்டும்.

5-ம் அத்தியாயம்.

தண்ணீர் வரியைக் குறித்து.

34. யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையிலிருந்தாவது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையிலிருந்தாவது எந்த நிலத்துக்குத் தண்ணீர் பாய்ச்சப்படுகிறதோ அல்லது எந்த நிலத்தில் பாய்ச்சுவதற்காகத் தண்ணீர் உபயோகிக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட நிலத்துக்கெல்லாம் கவர்ன்மென்டார் (தண்ணீர்) வரி விதித்துவாங்குவது சட்டசம்மதமாகும்.

யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையிலுள்ள அல்லது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையிலுள்ள தண்ணீரானது அடுத்த நிலத்திலிருந்தாகிலும் அதன்மூலமாகவாகிலும் நேராகவோ அல்லது நேராகவல்லாமல் மற்றப்படியோ போவதனாலாயினும் கசிவதனாலாயினும் ஒழுகுவதனாலாயினும் வடிவதனாலாயினும் சாகுபடியாயிருக்கிற யாதொரு நிலத்துக்குப் பாய்ந்தாலும், அல்லது ஒரு நீர்நிலை அல்லது வாய்க்காலுக்குள் ஷை தண்ணீர் பாய்ந்து அதன்பிறகு அப்படிப்பட்ட நிலத்தின் பாய்ச்சலுக்கு உபயோகிக்கப்பட்டாலும், அந்த நிலத்திலுள்ள பயிருக்கு அது பிரயோஜனகரமாயிருக்குமென்று கலெக்டர் அபிப்பிராயப்படுகிற பட்சத்திலே, ஷை தண்ணீரானது நீர்ப்பாய்ச்சல் காரியங்களுக்கு உபயோகிக்கப்படுவதாக எண்ணப்படும்.

ஆனால்,—

(a) கவர்ன்மென்ட் நிலமானது ஒருபோக நஞ்சை நிலமென்று ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்து அதில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நஞ்சைப் பயிர் சாகுபடி செய்யப்பட்டாலன்றி மற்றப்படி, அப்படிப்பட்ட நிலத்துக்கும்,

(b) எத்தனை போகங்களுக்கு (தண்ணீர்) வரி செலுத்தாமலே தண்ணீர் சர்ப்பரா செய்யப்பெற பாத்தியதை உண்டென்று கவர்ன்மென்டாரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதோ அதைவிட அதிகமான போகங்களுக்கு தண்ணீர் சர்ப்பரா செய்யப்பட்டால் அல்லது உபயோகிக்கப்பட்டாலொழிய மாமூல் நஞ்சை நிலத்துக்கும்,

அப்படிப்பட்ட வரி விதித்து வாங்கப்படமாட்டாது.

இந்த விலக்கு நிபந்தனையில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, இதுவிஷயமாய்ச் செய்யப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டு, பிரதேச கவர்ன்மென்டார் - ரெவினியு கணக்குகளில் நஞ்சையாகத் தரம் பிரித்து ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் கவர்ன்மென்ட் நிலத்துக்கு உயர்த்தப்பட்ட தீர்வையையும், மாமூல் நஞ்சை நிலத்துக்குத் தண்ணீர் வரியையும், கவர்ன்மென்டாரால் தண்ணீர் சர்ப்பரா அதிகமாக்கப்படும்போதெல்லாம் அல்லது மற்றப்படி விருத்தி செய்யப்படும்போதெல்லாம் விதித்து வாங்கலாம்.

கவர்ன்மென்டார் - இன்ன விதிகளுக்குட்பட்டும் இன்ன வீதங்களின்படியும் இந்தப் பிரிவின் பிரகாரம் (தண்ணீர்) வரி விதிக்கவேண்டுமென்று அப்போதைக்கப்போது நிர்ணயிக்கலாம்; மேலும், வெவ்வேறான நீர்ப்பாய்ச்சல் அல்லது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலைகளுக்காவது வெவ்வேறான விஸ்தீர்ணங்களுக்காவது வெவ்வேறு வீதங்கள் நிர்ணயிக்கப்படலாம்.

இந்தப் பிரிவின்படி சேரவேண்டிய (தண்ணீர்) வரியானது - எந்த வருஷத்தில் நீர் பாய்ச்சப்படுகிறதோ அதற்கு அடுத்த ரெவினியு வருஷ முடிவுக்குள்ளாக எப்போதாகிலும் விதித்து வாங்கத்தக்கதாகும்; மேலும், ரெவினியு வருஷமென்பது - ஜூன்மீ 30உ யோடாகிலும் பிரதேச கவர்ன்மெண்டாரால் நிர்ணயிக்கப்படக்கூடிய வேறே யாதொரு தேதியோடாகிலும் முடியும் வருஷமாகும்.

நிலத்துக்குடையவரிடமிருந்தாவது ரயத்தினிடமிருந்தாவது இருவரிடமும் இருந்தாவது தண்ணீர் வரி வசூல் செய்யத்தக்கதாகுமென்பது.

35. (1) யாதொரு பூஸ்திதியில் அடங்கியிருக்கிற நிலத்தின் விஷயத்திலே, இந்த ஆக்டின்படி சேரவேண்டிய (தண்ணீர்) வரியானது - 1864-ம்௵த்திய சென்னபட்டணத்து ஸர்க்கார் தீர்வை பாக்கி வசூல் ஆக்டில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, இது விஷயமாய் கவர்ன்மெண்டார் முன்னதாகப் பிரசுரஞ்செய்து நிர்ணயிக்கக்கூடிய விதிகளின்படி—

(a) நிலத்துக்குடையவரிடமிருந்தாவது,

(b) ரயத்தினிடமிருந்தாவது,

(c) சிறிதுமட்டில் ஒருவரிடமும் சிறிதுமட்டில் மற்றவரிடமுமிருந்தாவது

விதித்து வசூல்செய்ய தக்கதாகும்.

(2) இந்த ஆக்டினபடி யாதொரு நிலத்துக்குடையவராலாகிலும் ரயத்தாலாகிலும் செலுத்தப்படத்தக்க தொகையானது - அவருக்கு அந்த நிலத்திலுள்ள பாத்தியதையின் மேல் ஏற்படும் முதல் பொறுப்பாகும்.

(3) தண்ணீர் வரி செலுத்துவது விஷயமாய் வெளிப்படையாகவோ மறைபொருளாகவோ நிலத்துக்குடையவர், ரயத்து ஆகிய இவர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் யாதொரு ஒப்பந்தத்தின்படி அவர்களுக்குள்ள பாத்தியதைகளுக்கும் பொறுப்புகளுக்கும் இந்தப் பிரிவில் கண்டதெதனாலும் பாதகம் உண்டாகமாட்டாது.

36. இந்த ஆக்டின்படி விதிக்கப்படும் தண்ணீர் வரி வீதத்தைக் குறித்து ஆட்சேபித்து யாதொரு வியாஜ்ஜியமாவது விண்ணப்பமாவது செய்துகொள்ளப்பட்டால அதை எந்த ஸிவில் கோர்ட்டாரும் பிடித்து விசாரிக்கக்கூடாது.

6-ம் அத்தியாயம்.

விசேஷ ஷரத்துகளின்படி நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைகளை ஏற்படுத்துவதைக் குறித்தும் பாமரித்துவருவதைக் குறித்தும்.

கவர்ன்மெண்டார் செய்யும் ஆரம்ப உத்தரவு.

37. யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தில் ஒரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையினால் நீர் பாய்ச்சக்கூடிய நிலங்களுக்கு குறித்த யாதொரு வீதப்படி தண்ணீர் வரி செலுத்தப்படுவதாக உறுதி செய்யப்பட்டாலன்றி மற்றப்படி, அந்த நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையை ஏற்படுத்துவதாவது சீர்திருத்துவதாவது பராமரித்துவருவதாவது வெகுசாய்ப் பிரதிபலன் தரக்கூடியதாயிராதென்று பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் தோற்றும்போதெல்லாம், அவர்கள் - அந்தக் கட்டுவேலையை ஏற்படுத்தும் வேலையையாகிலும் சீர்திருத்தும் வேலையையாகிலும் பராமரித்துவரும் வேலையையாகிலும் ஏற்றுக்கொள்ளுவது உசிதமாயிருக்குமா என்பதைக் குறித்து விசாரணை செய்யும்படி கலெக்டருக்காயினும் வேறே யாதொரு நபருக்காயினும் கட்டளையிடலாம்.

விசாரணை செய்வதைக் குறித்த நோடிஸைப் பிரசித்தஞ் செய்வது.

38. கலெக்டராகிலும் விசாரணை செய்ய நியமிக்கப்பட்டிருக்கும் வேறே நபராகிலும் - விசாரணை செய்யப்படும் இடத்தையும (பிரசித்தம் செய்யப்படும் தேதிக்குப்பிறகு முப்பது தினங்களுக்கு உட்பட்டதாயிராத) தேதியையும் குறிப்பிட்டு இதற்குச் சம்பந்தப்பட்ட கிராமம் அல்லது கிராமங்களில் நோடிஸ் பிரசித்தம் செய்ய வேண்டும். ஏற்படுத்தவோ, சீர்திருத்தவோ அல்லது பாராமரிக்கவோ உத்தேசிக்கும் கட்டுவேலையின் பொதுவான ஏற்பாடு ஒன்றையும், அதற்காகப் பிடிக்கும் மூலதனச்செலவுக்கு அல்லது நிர்ணய காலத்துக்கு ஒருமுறை பிடிக்கும் செலவுக்கு ஒரு உத்தேச மதிப்பையும், இந்த திட்டத்தினுல் பிரயோஜனமடையும் (இதில் பின்னுல் பிரயோஜனம் அடையும் விஸ்தீர்ணம் என்று சொல்லப்படும்) விஸ்தீர்ணத்தையும், பிரயோஜனமடையும் விஸ்தீர்ணத்துக்குள்ளிருக்கும் நிலத்தின் விஷயமாய்த் தண்ணீர் வரி விதிக்க உத்தேசிக்கப்படும் வீதத்தையும் ஷை நோடிஸில் கண்டெழுதவேண்டியதுமல்லாமல், ஷை நோடிஸில் நிர்ணயிக்கப்படும் தேதியன்றைக்காவது அதற்கு முன்னுவது தாங்கள் தெரிவித்துக்கொள்ள விரும்பும் எவையேனும் ஆட்சேபனைகளையும அல்லது அபிப்பிராயங்களையும் தெரிவித்துக்கொள்ளும்படியும், அப்படிப்பட்ட ஆட்சேபனைகள் அல்லது அபிப்பிராயங்களுக்கு ஆதாரமாக விசாரணை நடத்த ஏற்படுத்தப்படும் தேதியன்றைக்கு சாட்சியம் ஏதாவது இருந்தால் அதை ஹாஜர் செய்யும்படியும் அந்த நிலத்தின் கைப்பற்றுதாரர்களை ஷை நோடிஸ் மூலமாய்க் கேட்டுக் கொள்ளவும்வேண்டும்.

விவரணம்.—இந்த அத்தியாயத்திலே, 'நிலத்தின் கைப்பற்றுதாரர்கள்' என்னும் சொற்றொடரானது - (1) ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் கைப்பற்றுதாரர்களென்றும், (2) ரயத்துகளென்றும், (3) பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம் ஹூ ஸ்த்து ஆக்டில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடி சொந்த நிலமாயிருக்கும் நிலத்தின் விஷயத்திலே எந்த பூஸ்திதியில் அந்த நிலம் இருக்கிறதோ அந்த பூஸ்திதியின் நிலத்துக்குடையவரென்றும் அர்த்தமாகும்.

சொந்தக்காரர் சம்மதித்திருப்பதாக ஊகிப்பது.

39. பிரயோஜனமடையும் விஸ்தீர்ணத்துக்குள்ளிருக்கும் நிலத்தின் கைப்பற்றுதாரர் நிர்ணயிக்கப்பட்ட விதமாய் நோடிஸில் கொடுக்கப்பட்ட கால அளவுக்குள் யாதொரு ஆட்சேபணையையோ யாதொரு அபிப்பிராயத்தையோ தெரிவித்துக்கொள்ளத் தவறிப்போனால், அப்படிப்பட்ட ஒவ்வொருவரும் மேலே உத்தேசிக்கப்பட்ட திட்டத்துக்குத் தம்முடைய சம்மதத்தைக் கொடுத்திருப்பதாக பாவிக்கப்படுவார்.

கலெக்டர் விசாரணை பண்ணி ரிபோர்ட் செய்வது.

40. கலெக்டராவது விசாரணை நடத்த நியமிக்கப்பட்டிருக்கும் வேறே நபராவது கிரமமாய்த் தெரிவித்துக்கொள்ளப்பட்ட எவையேனும் ஆட்சேபணைகள் அல்லது அபிப்பிராயங்களைக் குறித்தும் ஹாஜா செய்யப்பட்ட ஏதேனும் சாட்சியத்தைக் குறித்தும் யோசனை செய்து தமக்கு அவசியமாகத் தோற்றும் பின்னும் சாட்சியம் வாங்கின பிறகு, பிரயோஜனமடையும் விஸ்தீர்ணத்துக்குள் இருக்கும் நிலத்தில் குறைந்தது மூன்றில் இரண்டு பாகத்தின் கைப்பற்றுதாரர்கள் ஷை கட்டுவேலையை ஏற்படுத்துவதற்கும், சீர்திருத்துவதற்கும் அல்லது பராமரித்துவருவதற்கும், பிரேரேபிக்கப்பட்ட தண்ணீர் வரியைச் செலுத்துவதற்கும் சம்மதிப்பதாக அபிப்பிராயப்பட்டால், அவர் - தாம் நடத்தின நடவடிக்கைகளைக் குறித்து ஒரு ரிபோர்ட் எழுதி அதைப் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு அனுப்பவேண்டியதுமல்லாமல், தம்மிடத்தில் தெரிவித்துக் கொள்ளப்பட்ட ஆட்சேபணைகளையும் அபிப்பிராயங்களையும் குறித்த ஒரு ஸ்டேட்மெண்டையும் அவைகள் விஷயமாய் தாம் தெரிவிக்க விரும்பும் எவையேனும் குறிப்புகள் சகிதமாக அனுப்பவும்வேண்டும்.

கவர்ன்மெண்டார் ஷை ஏற்பாட்டை விட்டுவிடலாம் அல்லது அதன்படி வேலை நடத்திக்கொண்டு போகலாமென்பது.

41. முந்திய பிரிவில குறிப்பிடப்பட்ட ரிபோர்ட்டை வரப்பெற்றுக்கொள்ளுவதன் மேல், பிரதேச கவர்ன்மெண்டார் - இன்னும் செய்வது அவசியமென்று தங்களுக்குத் தோற்றக்கூடிய விசாரணை ஏதாகிலும் இருந்தால் அதைச் செய்த பிறகு, பிரஸ்தாப ஏற்பாட்டை விட்டுவிடலாம், அல்லது அது ஆதியில் தயாரிக்கப்பட்டபடியாவது அதில் தங்களுக்கு அவசியமாகத் தோற்றும் திருத்தங்களைச் செய்தாவது அதன்படி வேலை நடத்திக்கொண்டுபோகலாம்; ஆனால், பிரயோஜனமடையும் விஸ்தீர்ணமாகிலும் விதிக்கப்படவேண்டிய தண்ணீர் வரியாகிலும் அந்தத் திருத்தங்கள் செய்வது காரணமாக முக்கியாம்சத்தில் அதிகரிக்கிறபட்சத்திலே, 38 முதல 40 வரையிலுள்ள பிரிவுகளில் கண்ட நிபந்தனைகள் மேலே கண்டபடி மாற்றப்பட்ட ஏற்பாட்டுக்குப் பிரயோகப்படும்.

கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டபடி ஏற்பாட்டைப் பிரசுரிப்பது.

42. (1) பிரதேச கவர்ன்மெண்டாரால் முடிவாய் அங்கீகரிக்கப்பட்டபடி ஷை ஏற்பாட்டை, சம்பந்தப்பட்ட ஜில்லாவின் ஸர்க்கார் கெஜெட்டில் பிரசுரிக்கவேண்டும்; மேலும், அதில் பின்வரும் விவரங்கள் கண்டிருக்கவேண்டும்:—

(a) எந்தக் கட்டுவேலையை ஏற்படுத்தவாவது சீர்திருத்தவாவது பராமரித்துவரவாவது உத்தேசிக்கப்படுகிறதோ அந்தக் கட்டுவேலையின் விவரக்குறிப்பும், அதற்காகப் பிடிக்கும் மூலதனச் செலவின் அல்லது நிர்ணயகாலத்துக்கு ஒருதரம் பிடிக்கும் செலவின் உத்தேச மதிப்பும்;

(b) பிரஸ்தாப வேலை பூர்த்தியாவதற்கு உத்தேசமாய் இவ்வளவு காலம் பிடிக்குமென்பது;

(c) பிரயோஜனமடையும் விஸ்தீர்ணத்தின் விவரம்;

(d) பிரயோஜனமடையும் விஸ்தீர்ணத்திலுள்ள நிலத்தில் தண்ணீர் வரி விதிக்கப்படும் வீதம்; இந்த வீதமானது பத்துவருஷத்துக்குக் குறையாத கால அளவுக்கு ஒரு முறையாகத் திருத்தப்படுவதற்கு உட்பட்டதாகும்;

(e) இந்த அத்தியாயத்தில் நிபந்தனை கண்டிருக்கிறபடி, அந்த நிலத்தின் கைப்பற்றுதாரர்களுடைய சம்மதம் பெறப்பட்டிருக்கிறதென்னும் விஷயம்.

(2) அங்கீகரிக்கப்பட்ட பிரகாரம் யாதொரு ஏற்பாடானது (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிரசுரிக்கப்பட்டிருப்பதே - அதில் பதியப்பட்டிருக்கும் யாதொரு சம்மதம் கிரமமாய்ப் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதென்பதற்கும், அந்த ஏற்பாட்டினால் அதில் குறிபிட்டிருக்கும் விஸ்தீர்ணம் பிரயோஜனம் அடையும் என்பதற்கும் முடிவான சாட்சியமாகும்.

அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாட்டைத் திருத்துவது அல்லது அதற்கு பர்த்தியாக யாதொரு புதிய ஏற்பாட்டை அமைத்துக் கொள்வது.

43. (1) பிரதேச கவர்ன்மெண்டார் - அங்கீகரிக்கப்பட்டு 42-வது பிரிவின்படி பிரசித்தஞ் செய்யப்பட்டிருக்கும் யாதொரு ஏற்பாட்டை அப்போதைக்கப்போது திருத்தலாம், அல்லது அதற்கு பர்த்தியாக வேறொரு ஏற்பாட்டை அமைத்துக்கொள்ளலாம்; அதன்பிறகு, 42-வது பிரிவின்படி பிரசித்தம் செய்யப்பட்ட யாதொரு ஏற்பாட்டுக்குப் பிரயோகப்படக்கூடிய இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகள் - மேலேகண்டபடி திருத்தப்பட்ட அல்லது பர்த்தியாய் அமைத்துக்கொள்ளப்பட்ட யாதொரு ஏற்பாட்டுக்குப் பிரயோகப்படக்கூடியவையாகும்.

(2) ஆனால், யாதொரு ஏற்பாட்டின் விஷயமாக இந்த ஆக்டின்படி யாதொரு சம்மதம் பெறவேண்டியிருப்பதோ, பிரசுரிக்கவேண்டியிருப்பதோ அல்லது வேறே யாதொரு காரியம் செய்யவேண்டியிருப்பதோ - யாதொரு ஏற்பாட்டைத் திருத்தும் விஷயத்திலும் அல்லது இப்போது இருக்கும் ஏற்பாட்டுக்கு பர்த்தியாக யாதொரு புதிய ஏற்பாட்டை அமைத்துக்கொள்ளும் விஷயத்திலுங்கூட அவசியமாகும்.

பிரயோஜனடையும் விஸ்தீர்ணத்துக்குள் இருக்கும் நிலங்களுக்குத் தண்ணீர் வரி விதித்து வசூல்செய்வது.

44. பிரஸ்தாப ஏற்பாடு நிறைவேற்றப்பட்ட பிறகு, கலெக்டரானவர் - ரெவினியு போர்டாரின் மேல்விசாரணைக்கும் பிரதேச கவர்ன்மெண்டாரின் மேல்விசாரணைக்கும் உட்பட்டும், பிரதேச கவர்ன்மெண்டாரால் நிர்ணயிக்கப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டும், 42-வது பிரிவில் நிர்ணயிக்கப்பட்ட வீதப்படி தண்ணீர் வரியை, பிரயோஜனமடையும் விஸ்தீர்ணத்துக்குள் இருக்கும் நிலத்தின் கைப்பற்றுதாரர்களிடமிருந்து வசூல் செய்யலாம்:

ஆனால், கலெக்டரானவர் - பிரயோஜனமடையும் விஸ்தீர்ணத்திலுள்ள யாதொரு நிலமானது நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையினால் எவ்வித பிரயோஜனமும் அடைய முடியாதென்னும் காரணத்தினாலே, அந்த நிலத்தை வரிசெலுத்துதவனின்றும் நிவாரணைசெய்யலாம்.

சாதாரண கோர்ட்டுகளின் விசாரணை அதிகாரத்தை விலக்குவது.

45. யாதொரு ஸிவில் கோர்ட்டில் தண்ணீர் வரி வீதத்தின் விஷயமாக ஆட்சேபனை செய்யவுங்கூடாது, அந்த வரி செலுத்த யாதொரு நபருக்குள்ள பொறுப்பு விஷயமாக ஷை கோர்ட்டில் ஆட்சேபிக்கவுங்கூடாது:

ஆனால், யாதொரு நபர் எந்த நிலத்தின் விஷயமாக தண்ணீர் வரி விதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த நிலத்தின் கைப்பற்றுதாரராயிராதது காரணமாக அப்படிப்பட்ட வரியைச் செலுத்த தாம் உட்பட்டவரல்லவென்று ஸிவில் கோர்ட்டில் நிர்ணய உத்தரவு பெறுவதற்கு இந்தப் பிரிவிற்கண்ட தெதனாலும் தடை உண்டாகமாட்டாது; கலெக்டர் அந்த நிர்ணய உத்தரவின்படி நடந்துகொள்ளக் கடமைப்பட்டவராவார்.

7-ம் அத்தியாயம்.

மாமூல் நஞ்சை நிலங்களை நிர்ணயிப்பதைக்குறித்தும் அவைகளின் ஸ்தானத்தை நிஷ்கரிஷை செய்வதைக்குறித்தும்.

மாமூல் நஞ்சை நிலத்தை நிர்ணயிப்பது.

46. (1) சந்தர்ப்பத்துக்கேற்றபடி நிலையான பைசலேற்பாடு அல்லது இனம் பைசலேற்பாடு செய்யப்பட்ட தேதிக்கும்,

(a) 4-வது பிரிவைச் சேர்ந்த (6) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (d) அடையாளமிட்ட பகுதியின்கீழ் வரும் யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையின் விஷயத்திலே, 7-வது பிரிவின்படி விளம்பரம் பிறப்பிக்கப்பட்ட தேதிக்கும்,

(b) வேறே யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையின் விஷயத்திலே, இந்த ஆக்ட் ஜாரிசெய்யப்பட்ட தேதிக்கும்,

மத்தியில் யாதொரு வருஷத்திலே தண்ணீருக்காகப் பிரத்தியேகமான வரி செலுத்த வேண்டியிராமல் யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையிலிருந்து நீர் பாய்ச்சப்படும் மிகப் பெரிய விஸ்தீர்ணமே ஷை கட்டுவேலையின் கீழுள்ள மாமூல் நஞ்சை நிலத்தின் விஸ்தீர்ணமாகும்.

(2) கலெக்டரானவர் - ரெவினியு போர்டாருடைய மேல்விசாரணைக்கும் கவர்ன்மெண்டாருடைய மேல்விசாரணைக்கும் உட்பட்டு மாமூல் நஞ்சை நிலத்தின் விஸ்தீர்ணத்தை நிஷ்கரிஷை செய்யவேண்டும். இந்தப்படி நிஷ்கரிஷை செய்ததை நிலத்துக்குடையவர் ஒப்புக்கொள்ளாவிட்டால், கலெக்டர் பிரஸ்தாப விஷயத்தை ஸிவில் கோர்ட்டின் தீர்மானத்துக்கு அனுப்பவேண்டும்.

(3) 1917-ம்ஹூ மேமீ 1உக்கு முன்னே யாதொரு மாமூல் நஞ்சை நிஷ்கரிஷை செய்யப்பட்டிருந்து அதன் விஷயமாய்ச் செய்யப்பட்ட எந்த வியாஜ்ஜியமாவது அப்பீ

லாவது அந்தத் தேதியில் பைசலாகாமல் இராதபட்சத்திலே, அந்தப்படி நிஷ்கரிஷை செய்யப்பட்டிருப்பதற்கு இந்தப் பிரிவில் கண்டதெதனுலும் பாதகம் உண்டாவதாக எண்ணக்கூடாது. பிற்பாடு ஸிவில் கோர்ட்டில் யாதொரு டிக்ரி பெற்றிருந்தும் பாதகமில்லாமலே, மேலே கண்டபடி நிஷகரிஷைசெய்தது முடிவானதாகும்.

மாமூல் நஞ்சை நிலத்தின் ஸ்தானத்தை நிஷ்கரிஷை செய்வது.

47. (1) இது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாரால் செய்யப்படும் விதிகளை அனுசரித்து மாமூல் நஞ்சை நிலத்தின் ஸ்தானத்தை நிஷ்கரிஷை செய்யலாம்; மேலும், இந்த ஆக்ட் ஜாரியாவதற்கு முன்னே அந்தப்படி எப்போதாகிலும் நிஷ்கரிஷை செய்யப்பட்டால், அது - இந்த ஆக்டின்படி செய்யப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே செலாவணியாகும்.

(2) இந்த ஆக்ட் ஜாரியாவதற்கு முன்பாவது ஜாரியான பிறகாவது மேலேகண்டபடி நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கும் யாதொரு விஷயத்தை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட வியாஜ்ஜியம் எதையும் எந்த ஸிவில் கோர்ட்டாரும் பிடித்து விசாரிக்கக்கூடாது.

8-ம அத்தியாயம்.

பிரதிபலன் தீர்மானிப்பதைக்குறித்து.

உள்ளபடியான சேதத்துக்குப் பிரதிபலன் கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கத்தக்கதாகுமென்பது.

48. இந்த ஆக்டில் வேறே விதமாய் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படிக்கும், இதில் பின்னுல் கண்டிருக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டும், இந்த ஆக்டினுல் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துவதனுல் உண்டுபண்ணப்பட்ட சேதத்துக்காகப் பிரதிபலன் தீர்மானிக்கப்படும்:

விலக்கு. ஆனால்,—

(1) யாதொரு சேதத்துக்காகப் பிரதிபலன் கொடுக்கவேண்டுமென்று இந்த ஆக்டினுல் கொடுக்கப்பட்ட யாதொரு அதிகாரத்தைச் செலுத்தும் தேதியிலிருந்து ஒரு வருஷகாலம் கழிந்தபிறகு தாவா செய்யப்படுகிறபட்சத்திலே, அந்த ஒரு வருஷ காலத்துக்குள்ளாக தாவா செய்யாததற்கு தாவாதாரருக்குப் போதுமான காரணம் இருந்ததாகக் கலெக்டர் தெரிந்து திருப்தியடைந்தாலன்றி மற்றப்படி, அப்படிப்பட்ட தாவா எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(2) அடியிற்கண்ட காரணங்களினுல் உண்டாகும் யாதொரு நஷ்டம் அல்லது சேதத்துக்காகப் பிரதிபலன் தீர்மானிக்கப்படமாட்டாது:—

(a) யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையிலிருந்து இந்த ஆக்ட் ஜாரிசெய்யப்பட்ட பிறகு முதல் தரம் தண்ணீர் சர்ப்பரா செய்யப்பட்டிருந்தால் அல்லது கிடைத்திருந்தால், அந்தத் தண்ணீர் சர்ப்பராவை நிறுத்துவது அல்லது குறைப்பது;

(b) யாதொரு கவர்ன்மெண்ட் நிலத்துக்குத் தண்ணீர் சர்ப்பரா நிறுத்தப்படுவதற்கு அல்லது குறைக்கப்படுவதற்கு அடுத்து முந்திய ஐந்து வருஷகாலத்துக்குள் எப்போதாவது நீர்பாய்ச்சப்படாமலிருந்து, அந்த நிலமானது ஸர்க்கார் கணக்குகளில் நஞ்சையென்று ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறபட்சத்திலே அப்படிப்பட்ட யாதொரு நிலத்துக்காவது, ஸர்க்கார் கணக்குகளில் புஞ்சையாக ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் யாதொரு நிலத்துக்காவது, ஸர்க்கார் கணக்குகள் வைக்கப்பட்டிராத விஷயத்திலே, தண்ணீர் சர்ப்பரா நிறுத்தப்படுவதற்கு அல்லது குறைக்கப்படுவதற்கு அடுத்து முந்திய பத்து வருஷகாலமாகக் கிரமமாய் நீர் பாய்ச்சப்பட்டிராத யாதொரு நிலத்துக்காவது நீர் பாய்ச்சுவதற்காக வேண்டிய தண்ணீர் சர்ப்பராவை நிறுத்துவது அல்லது குறைப்பது;

(c) கவர்ன்மெண்டாரால் தவிர்க்கப்படமுடியாத சந்தர்ப்பங்கள் காரணமாகவாவது, யாதொரு நீர்பாய்ச்சல் கட்டுவேலையையாகிலும் தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையையாகிலும் மராமத்து செய்யவோ அல்லது உபயோகப்படும்படி செய்யவோ தவறிப்போய்விட்டது காரணமாகவாவது தண்ணீர் சர்ப்பரா நின்றுபோவது, குறைந்துபோவது அல்லது அதிகப்படுவது;

(d) யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையிலாகிலும் தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையிலாகிலும் மராமத்துக்கள் செய்வதற்கு அவசியமான கால அளவுக்குத் தண்ணீர் சர்ப்பராவை நிறுத்துவது, குறைப்பது அல்லது அதிகப்படுத்துவது;

(e) கிரமமாய் நோடிஸ் கொடுத்துப் பிரதேச கவர்ன்மெண்டாரால் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கப்படும் கால அளவுகளுக்குள்ளே தண்ணீர் சர்ப்பராவைச் சிறிது காலத்துக்கு நிறுத்துவது அல்லது குறைப்பது;

(f) நீர்ப்பாய்ச்சலுக்காகத் தண்ணீரைப் பெற பாத்தியதையுள்ள நபர்களுக்கு நியாயமாய் வேண்டிய அளவுக்கு வரிசைக்கிரமப்படி சர்ப்பரா செய்யவேண்டியிருக்கிற போதும் அந்தப்படி செய்வது அவசியமாயிருக்கிறவரையிலும், தண்ணீர் சர்ப்பராவை நிறுத்துவது, குறைப்பது அல்லது அதிகப்படுத்துவது;

(g) யாதொரு நீர்க்காலிலிருந்து தண்ணீர் வீணாய்ப்போய்விடாதபடி தடுக்கும்படியாகத் தக்கபடி மாமூல் மராமத்துசெய்து பராமரிக்கப்பட்டுவராத அந்த நீர்க்காலுக்குத் தண்ணீர் சர்ப்பராவை நிறுத்துவது அல்லது குறைப்பது ;

(h) வெள்ளத்தில் வரும் தண்ணீரையாகிலும், ஓடையாய்ப்பாயாமலும் குட்டை குளங்களிலாவது மற்றப்படியாவது சாசுவதமாய்ச் சேர்ந்திராமலும் இருக்கிற மேல்நீர் சர்ப்பராவையாகிலும், வரையறை ஏற்படுத்தியுள்ள வாய்க்காலாய்ப் போகாத பூமிக்குக் கீழுள்ள தண்ணீரையாகிலும் நிறுத்துவது அல்லது குறைபபது ;

(i) மரக்கலம் செலுத்துவதையாவது, வெட்டுமரத்தை மிதக்கவிடுவதற்கான அல்லது கால்நடைகளுக்குத் தண்ணீர் காட்டுவதற்கான வழிவகைகளையாவது நிறுத்திவிடுவது ;

(j) வண்டல் இல்லாமற்படி செய்துவிடுவது, அல்லது (நிலத்தை) வளமாக்குவதற்காகத் தண்ணீருக்குள்ள குணத்தைக் குறைப்பது.

சேதப்படுத்தப்பட்ட சொத்துக்காகப் பிரதிபலன்.

49. 13, 14, 15, 16 அல்லது 28-வது பிரிவின்படி பிரவேசிக்கும் ஒவ்வொரு விஷயத்திலும், அந்தப்படி பிரவேசிக்கும் நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தராவது வேறே நபராவது-அந்தப்படி பிரவேசித்ததனாலாகிலும் மேலேகண்ட பிரிவுகளின்படி செய்யப்பட்ட யாதொரு காரியத்தினாலாகிலும் சேதம் ஏதாகிலும் நேரிட்டால், அது இவ்வளவென்று கண்டறிந்து எழுதிவைக்கவேண்டும் ; அந்தப்படி பிரவேசித்த தேதிமுதல் ஒருமாத காலத்துக்குள்ளாக, நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தரானவர் - நிலத்துக்குடையவருக்காவது சேதப்படுத்தப்பட்ட சொத்தின் சொந்தக்காரருக்காவது பிரதிபலன் கொடுப்பதாகச் சொல்லவேண்டும். சேதம் இவ்வளவென்பதைக் குறித்தாகிலும் கொடுப்பதாகச் சொல்லப்பட்ட தொகை போதுமானதா என்பதைக் குறித்தாகிலும் விவாதம் உண்டானால், அவர் அந்த விவாதவிஷயத்தை உடனே கலெக்டருடைய தீர்மானத்துக்கு அனுப்ப வேண்டும்.

கலெக்டரானவர் விவாதத்திலுள்ள விஷயங்களைக் குறித்து விசாரணை பண்ணி, பிரதிபலன் தொகை இவ்வளவென்று தீர்மானிக்கவேண்டும்.

கலெக்டருடைய தீர்மானத்தின் தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குள்ளாக அந்தத் தீர்மானத்தின்மேல் ஜில்லா கலெக்டருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம். ஜில்லா கலெக்டர் செய்யும் உத்தரவு முடிவானதாகும்.

பிரதிபலனுக்காகச் செய்யும் தாவாக்களைக் கலெக்டரிடத்தில் செய்துகொள்ளவேண்டுமென்பது.

50. 49-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும், வேறே விதமாய் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படிக்கும், இந்த ஆக்டினால் கொடுக்கப்பட்ட அதிகாரங்களில் எதையாவது செலுத்துவது காரணமாய் நேரிட்ட யாதொரு சேதத்துக்காக பிரதிபலன் வேண்டுமென்று செய்துகொள்ளும் சகல தாவாக்களையும், எந்த நிலத்தின் விஷயமாகப் பிரதிபலன் வேண்டுமென்று தாவா செய்யப்படுகிறதோ அந்த நிலம் இருக்கும் பிரதேச விஸ்தீர்ணத்தில் விசாரணை அதிகாரமுடைய கலெக்டரிடத்திலே செய்துகொள்ளவேண்டும்.

பிரதிபலன் தொகை இவ்வளவென்று கலெக்டர் நிச்சயிக்கவேண்டு மென்பது.

51. கலெக்டரானவர் - முந்திய பிரிவின்படிக்கான சகல தாவாக்களையும் விசாரித்து, கொடுப்பதாகத் தீர்மானிக்கவேண்டிய பிரதிபலன் ஏதாகிலுமிருந்தால், அதன் தொகை இவ்வளவென்று நிச்சயிக்கவேண்டும்.

சில விஷயங்களில் ஸிவில் கோர்ட்டாருடைய தீர்மானததுக்கு அனுப்புவது.

52. இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி யாதொரு நபர் பிரதிபலன் பெறுவதற்கு பாத்தியதை உண்டாகும்படியான சந்தர்ப்பங்களில் சிறிது காலத்துக்குத் தண்ணீர் சர்ப்பராவை நிறுத்தும்படியோ குறைக்கும்படியோ உத்தரவு செய்யப்பட்டிருக்கும் விஷயங்களிலே, கலெக்டரால் தீர்மானிக்கப்படும் பிரதிபலனை தாவாதாரர் ஒப்புக்கொள்ளாத பட்சத்தில், இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, கலெக்டரானவர் இது விஷயத்தை ஸிவில் கோர்ட்டாருடைய தீர்மானத்துக்கு அனுப்ப வேண்டும்.

விசாரணைகளில் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறை.

53. இந்த ஆக்ட் 49-வது 52-வது பிரிவுகளின்கீழ் வரும் விஷயங்களில் தவிர மற்ற விஷயங்களிலே, 1894-ம் வருஷத்து நிலமெடுத்துக்கொள்வதற்கான ஆக்டின் 9-வது முதல் 14-வது (உட்பட) வரையிலுள்ள பிரிவுகளிலும், 18-வது முதல் 22-வது (உட்பட) வரையிலுள்ள பிரிவுகளிலும்; 26-வது முதல் 34-வது (உட்பட) வரையிலுள்ள பிரிவுகளிலும், 45-வது பிரிவிலும், 51-வது முதல் 55-வது (உட்பட) வரையிலுள்ள பிரிவுகளிலும் கண்ட நிபந்தனைகள் - கூடியமட்டிலும், இதற்கு மாறான உத்தேசம் இருப்பதாக இந்த ஆக்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிற வரையிலன்றி மற்றப்படிக்கும், இந்த ஆக்டினால்

கொடுக்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துவதனால் ஏற்படும் சேதங்களுக்காகப் பிரதிபலன் கொடுக்கவேண்டுமென்று செய்யப்படும் தாவாக்களைக்குறித்த எல்லா விசாரணைகளுக்கும் பிரயோகப்படும்.

சில்லறை தாவாக்களை ஜில்லா கலெக்டர் முடிவாய்த் தீர்மானிக்கவேண்டுமென்பது.

54. யாதொரு தாவாதொகையானது ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாவிட்டால், அந்த தாவா விஷயமாய் 52-வது பிரிவின்படியாவது 53-வது பிரிவின்படியாவது தீர்மானத்துக்கு அனுப்பும் சகல விஷயங்களையும், ஸிவில் கோர்ட்டாருக்கு அனுப்புவதற்கு பர்த்தியாக ஜில்லா கலெக்டருக்கு அனுப்பவேண்டும்; அவைகளின்மேல் ஜில்லா கலெக்டர் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.

பிரதிபலன் தொகையை இன்னவிதமாய் நிச்சயிக்கவேண்டுமென்பது.

55. (1) 53-வது பிரிவின்படி செய்யப்படும் விசாரணைகளில் தீர்மானிக்கவேண்டிய பிரதிபலன் தொகையை நிச்சயிக்கையிலே, எந்த சொத்தின் விஷயமாகப் பிரதிபலன் தாவா செய்யப்படுகிறதோ அந்த சொத்தின் ஊர்விலையில் பிரதிபலன் தீர்மானிக்கும் காலத்திலே ஏற்பட்டிருக்கும் மதிப்புக்குறைவையும் இதர விஷயங்களோடுகூட கவனிக்கலாம்; மேலும், ஷை ஊர்விலையில் ஏற்பட்டிருக்கும் மதிப்புக்குறைவை நிச்சயித்தறியக்கூடாவிட்டால், அந்தத் தொகையை - இந்த ஆக்டினால் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைச் செலுத்துவதனால் அந்த சொத்தின் வருஷாந்தர நிகர லாபத்தில் உண்டாகும் குறைவுத்தொகையின் பதினைந்து மடங்காகக் கணக்கிடவேண்டும்.

(2) யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையானது 4-வது பிரிவைச் சேர்ந்த (6) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (d) அடையாளமிட்ட பகுதியின்கீழ் வருவதனால் யாதொரு நிலத்துக்குடையவரின் பூஸ்திதியில் அடங்கிய எந்த நிலத்துக்காவது நீர்ப்பாய்ச்சும் விஷயத்தில் இனி சீர்திருத்தங்கள் செய்வதற்குறிய பாத்தியதை தமக்கு இல்லாமற்போய் விடுகிறதென்னும் காரணத்தைக்கொண்டு பிரதிபலன் கொடுக்கவேண்டுமென்று அவர் தாவா செய்தால், பிரதிபலனாகக் கொடுக்கும்படி தீர்மானிக்கவேண்டிய தொகையை நிச்சயிக்கும்போது இதர விஷயங்களுடன்கூட அடியிற்கண்டவைகளையும் கவனிக்கவேண்டும்:—

(a) 7-வது பிரிவின்படி விளம்பரம் பிறப்பிக்கப்பட்ட தேதிக்குமுன்னே உபயோகித்துக்கொள்ளப்பட்டு வந்த சர்ப்பராவுக்கு அதிகப்படாமல், ஷை நிலத்தின் விஷயமாய்ச் செய்யப்படக்கூடிய சீர்திருத்தங்கள் இவ்வளவென்பதும் இப்படிப்பட்டவை யென்பதும்;

(b) அப்படிப்பட்ட சீர்திருத்தங்களுக்காகப் பிடிக்கும் செலவு;

(c) அந்த சீர்திருத்தங்களை உபயோகித்துக்கொள்வதற்காகச் செய்யவேண்டியிருக்கும் முன் ஏற்பாடுகளுக்காகப் பிடிக்கும் செலவு;

(d) அந்த சீர்திருத்தங்கள் காரணமாக பிரஸ்தாப நிலத்துக்கு அதிகப்படியாய் ஏற்படும் விலை மதிப்பு.

ஆனால், நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையானது ஆறாகவாவது இயற்கையான வாய்க்காலாய்ப் போய்க்கொண்டிருக்கும் ஓடையாகவாவது, தண்ணீரை வடிப்பதற்காக இயற்கையாய் ஏற்பட்டுள்ள வாய்க்காலாகவாவது, ஏரியாகவாவது, இயற்கையாய்த் தண்ணீர் சேர்ந்திருக்கும் வேறே இடமாகவாவது இருக்கிறபட்சத்திலே, பிரஸ்தாப நிலம் எந்த பூஸ்திதியில் இருக்கிறதோ அந்த பூஸ்திதியானது ஷை நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையைச் சார்ந்தாற்போலிருந்து அல்லது அந்தக் கட்டுவேலைக்குப் பக்கத்திலிருந்து அல்லது அதன்கீழிருந்து அந்த நிலமானது ஆற்றங்கரை சம்பந்தமான நிலமாயிருந்தாலன்றி மற்றப்படி, மேலே கண்ட தாவா எதுவும் ஒப்புக்கொள்ளப்படத்தக்கதல்ல.

(3) 20 முதல் 27 வரையிலுள்ள பிரிவுகளின்படியும் 30-வது பிரிவின்படியும் யாதொரு நீர்க்காலை ஏற்படுத்துவதனாலாகிலும் பெரிதாக்குவதனாலாகிலும் சீர்திருத்துவதனாலாகிலும் மாற்றுவதனாலாகிலும், தற்காலத்திலுள்ள யாதொரு நீர்க்காலின் வழியாகத் தண்ணீரைக் கொண்டுபோவதனாலாகிலும் உண்டாகும் யாதொரு சேதத்துக்காகப் பிரதிபலன் தீர்மானிக்கப்பட்டிருக்கிற விஷயங்களிலே, யாருடைய நன்மைக்காக அந்தப் பிரிவுகளின்படி நடவடிக்கை நடத்தப்பட்டிருக்கிறதோ அந்த நபர்களிடமிருந்து ஷை பிரதிபலன் தொகையானது நிலத்தீர்வை பாக்கியைப்போல கவர்ன்மெண்டாரால் வசூல் செய்யப்படத்தக்கதாகும்.

இந்த ஆக்டின்படி வேண்டியிருக்கும் நிலத்துக்காக விசேஷ வகையான பிரதிபலன்கள்.

56. (1) யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையின் காரியத்துக்காகவோ தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையின் காரியத்துக்காகவோ யாதொரு நிலமாவது அதன் உபயோகமாவது சிறிது காலத்துக்காகிலும் சாசுவதமாயாகிலும் வேண்டியிருந்தால், கலெக்டரானவர்—

(a) பிரதிபலன் பெற பாத்தியதையுள்ள நபரின் சம்மதத்தைப் பெற்று, ஷை நிலமானது அந்த நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையின் காரியத்துக்காகவோ தண்ணீரை வடிப்ப

தற்கான கட்டுவேலையின் காரியத்துக்காகவோ வேண்டியிருக்கும் வரையிலே, அது கவர்ன்மென்டாரால் உபயோகிக்கப்படுவதற்குட்பட்டு, அந்த நிலத்துக்குரிய பாத்தியதைகளும் அந்தப்படி உபயோகிக்கப்படுவதற்குப் பொருத்தமற்றதாயிராத எவ்விதமாகவாகிலும் அந்த நிலத்தை அனுபவித்துக்கொள்வதற்கான பாத்தியதைகளும் மேலேகண்டபடி பாத்தியதை பெற்றிருக்கும் நபரிடத்திலேயே இருக்கவேண்டுமென்று கட்டளையிடலாம்; அந்தப்படி கட்டளையிடும்போது, கவர்ன்மென்டார் ஷை நிலத்தை உபயோகித்துக்கொள்ளும் விஷயமாக மாத்திரம் பிரதிபலன் தீர்மானிக்கப்படவேண்டும்; அல்லது,

(b) பிரதிபலன் பெற பாத்தியதையுள்ள நபரின் சம்மதத்தைப் பெற்றும் பிரதேச கவர்ன்மென்டாரின் பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவுக்குட்பட்டும், மேலேகண்டபடி பாத்தியதை பெற்றிருக்கும் நபருக்கு யாதொரு பிரதிபலன் தொகையாவது அதில் ஒரு பாகமாவது கொடுப்பதற்கு பர்த்தியாக, அந்த நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையிலிருந்து தண்ணீர் சர்ப்பரா செய்யப் பெறுவதற்கான பாத்தியதையைக் கொடுக்கலாம்.

(2) இந்தப் பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிலுள்ள (a) அல்லது (b) அடையாளமிட்ட பகுதியின்படி செய்யப்பட்ட யாதொரு தீர்மானம் அல்லது உத்தரவிற்கண்ட ஷரத்துகளுக்குட்பட்டு, அந்த நிலத்தில் பாத்தியதையுள்ள நபர் - அந்த நிலமானது யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையின் காரியத்துக்காகவாகிலும் தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையின் காரியத்துக்காகவாகிலும் மூன்று வருஷத்துக்கு மேற்பட்ட யாதொரு காலத்துக்கு அனுபோகத்திலிருந்துவரும் பட்சத்திலே, 1894-ம் ஹூத்து நிலமெடுத்துக்கொள்ளுவதற்கான ஆக்டின்படி அந்த நிலத்தைப் பூர்த்தியாய் எடுத்துக்கொள்ளும்படியாகக் கலெக்டரைக் கேட்கலாம்; அதன்மேல் அந்த நிலம் அப்பிரகாரமே எடுத்துக்கொள்ளப்படும்.

9-ம் அத்தியாயம்.

அவசரமான சந்தர்ப்பங்களில் வேலையாட்களையும் சாமான்களையும் சேகரிப்பதைக் குறித்து.

அவசரமாய் வேண்டியிருக்கும் வேலைகளுக்காக வேலையாட்களையும் சாமான்களையும் சேகரிப்பதற்கான நடவடிக்கை முறை.

57. (1) உடனே யாதொரு வேலை அல்லது மராமத்து செய்து முடித்தாலன்றி மற்றப்படி, யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைக்காகிலும் தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலைக்காகிலும் பொது ஜனங்களுக்குத் திடீரென்றும் விசேஷமாகவும் தீங்கு நேரிடும்படியாகப் பிரமாதமாய்ச் சேதம் ஏற்படுமென்றும்,

அல்லது, நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமாகவோ அல்லது தண்ணீரை வடிப்பது சம்பந்தமாகவோ ஸ்திரமாய் ஏற்பட்டிருக்கும் காலைப் பராமரித்துவரும்பொருட்டு யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையையாவது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையையாவது சிறிது மட்டில் பரிஷ்கரிப்பது அவசியமாயிருந்து அவ்விதம் உடனே செய்யப்பட்டாலன்றி மற்றப்படி, பொது ஜனங்களுக்குப் பிரமாதமாய் நஷ்டம் ஏற்படுமென்றும்,

அந்த மராமத்து வேலையையாகிலும் பரிஷ்கரிக்கும் வேலையையாகிலும் மற்ற வேலையையாகிலும் சரியாய்ச் செய்து முடிப்பதற்கு அவசியமான வேலையாட்கள் மேலேகண்ட தீங்கு அல்லது நஷ்டம் நேரிடாமல் தடுக்கும்படி ஷை வேலையைச்செய்து முடிப்பதற்காகக் கொடுத்திருக்கும் காலத்துக்குள் சாதாரண முறைப்படி கிடைக்கமாட்டார்களென்றும் யாதொரு நீர்ப்பாய்ச்சல உத்தியோகஸ்தருக்குத் தோற்றும்போதெல்லாம்,

அந்த மராமத்து வேலையையாகிலும் பரிஷ்கரிக்கும் வேலையையாகிலும் வேறே வேலையையாகிலும் செய்துமுடிக்கும் விஷயத்தில் ஷை. உத்தியோகஸ்தராயினும் இதுவிஷயமாய் அவரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபராயினும் கட்டளையிடக்கூடியபடி உழைத்து உதவி செய்யும்படியாக ஷை மராமத்து வேலையாகிலும் பரிஷ்கரிக்கும் வேலையாகிலும் வேறே வேலையாகிலும் செய்யவேண்டியிருக்கிற பிரதேசத்துக்குச் சமீபத்தில் வாசஞ்செய்கிற அல்லது நிலத்தைக் கைப்பற்றில் வைத்துக்கொண்டிருக்கிற திட சரீரமுள்ள சகல புருஷர்களையுமாவது அவர்களில் எவரையாவது அழைக்கும்படி சமீபத்திலுள்ள கிராமம் அலலது கிராமங்களின் பெரியதனக்காரருக்காகிலும் பெரியதனக்காரர்களுக்காகிலும் ஷை உத்தியோகஸ்தர் உத்தரவு செய்வது சட்டசம்மதமாகும்.

(2) மேலும், ஷை உத்தியோகஸ்தராவது இதுவிஷயமாய் அவரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபராவது - அப்படிப்பட்ட யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலை அல்லது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலைக்குச் சமீபத்திலுள்ள யாதொரு ஸ்தாவர சொத்திலும் அதன்மேலும் பிரவேசித்து, அங்கே வளர்ந்திருக்கிற அல்லது மற்றப்படியிருக்கிற எவையேனும் மரங்கள் அல்லது மூங்கில்களையும், அந்த சொத்திலாகிலும் அதன்மேலாகிலும் அகப்படும் எந்த வெட்டுமரம், பாய்கள், கயிறுகள், வைக்கோல், மண், கல் அல்லது இதர சாமான்களையும் சுவாதீனப்படுத்திக்கொண்டும், எடுத்துக்கொண்டும் அப்புறப்படுத்தியும், ஷை மராமத்து வேலை, பரிஷ்கரிக்கும் வேலை அல்லது வேறே வேலையின் காரியங்களுக்காக அவைகளை உபயோகிக்கலாம்.

(3) இந்தப் பிரிவில் கண்டிருக்கிறபடி அதிகாரம் கொடுக்கப் பெற்றிருக்கும் ஒவ்வொரு நபரும் - இந்தியன் பினல் கோடின் தாற்பரியப்படி ஸர்க்கார் உத்தியோகஸ்தராகக் கருதப்படுவார்.

உத்தரவின்படி நடந்து கொள்ள நிராகரித்தாலும் அசட்டை செய்தாலும் தண்டனை.

58. வயது வந்தவராயிருக்கும் யாதொரு புருஷரை அவருடைய கிராமப் பெரியதனக்காரர் மேலேகண்டபடி வேலை செய்ய அழைத்திருந்து, அவர் சட்டசம்மதமான யாதொரு காரணமின்றி மேலேகண்டபடி அழைத்ததற்கேற்ப நடந்துகொள்ள நிராகரித்தாலும் அசட்டை செய்தாலும், யாதொரு மாஜிஸ்ட்ரேட்டின்முன் அவர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல், அவருக்கு நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனையாவது ஒரு மாதத்துக்கு மேற்படாமல் வெறுங்காவல் தண்டனையாவது இவ்விரண்டுமாவது விதிக்கப்படும்.

கட்டாயமாய் வேலைக்கு அழைத்துவரப்பட்ட ஆள்களுக்கும் எடுத்துக்கொள்ளப்பட்ட சாமான்களுக்காகவும் தொகை கொடுப்பது.

59. 57-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவை அனுசரித்துப் பகற்காலத்தில் வேலை செய்கிற அல்லது வேலை செய்யும் காரியத்துக்காக நிறுத்திக்கொள்ளப்படுகிற சகல நபர்களுக்குமாவது, அந்தப் பிரிவின்படி எவர்களுடைய சாமான்கள் எடுத்துக்கொள்ளப்படக்கூடுமோ அப்படிப்பட்ட சகல நபர்களுக்குமாவது நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தரானவர் - அவர்களுடைய வேலைக்காகவும் அவர்களை நிறுத்திக்கொள்வதற்காகவும் அல்லது ஷை சாமான்களுக்காகவும், அதேமாதிரியான வேலை அல்லது சாமான்களுக்கு அந்தந்த காலத்தில் அக்கம்பக்கத்திலே ஏற்பட்டிருக்கும் மிகவும் உயர்ந்த வீதங்களின்படி நியாயமாய் எவ்வளவு சீக்கிரத்தில் கொடுப்பது சாத்தியமாயிருக்குமோ அவ்வளவு சீக்கிரத்திலே தொகை கொடுக்கவேண்டும். இராத்திரி வேளையில் ஷை நபர்கள் வேலை செய்யவேண்டியிருந்தாலும் அல்லது அவர்களை வேலைக்கு நிறுத்திக்கொண்டாலும், அவர்களுக்கு ஷை வீதங்களுக்கு இரண்டத்தனை வீதங்களின்படி தொகை கொடுக்கவேண்டும்.

சாமான்களை எடுக்கும்போது சேதம் உண்டாக்கப்பட்டால் தண்டனை.

60. 57-வது பிரிவின்படி எவையேனும் மரங்கள், மூங்கில்கள், மண், கல் அல்லது இதர சாமான்களை அப்புறப்படுத்துவது காரணமாக அந்த சாமான்களுக்குக் கொடுக்கக்கூடிய விலைக்கு அதிகமாக யாதொரு நபருக்கு நேரே சேதம் உண்டாகும்போதெல்லாம், நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தர் - அப்படிப்பட்ட சேதத்துக்காக நியாயமாயுள்ள ஒரு பிரதிபலன் தொகையை ஷை நபருக்குக் கொடுக்கவேண்டும்.

கொடுக்கப்படக்கூடிய தொகை சம்பந்தமான விவாதங்களைக் கலெக்டருடைய தீர்மானத்துக்கு அனுப்பவேண்டுமென்பது.

61. 59-வது பிரிவின்படியாவது 60-வது பிரிவின்படியாவது யாதொரு நபருக்குக் கொடுக்கப்படவேண்டிய தொகை விஷயமாய் அவருக்கும் நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தருக்கும் ஏற்படும் யாதொரு விவாதத்தை, இவர்களில் எவராவது கலெக்டருடைய தீர்மானத்துக்கு அனுப்பலாம்; அதன்மேல், அவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

10-ம் அத்தியாயம்.

மாமூல் வேலையைக்குறித்து.

இன்ன கட்டுவேலைகளின் விஷயத்தில் மாமூல் வேலை செய்யும்படி நிர்ப்பந்தப்படுத்தலாமென்பது.

62. (1) இந்த அத்தியாயத்திற்கண்ட நிபந்தனைகள் பின்வரும் நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைகளுக்கும் தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலைகளுக்கும் பிரயோகப்படும் :—

(a) சகல ஆற்று வாய்க்கால்களும் ஊற்று வாய்க்கால்களும் ;

(b) சகல குளங்களும் ;

(c) குளங்களுடன் சம்பந்தப்பட்டிருக்கும் சகல வரவு கால்களும் போக்குக் கால்களும் ;

(d) வேறே எந்த நீர்ப்பாய்ச்சல் அல்லது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையின் விஷயத்தில் கூலியில்லாமல் வேலை செய்வது மாமூலாகுமென்று பிரதேச கவர்ன்மெண்டார் விளம்பரமூலமாய் நிர்ணயிக்கக்கூடுமோ அப்படிப்பட்ட யாதொரு கட்டுவேலை.

(2) யாதொரு பிரதேசத்திலுள்ள ஷை சகல கட்டுவேலைகளின் விஷயத்திலுமாவது அவைகளில் யாதொன்றின் விஷயத்திலாவது 63-வது பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் மாமூல் வேலை முழுவதுமாகிலும் சிறிதுமட்டிலாகிலும் செய்யப்படவேண்டியதில்லையென்று யாதொரு உத்தரவு மூலமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டார் நிர்ணயிப்பது சட்டசம்மதமாகும். அப்படிப்பட்ட உத்தரவைப் பிரதேச கவர்ன்மெண்டார் எந்தக் காலத்திலாகிலும் ரத்துசெய்யலாம் அல்லது திருத்தலாம்.

குடிமராமத்து வேலை என்பதற்கு அர்த்தம். இன்ன நபர்கள் அதைச் செய்ய கடமைப்பட்டவர்களாவார்களென்பது.

63. யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையினால் அல்லது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையினால் தண்ணீர் பாய்ச்சப்படுகிற அல்லது தண்ணீர் வடிக்கப்படுகிற நிலத்தின் அனுபோகதாரர் ஒவ்வொருவரும் - அந்தக் கட்டுவேலையின் விஷயத்தில் குடிமராமத்து வேலையென்று இதில் பின்னால் சொல்லப்படும் அடியிற்கண்ட மாமூல் வேலையைக் கூலி எதுவும் பெறாமலே செய்யவேண்டும் :—

(a) நீர்க்கால்களையும் பிளவுகளையும், சக்கரங்களினால் ஏற்படும் பள்ளங்களையும், துவாரங்களையும் தூர்ப்பது ;

(b) நாகதாளியையும், (wild croton) காட்டுச் செடிவகையையும் புதர்களையும் விஸ்தாரமாய் வளர்ந்திருக்கும் இதர செடி கொடிகள் அல்லது தீங்குண்டாக்கத்தக்க பூண்டுகளையும் அப்புறப்படுத்துவது ;

(c) தீங்குண்டாக்கத்தக்கவையென்று நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தருக்குத் தோற்றும் கீழ்ச் செடிகளைப் பரிஷ்கரிப்பது ;

(d) மதகுகளிலிருந்தும் வாய்க்கால்களிலிருந்தும் மணல் அல்லது வண்டலை வாருவது ;

(e) சுண்ணாம்புக் கலவையினால் பொருத்தப்பட்டிராத ரிவெட்மெண்டுகள், அணைகள், கலங்கல்கள், அணைகளிலிருந்து தண்ணீர் வெளியே போவதற்கான வழிகள் ஆகிய இவைகளினின்றும இடம் பெயர்ந்திருக்கும் கற்களை மறுபடியும் அவைகளின் ஸ்தானத்தில் வைப்பது ;

(f) கலங்கலில் செங்குத்தாய் அமைக்கப்பட்டிருக்கும் கற்களுக்கு இடையிலுள்ள இடங்களைச் சிறிது காலத்துக்கு அடைத்துவைப்பதற்கு நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தர் அனுமதி கொடுத்திருக்கிறவரையிலன்றி மற்றப்படி, அந்த இடங்களைப் பரிஷ்கரித்து வைப்பது ;

(g) குறித்த யாதொரு பிரதேசத்தின் விஷயத்தில், குடிமராமத்து வேலையாகுமென்று பிரதேச கவர்ன்மெண்டார் விளம்பரமூலமாய் நிர்ணயிக்கக்கூடிய வேறே யாதொரு வேலை.

விவரணம்.—யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட அல்லது அங்கிகரிக்கப்பட்ட ஆயக்கட்டைச் சேர்ந்த பாகமாயிருக்கும் சகல நிலமும் - இந்தப் பிரிவின் தாற்பரியப்படி அந்தக் கட்டுவேலையினால் நீர்பாய்ச்சப்படும் நிலமாகக் கருதப்படும்.

குடிமராமத்து வேலை கிரமமாய்ச் செய்யப்படுவதற்குப் பெரியதனக்காரர் உத்தரவாதியாவாரென்பது.

64. ஒவ்வொரு கிராமப் பெரியதனக்காரரின் மேல்விசாரணையிலிருக்கும் கிராமம் அல்லது கிராமங்களிலுள்ள யாதொரு நீர்ப்பாய்ச்சல் அல்லது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையின் விஷயத்தில் குடிமராமத்து வேலை கிரமமாய்ச் செய்யப்படும்படி பார்த்துக்கொள்வது அவருடைய கடமையாகும்.

குடிமராமத்து வேலை அசட்டை செய்யப்பட்டால் பெரியதனக்காரர் ரிபோர்ட் செய்யவேண்டுமென்பது.

65. ஷை வேலையானது அசட்டை செய்யப்பட்டால், பெரியதனக்காரர் - அது விஷயத்தைப்பற்றி நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தருக்கு ரிபோர்ட் செய்யவேண்டும் ; அதன்மேல், அவர் - ஷை வேலை செய்யக் கடமைப்பட்டிருக்கும் நபர்கள் சாதாரணமாய் வாசஞ்செய்கிற அல்லது அவர்களுடைய அனுபோகத்திலிருக்கும் நிலம் இருக்கிற கிராமம் அல்லது கிராமங்களின் பெரியதனக்காரர்களுக்கு, ஷை நபர்கள் பிரஸ்தாப வேலையை குறித்த ஒரு தேதிக்குள் செய்யவேண்டுமென்று தண்டோராமூலமாய் அவர்களுக்கு உத்தரவு பண்ணும்படிச் சொல்லவேண்டும். அந்த உத்தரவின்படி நடந்துகொள்ளாவிட்டால், நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தர் கூலியாட்களைக் கொண்டு பிரஸ்தாப வேலையைச் செய்விக்கலாம்.

உத்தரவின் பிரகாரம் நடந்துகொள்ள நிராகரிக்கிற அனுபோகதாரர் சார்பில் கூலியாட்களை வைத்துக்கொள்ளலாமென்பது.

66. குடிமராமத்து வேலை செய்யப்பட்டுவருகையில் அப்படிப்பட்ட வேலைக்கு உதவக் கடமைப்பட்டிருக்கும் யாதொரு நபர் அந்தப்படி செய்ய அசட்டைபண்ணினாலும் நிராகரித்தாலும், கிராமப் பெரியதனக்காரர் - ஷை நபர் உதவக் கடமைப்பட்டிருக்கும் வேலைக்காகக் கூலியாட்களை அமர்த்திக்கொள்ளலாம்.

நிலத்தின் ஒவ்வொரு அனுபோகதாரராவது ஒவ்வொரு கிராமத்தாராவது குடிமராமத்து வேலையில் இன்ன பாகத்தைச் செய்ய உதவவேண்டுமென்பது.

67. குடிமராமத்து வேலை நடந்தேறுவதற்காக நிலத்தின் ஒவ்வொரு அனுபோகதாரரும் இவ்வளவுமட்டில் வேலைக்கு உதவக் கடமைப்பட்டிருக்கிறாரென்பதும், யாதொரு நீர்ப்பாய்ச்சல் அல்லது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலை பல கிராமங்களுக்கு உபயோகப்படும்பட்சத்தில் ஒவ்வொரு கிராமத்தாரும் இன்ன சங்கியாபரிமாணத்தின்படி பங்கு போட்டுக்கொண்டு ஷை வேலையைச் செய்யவேண்டுமென்பதும் பிரதேச கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்படும் விதிகளின் பிரகாரம் நிச்சயிக்கப்படும்.

வேலைக்கு உதவ மறுக்கும் நபரின் பொறுப்பு.

68. குடிமராமத்து வேலை நடந்தேறுவதற்காக வேலைக்கு உதவக் கடமைப்பட்டிருக்கும் யாதொரு நபர் போதுமானதும் நியாயமானதுமான காரணம் இல்லாமலே அந்தப்படி உதவ அசட்டை செய்தாலும் நிராகரித்தாலும், நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தர் - அந்த நபர் உதவக் கடமைப்பட்டிருக்கும் வேலையின் விலைமதிப்பில் நாலத்தனைக்கு மேற்படாத ஒரு தொகையை அந்த நபரிடமிருந்து வாங்கலாம்.

நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தருடைய உத்தரவின்மேல், அது பிறப்பிக்கப்பட்ட தேதிமுதல் முப்பது தினங்களுக்குள் கலெக்டருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம் ; அவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

குடிமராமத்து வேலைக்கு பர்த்தியாக வரி (ஸெஸ்) விதித்து வாங்க அதிகாரம்.

69. (1) யாதொரு நீர்ப்பாய்ச்சல் அல்லது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையின் விஷயத்தில், பிரதேச கவர்ன்மெண்டார் - குடிமராமத்து வேலை செய்யவேண்டுமென்று நிர்ப்பந்திப்பதற்கு பர்த்தியாக, வருஷவாரி வரி விதித்து வாங்கவேண்டுமென்று அந்தப்படி வேலைக்கு உதவக் கடமைப்பட்டிருக்கும் நபர்களில் பெரும்பான்மையோர் விரும்பினாலும் அல்லது அப்படி விதித்து வாங்குவது யுக்தமாயிருக்குமென்று பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் தோற்றினாலும், அந்தப்படியே அவர்களிடமிருந்து வருஷவாரி வரி விதித்து வாங்கலாம்.

ஷை வரியானது - பிரதேச கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்படும் விதிகளின்படி நிச்சயிக்கப்பட்டுப் பரிபாலனம் செய்யப்படும்.

(2) பிரதேச கவர்ன்மெண்டார் - ஷை வரி விதிப்பதை எந்தக் காலத்திலாகிலும் நிறுத்திவிடலாம் ; அந்தப்படி நிறுத்தப்படுவதன்மேல் குடிமராமத்து வேலை செய்வதற்குள்ள பொறுப்பு மறுபடியும் ஏற்படும்.

ஸிவில் கோர்ட்டுகளின் விசாரணை அதிகாரத்துக்குத் தடை ஏற்படுவது.

70. இந்த அத்தியாயத்தில் சொல்லியிருக்கும் எந்த விஷயத்தைப்பற்றியும் தாக்கல் செய்யப்படும் யாதொரு வியாஜ்ஜியத்தை எந்த ஸிவில் கோர்ட்டாரும் பிடித்து விசாரிக்கக் கூடாது.

11-ம் அத்தியாயம்.

நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான பஞ்சாயத்துகளையும் சபைகளையும் குறித்து.

நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்தை ஏற்படுத்துவது.

71. இதுவிஷயமாய் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் செய்யக்கூடிய பொதுவான அல்லது விசேஷமான விதிகளுக்குட்பட்டு, ஜில்லா கலெக்டரானவர் - முக்கியாம்சத்தில் அவசியம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிந்து திருப்தியடைந்தால், யாதொரு கிராமத்துக்காகவாவது தனியாயுள்ள யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைக்காகவாவது அப்படிப்பட்ட கட்டுவேலையின் யாதொரு பாகத்துக்காகவாவது நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான பஞ்சாயத்து ஒன்றை ஏற்படுத்தலாம்.

அப்படிப்பட்ட பஞ்சாயத்தில் உத்தியோக முறையில் மெம்பராய் ஏற்படும் கிராமப் பெரியதனக்காரரும் ஒன்பது பேருக்கு மேற்படாமலும் மூன்று பேருக்குக் குறையாமலும் இதர மெம்பர்களும் இருக்கவேண்டும் ; இந்த மெம்பர்கள் நில அனுபோகதாரர்களுக்குள் அப்படிப்பட்ட அனுபோக காரணமாக ஷை கட்டுவேலை சரியாய்ப் பராமரிக்கப்பட்டு வருவதில் அக்கறையுள்ளவர்களாயிருக்கும் நபர்களாலும் அவர்களுக்குள்ளும் இந்த ஆக்டின்படி செய்யப்படும் விதிகளின் பிரகாரம் தெரிந்தெடுக்கப்படவேண்டும்.

தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் மூன்று வருஷகாலம் உத்தியோகம் வகிக்கவேண்டும் ; ஆனால், அவர்கள் மறுபடியும் தெரிந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியுள்ளவர்களாவார்கள். மேலும், தெரிந்தெடுக்கப்பட்ட யாதொரு மெம்பர் - மேலே சொல்லப்பட்ட யோக்கியதாம்சம் பெற்றிருப்பது நின்றுபோனவுடனே தம்முடைய உத்தியோகத்தைக் காலி செய்தவராக எண்ணப்படுவார்.

நீர்ப்பாய்ச்சல் சபையை ஏற்படுத்துவது.

72. இதுவிஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டார் செய்யக்கூடிய பொதுவான அல்லது விசேஷமான விதிகளுக்கு உட்பட்டு, ஜில்லா கலெக்டரானவர் - ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கான யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையின் விஷயத்தில், இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பஞ்சாயத்துகளாகிலும் அவைகளிலிருந்து நியமித்த பிரதிநிதிகளாகிலும் அடங்கிய யாதொரு நீர்ப்பாய்ச்சல் சபையை ஏற்படுத்தலாம.

இந்த ஆக்டின்படி ஏற்படுத்தப்படும் விதிகளை அனுசரித்து நீர்ப்பாய்ச்சல் சபைகளுக்குப் பிரதிநிதிகளை நியமிக்கவேண்டும் ; மேலும், ஒவ்வொரு பிரதிநிதியும் - தாம் எந்த பஞ்சாயத்தின் பிரதிநிதியாயிருக்கிறாரோ அந்தப் பஞ்சாயத்தில் தாம் மெம்பராயிருக்கிறவரையில் மாத்திரமே உத்தியோகம் வகித்துவரவேண்டும்.

ப்ரெஸிடென்டைத் தெரிந்தெடுப்பதும் சகாயச் சட்டங்கள் ஏற்படுத்துவதும்.

73. (1) இதுவிஷயமாய்ப் பிரதேச கவர்ன்மென்டார் செய்யக்கூடிய விதிகளுக்கு உட்பட்டு, ஷை பஞ்சாயத்தாராவது சபையாராவது - (a) தங்களிலிருந்தே ஒருவரை ப்ரெஸிடென்டாகத் தெரிந்தெடுக்கலாம்; மேலும், (b) அந்தப் பஞ்சாயத்து அல்லது சபையின் வேலே நடந்தேறுவதற்காக சகாயச்சட்டங்கள் ஏற்படுத்தலாம்.

(2) பஞ்சாயத்துகள் விஷயமாய்ப் பின்வரும் பிரிவுகளில் கண்டிருக்கும் நிபந்தனைகள் சாத்தியமானவரையில் நீர்ப்பாய்ச்சல் சபைகளுக்கும் பிரயோகப்படும்.

தங்களுடைய மேல்விசாரணையின்கீழ் விடப்பட்டிருக்கும் நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைகளின் விஷயத்தில் பஞ்சாயத்துகளின் அதிகாரங்களும் கடமைகளும்.

74. (1) 71-வது பிரிவின்படி யாதொரு நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து ஏற்படுத்தப்படுவதன்மேல், ஜில்லா கலெக்டரானவர் - யாதொரு பஞ்சாயத்தால் நிர்வாகம் செய்யப்படுவதற்குத் தகுதியானதென்று தமக்குத் தோற்றும் யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையையாவது அதன் யாதொரு பாகத்தையாவது பஞ்சாயத்தின் மேல்விசாரணையின்கீழ் விடலாம்; ஆனால், அந்தப் பஞ்சாயத்தானது ஷை கட்டுவேலையைக் கலெக்டருக்குத் திருப்திகரமாகப் பராமரித்துவரவேண்டுமென்னும் திட்டத்துக்குட்பட்டும், இதுவிஷயமாய்ப் பிரதேச கவர்ன்மென்டார் ஏற்படுத்தும் எவையேனும் விதிகளில் நிர்ணயிக்கப்படக்கூடிய இதர திட்டங்களுக்கு உட்பட்டும், அந்தப்படி விடவேண்டும்.

(2) (1) குறிப்பிட்ட பகுதியில் சொல்லப்பட்டிருக்கும் விதிகளுக்கும் இதுவிஷயமாய் ஜில்லா கலெக்டரால் ஏற்படுத்தப்படக்கூடிய பின்னும் எவையேனும் விதிகளுக்கும் உட்பட்டு, 71-வது பிரிவின்படி நியமிக்கப்பட்ட யாதொரு பஞ்சாயத்தார்—

(a) தங்களுடைய மேல்விசாரணையின்கீழ் இருக்கும் நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலை சம்பந்தமாக, அவசரமான சந்தர்ப்பங்களிலே வேலையாட்களை நிர்ப்பந்தப்படுத்திச் சேகரிக்கும் விஷயத்திலும் சாமான்களைப் பெறும் விஷயத்திலும் குடிமராமத்து வேலே செய்யும்படி கேட்கும் விஷயத்திலும் நிர்ப்பந்திக்கும் விஷயத்திலும் நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தருக்குள்ள சகல அதிகாரங்களையும் செய்யவும்,

(b) தங்களுடைய மேல்விசாரணையின்கீழ் இருக்கும் நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையின் விஷயத்தில், 69-வது பிரிவின்படி விதிக்கப்பட்ட வரியை வசூலிக்கவும் அது சம்பந்தமாய்ப் பரிபாலனம் செய்யவும்,

(c) 69-வது பிரிவின்படி வரி விதிக்கப்படாத பட்சத்தில், முழுவதுமாவது சிறிதுமட்டிலாவது குடிமராமத்து வேலைக்கு பர்த்தியாக பிரதேச கவர்ன்மென்டார் விதி மூலமாய் நிர்ணயிக்கக்கூடிய வீதத்துக்கு மேற்படாத ஒரு வீதப்படி வரி விதிக்கவும்,

(d) தங்களுடைய மேல்விசாரணையின்கீழ் இருக்கும் யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையின் விஷயத்திலே, அந்த கட்டுவேலைக்கு உட்பட்ட கிராமத்திலிருக்கிற நிலங்களுக்கு இன்ன மாதிரியாகவும் இன்ன முறைப்படியும் நீர் பாய்ச்சவேண்டுமென்பதையும், இன்ன காலத்தில் தண்ணீர் விடத் தொடங்கவேண்டுமென்பதையும், இன்ன கால அளவு வரையில் தண்ணீர் சர்ப்பரா செய்யப்பட்டுவரவேண்டுமென்பதையும், இவ்வளவு தண்ணீர் வெளியே விடப்படவேண்டுமென்பதையும் ஒழுங்குபடுத்தவும்,

(e) தங்களுடைய மேல்விசாரணையின்கீழ் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையைச் சரியாய்ப் பராமரித்துவருவதற்கும், அதிலுள்ள தண்ணீர் கிரமமாய் உபயோகிக்கப்படும்படி பார்த்துக்கொள்வதற்கும் அவசியமாயிருக்கக்கூடிய இதர நடவடிக்கைகள் நடத்தவும்,

(f) பொதுவாய், தங்களுடைய மேல்விசாரணையின்கீழ் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையின் விஷயத்திலே, கவர்ன்மென்டாரிடத்தில் சங்கிரமித்திருந்து இதுவிஷயமாய்ப் பொதுவான அல்லது விசேஷமான உத்தரவுமூலமாக தங்களுக்கு கவர்ன்மென்டாரால் பிரித்துக் கொடுக்கப்படக்கூடிய அதிகாரங்களைச் செலுத்தவும்

அதிகாரமுடையவர்களாவார்கள்.

இந்த உட்பிரிவிற்கண்ட (c) குறிப்பிட்ட பகுதியின்படி வரி விதித்து பஞ்சாயத்தாரால் பிறப்பிக்கப்படும் யாதொரு உத்தரவின்மேல், கலெக்டருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்; அவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

சகாயச்சட்டங்களைப் பிரசித்தஞ்செய்வது.

75. 71-வது பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு பஞ்சாயத்தார் - அடுத்து முந்திய பிரிவில் கண்டிருக்கும் காரியங்களுக்காகத் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றக்கூடிய சகாயச்சட்டங்கள் செய்யலாம்; மேலும், அந்த சகாயச்சட்டங்களைப் பிரதேச கவர்ன்மென்டார் கட்டளையிடக்கூடிய விதமாய்ப் பிரஸ்தாப கிராமத்தில் பிரசித்தஞ்செய்யவேண்டும்.

சகாயச் சட்டங்களுக்குவிரோதமாக நீர்ப்பாய்ச்சினல் தண்டனை.

76. (1) முந்திய பிரிவின்படி பஞ்சாயத்தாரால் ஏற்படுத்தப்பட்டும் பிரசித்தம் செய்யப்பட்டும் இருக்கும் சகாயச்சட்டங்களுக்கு விரோதமாக எந்த நபராகிலும் அந்தப் பஞ்சாயத்தாரின் மேல்விசாரணையின் கீழ் இருக்கும் யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையிலிருந்து எந்த நிலத்துக்காகிலும் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டால், அவர் - அந்தப்படி தண்ணீர் பாய்ச்சிக்கொள்ளும் ஒவ்வொரு தடவையிலும் அந்த நிலத்துக்கு ஏகரா ஒன்றுக்கு 20 ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் செலுத்தவேண்டுமென்று பஞ்சாயத்தார் உத்தரவு செய்வதன்மேல் அந்தப்படியே செலுத்துவதற்கு உட்பட்டவராவார்; மேலும், அந்தப் பஞ்சாயத்தார் - ஷை அபராதம் செலுத்தப்படுகிறவரையில் ஷை நிலத்துக்குத் தண்ணீர் சர்ப்பராவை நிறுத்திவிடலாம், அல்லது அந்த அபராதத் தொகையை நிலத்தீர்வை பாக்கியைப்போல அவரிடமிருந்து வசூல்செய்யலாம்.

(2) இந்த ஆக்ட் 96-வது பிரிவின்படி உயர்த்தப்பட்ட தண்ணீர் வரி விதிப்பதற்கு பாதகமில்லாமலே, ஷை அபராதத்தை விதித்து வசூலிக்கவேண்டும்; ஆனால், அந்த உயர்த்தப்பட்ட தண்ணீர் வரியிலிருந்து, இந்தப் பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பகுதியின்படி பஞ்சாயத்தாரால் விதித்து வசூல் செய்யப்பட்டிருக்கக்கூடிய யாதொரு அபராதத் தொகையைக் கழித்துவிடவேண்டும்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பஞ்சாயத்தார் செய்யும் யாதொரு உத்தரவின்மேல், முப்பது தினங்களுக்குள் கலெக்டருக்கு அப்பீல் செய்துகொள்ளலாகும்; ஆனால், அந்த உத்தரவாவது, அது எந்தச் சகாயச்சட்டத்தை அனுசரித்துப் பிறப்பிக்கப்பட்டதோ அந்த சகாயச்சட்டமாவது யாதொரு நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளுக்காகிலும் அந்த உத்தியோகஸ்தரால் அங்கீகரிக்கப்பட்ட எவையேனும் முறைகள் அல்லது உடன்படிக்கைக்காகிலும் விரோதமாயிருக்கிறதென்னும் காரணத்தினால் மாத்திரமே அல்லது அது சட்டத்துக்கு விரோதமாயிருக்கிறதென்னும் காரணத்தினால் மாத்திரமே ஷை அப்பீல் செய்துகொள்ளலாம்.

(4) அபராதம் விதித்தோ அல்லது தண்ணீர் சர்ப்பராவை நிறுத்தியோ பஞ்சாயத்தார் பிறப்பித்த யாதொரு உத்தரவாவது சகாயச்சட்டமாவது சட்டத்திற்காகிலும் யாதொரு ஸிவில் கோர்ட்டின் டிக்ரிக்காகிலும் விரோதமாயிருக்கிறதென்னும் காரணத்தைக்கொண்டன்றி மற்றப்படி, அந்த உத்தரவுக்குச் சம்பந்தப்பட்ட எந்த வியாஜ்ஜியத்தையும் ஸிவில் கோர்ட்டார் பிடித்து விசாரிக்கலாகாது.

மேற்பரப்புத் தண்ணீரை நிறுத்திவைத்துககொள்ளக்கூடாதென்று தடுப்பதற்குள்ள அதிகாரம்.

77. (1) வரையறை ஏற்படுத்தியிருக்கும் யாதொரு வாய்க்கால் வழியாய் ஓடாமலும் யாதொரு குட்டை அல்லது குளத்தில் நிலையாயச் சேர்த்துவைக்கப்படாமலும் இருக்கும் மேற்பரப்புத் தண்ணீரைப் பிரஸ்தாப கிராமத்தில் நிலத்தின்மேலே நிறுத்திவைத்துக்கொள்வதனால், தங்களுடைய மேல்விசாரணையின்கீழ் விடப்பட்டிருக்கும் யாதொரு நீர்ப்பாய்ச்சல் குளத்துக்கு ஜலசர்ப்பரா மிகுதியாய்க்குறைந்துபோகிறதென்று யாதொரு பஞ்சாயத்தார் தெரிந்து திருப்தியடையும்போதெல்லாம், அந்த பஞ்சாயத்தார் - விளம்பரம் பிரசுரித்து, அந்தப்படி தண்ணீர் நிறுத்திக்கொள்வதை ஏன் தடுக்கக்கூடாதென்பதற்கு ஷை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தேதிக்குள்ளாகக் காரணம் காட்டும்படி இதற்குச் சம்பந்தப்பட்ட சகல நபர்களையும் கேட்கலாம். அந்த விளம்பரத்தைப் பிரஸ்தாப நிலம் இருக்கும் கிராமத்தில் தண்டோரா மூலமாய் பஹிரங்கப்படுத்தவேண்டும். பஞ்சாயத்தாருக்குத் திருப்திகரமாகக் காரணம் காட்டப்படாவிட்டால், அவர்கள் - மேற்கண்ட மாதிரியாகப் பிரசித்தம் செய்யப்படும் பின்னும் ஒரு விளம்பர மூலமாகவும் இதுவிஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டும், ஷை நிலத்தில் அப்படிப்பட்ட தண்ணீரை நிறுத்திக்கொள்வதையும் அந்தப்படி நிறுத்திக்கொள்ளும் காரியத்துக்காக எவையேனும் கட்டுவேலைகள் ஏற்படுத்துவதையும் தடுக்கலாம் :

ஆனால், ஷை நிலமானது எந்த கிராமத்துக்காகப் பஞ்சாயத்து ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அல்லது எந்த கிராமத்தில் பிரஸ்தாப நீர்ப்பாய்ச்சல் குளம் இருக்கிறதோ அந்த கிராமத்துக்கு வெளியே இருக்கும்பட்சத்தில், பஞ்சாயத்தார் - தங்களுடைய தீர்மானத்துக்கு நகல் ஒன்றைக் கலெக்டருக்கு அனுப்பவேண்டும்; அவர் - பிரஸ்தாப நிலம் இருக்கும் கிராமத்தின் பஞ்சாயத்தாருக்கும், அப்படிப்பட்ட பஞ்சாயத்து ஒன்று இராதபட்சத்திலே, அந்த கிராமத்திலுள்ள நிலத்தின் அனுபோகதாரர்களுக்கும் ஷை தீர்மானவிஷயமாய்த் தங்களுக்குள்ள ஆட்சேபனைகளைச் சொல்லிக்கொள்ள அவகாசம் கொடுத்த பிறகும், அவர்களுடைய ஆட்சேபனைகளைப்பற்றி ஆலோசித்த பிறகும் அந்தத் தீர்மானத்தை ஊர்ஜ்ஜிதப்படுத்தலாம், திருத்தலாம் அல்லது தள்ளிவிடலாம். அந்தப்படி ஊர்ஜ்ஜிதம் செய்யப்பட்ட அல்லது திருத்தப்பட்ட தீர்மானத்தைக் கலெக்டரானவர் - தகுதியானவர்களென்று தமக்குத் தோற்றக்கூடிய ஏஜெண்டுகள் (காரியஸ்தர்கள்) மூலமாய் நிறைவேற்றவேண்டும்.

(2) தடை உத்தரவின்படி நடந்துகொள்ளாவிட்டால், சந்தர்ப்பத்துக்கேற்றபடி பஞ்சாயத்தாராவது கலெக்டராவது - மேற்பரப்புத் தண்ணீரை மேலேகண்டபடி நிறுத்திக்கொள்வதனால் பிரயோஜனமடையும் நிலங்களுக்கு அந்தப்படி நிறுத்திக்கொள்ளப்படும் ஒவ்வொரு தடவையிலும் ஏகரா ஒன்றுக்கு 20 ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம்

விதிப்பதுமல்லாமல், பிரஸ்தாப தடங்கலை அப்புறப்படுத்தும்படியும் செய்வித்து அந்தப்படி செய்வதற்குப் பிடித்த செலவை உத்தரவாதியாயிருக்கும் நபரிடமிருந்து வசூலுஞ்செய்யலாம்.

(3) இந்தப் பிரிவின்படி பஞ்சாயத்தாராவது கலெக்டராவது செய்யும் உத்தரவானது முடிவானதாகும்.

கவர்ன்மென்டார் சகாயத்தொகை கொடுப்பது.

78. பஞ்சாயத்தாரின் மேல்விசாரணையின்கீழ் இருக்கும் யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையைச் சரியாய்ப் பாதுகாப்பதற்காவது பராமரித்து வருவதற்காவது நிர்வாகம் செய்வதற்காவது அவர்கள் குடிமராமத்து வேலையல்லாத வேறே வேலையைச் செய்விப்பது அவசியமாகுமென்று பிரதேச கவர்ன்மென்டார் தெரிந்து திருப்தியடையும்போதெல்லாம், அவர்கள் - அப்படிப்பட்ட வேலைக்காகப் பிடிக்கும் செலவு முழுவதையுமாகிலும் அதில் ஒரு பாகத்தையாகிலும் செய்வதற்காக ஷை பஞ்சாயத்தாருக்குப் பணம் கொடுக்கலாம். அந்தப்படி பணம் கொடுக்கப்பட்டால், பஞ்சாயத்தார்-பிரஸ்தாப வேலையைப் பிரதேச கவர்ன்மென்டார் கட்டளையிடக்கூடிய விதமாகவும் காலத்துக்குள்ளும் செய்து முடிக்கவேண்டும்.

நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து நிதி ஏற்படுத்துவது.

79. (1) அபராதங்களாக வசூலிக்கப்படும் சகல தொகைகளும், பிரதேச கவர்ன்மென்டார் கொடுக்கும் ஏதேனும் சகாயத்தொகை உட்பட பஞ்சாயத்தின் சகலமான இதர வரவுகளும் சேர்ந்து, "நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து நிதி" என்று சொல்லப்படும் ஒரு நிதியாகும். அந்த நிதியின் கணக்குகளை, இது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மென்டாரால் ஏற்படுத்தப்படும் விதிகளில் நிர்ணயிக்கப்படுகிற விதமாக வைத்துவரவேண்டும்.

(2) இந்த அத்தியாயத்தில் சொல்லியிருக்கும் காரியங்களைச் செய்து முடிப்பதற்காகப் பஞ்சாயத்தார் செய்யும் செலவுகளைப் பஞ்சாயத்து நிதியிலிருந்து கொடுக்கவேண்டும் :

ஆனால், குறித்த யாதொரு காரியத்துக்காகப் பிரதேச கவர்ன்மென்டாரால் கொடுக்கப்படும் யாதொரு சகாயத் தொகையை முழுவதிலும் அந்தக் காரியத்துக்காகவே உபயோகப்படுத்தவேண்டும்.

பஞ்சாயத்தைக் கலைத்துவிடுவது.

80. (1) யாதொரு பஞ்சாயத்தார் இந்த ஆக்டின்படி தங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் கடமைகளைச் செய்யாமல் பிடிவாதமாய்த் தவறிக் கொண்டே வருகிறார்களென்றாவது தங்களுடைய அதிகாரங்களை மீறி நடக்கிறார்களென்றாவது துர்விநியோகப்படுத்துகிறார்களென்றாவது ஜில்லா கலெக்டர் அபிப்பிராயப்பட்டால், அந்தக் கலெக்டரானவர் - பஞ்சாயத்து மெம்பர்கள் பிரதிவாதமாகச் சொல்லிக்கொள்ளக்கூடிய விஷயங்களைச் சொல்லிக்கொள்வதற்கு அவகாசம் கொடுத்த பிறகு, அந்தப் பஞ்சாயத்தைக் கலைத்துவிடும்படி உத்தரவு செய்யலாம்.

(2) யாதொரு பஞ்சாயத்தைக் கலைத்துவிடும்படி உத்தரவு செய்யப்பட்டிருந்தால், அதைச் சேர்ந்த மெம்பர்கள் - கலைத்துவிடும்படி செய்யப்பட்ட உத்தரவின் தேதியிலிருந்து தங்களுடைய உத்தியோகத்தை காலிசெய்துவிடவேண்டும் ; மேலும், ஜில்லா கலெக்டரானவர் - அந்தப் பஞ்சாயத்தார் வசமிருக்கும் எவையேனும் பணத்தொகைகளைக் கைப்பற்றிக்கொண்டு, அவைகளை இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகளை அனுசரித்துப் பிரதேச கவர்ன்மென்டார் கட்டளையிடக்கூடிய காரியங்களுக்காகவும் விதமாகவும் உபயோகப்படுத்தவேண்டும்.

பஞ்சாயத்து மெம்பர் வியாஜ்ஜியம் தொடரப்படுவதற்கு உட்பட்டவரல்லவென்பது.

81. இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளை அனுசரித்து நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்ட யாதொரு காரியத்துக்காக எந்தப் பஞ்சாயத்து மெம்பரும் வியாஜ்ஜியம் தொடரப்படுவதற்கு உள்ளாகமாட்டார்.

1920-ம் ௵த்திய சென்னபட்டணத்து கிராம பஞ்சாயத்து ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட பஞ்சாயத்துகள் நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்துகளாகப் பிரவர்த்திக்கலாமென்பது.

82. 1920-ம் ௵த்திய சென்னபட்டணத்து கிராம பஞ்சாயத்து ஆக்ட் 18-வது பிரிவின்படி, பிரதேச கவர்ன்மென்டார் யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையின் பாதுகாப்பையும் பராமரிப்பையும் நிர்வாகத்தையும் அந்த ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு பஞ்சாயத்தாருக்கு மாற்றியிருந்தால், இந்த ஆக்டின் 71-வது பிரிவில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, அந்த பஞ்சாயத்தார் - அந்த கட்டுவேலையின் விஷயத்தில், இந்த ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்தாராய் இருப்பதாகக் கருதப்படுவதுமாத்திரமல்லாமல், அவர்களுடைய அதிகாரங்களைச் செலுத்தவும் அலுவல்களைச் செய்யவும் யோக்கியதை உடையவர்களுமாவார்கள். அந்தப் பஞ்சாயத்தார் - நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து நிதியை 1920-ம் ௵த்திய சென்னபட்டணத்து கிராம பஞ்சாயத்து ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட "பஞ்சாயத்து நிதி"யிலிருந்து பிரித்து வேறாக வைத்திருக்கவேண்டும்.

12-ம் அத்தியாயம்.

விசாரணை அதிகாரத்தையும் நடவடிக்கை முறையையுங்குறித்து.

இன்ஜங்ஷன் என்னும் தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று வியாஜ்ஜியம் தொடருவது அல்லது விண்ணப்பம் செய்துகொள்வது.

83. வேறேவிதமாய் நிபந்தனை கண்டிருந்தாலும் அல்லது யாதொரு உத்தரவாவது தீர்மானமாவது முடிவானதாகுமென்று நிர்ணயிக்கப்பட்டிருந்தாலுமன்றி மற்றப்படி, இந்த ஆக்டின்பிரகாரம் செய்யப்பட்ட யாதொரு காரியத்தின் விஷயமாய்க் கொண்டுவரப்படும் சகல தாவாககளையும் ஸிவில் கோர்ட்டுகள் விசாரணை செய்யலாம்; ஆனால், அப்படிப்பட்ட எந்த கோர்ட்டும் - இந்த ஆக்டின்படி பிரதேச கவர்ன்மென்டாருக்கோ யாதொரு நபருக்கோ நபர்கள் சேர்ந்த யாதொரு சங்கத்துக்கோ யாதொரு உத்தியோகஸ்தருக்கோ கொடுக்கப்பட்டிருக்கும் எந்த அதிகாரங்களையாகிலும் செலுத்துவதைத் தடுக்க இன்ஜங்ஷன் என்னும் தடை உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று கொண்டுவரும் யாதொரு வியாஜ்ஜியத்தையாயினும் செய்துகொள்ளப்படும் யாதொரு விண்ணப்பத்தையாயினும் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

விசேஷ நியாய சபையை ஸ்தாபிக்க அதிகாரம்.

84. பிரதேச கவர்ன்மென்டார் - எந்தக் காலத்திலாகிலும் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய், யாதொரு பிரதேசத்தின் விஷயத்திலாவது நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலை அல்லது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலை அல்லது கட்டுவேலைகளின் விஷயத்திலாவது பிரதி பலனுக்காகக் கொண்டுவரப்படும் தாவாக்களாயிராமல், யாதொரு ஸிவில் கோர்ட்டாரால் பிடித்து விசாரிக்கப்படக்கூடியவைகளாய் இந்த ஆக்டின்படி ஏற்படுகிற தாவாக்களைப் பரிசிலனை செய்வதற்காக இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிறபடி அமைக்கப்பட்டுள்ள ஒரு விசேஷ நியாய சபையை ஸ்தாபிப்பது சட்ட சம்மதமாகும்.

அப்படிப்பட்ட நியாய சபை ஸ்தாபிக்கப்பட்டிருந்தால், எந்த ஸிவில் கோர்ட்டாரும் - அந்த நியாய சபையின் விசாரணையதிகாரத்துக்கு உட்பட்டதாயிருக்கும் எந்த விஷயத்தையும் பிடித்து விசாரிக்கக்கூடாது.

விசேஷ நியாய சபையை அமைப்பது.

85. விசேஷ நியாய சபையில் மூன்று மெம்பர்கள் இருக்கவேண்டும்; அவர்களில் ஒருவர் ரெவினியு இலாகாவில் பன்னிரண்டு வருஷங்களுக்குக் குறையாமல் வேலை பார்த்திருக்கும் உத்தியோகஸ்தராகவும், மற்றொருவர் அஸிஸ்டென்ட் என்ஜினீரின் அந்தஸ்துக்குக் குறையாத அந்தஸ்துடையவராய் பப்ளிக் வொர்க்ஸ் இலாகாவைச் சேர்ந்த உத்தியோகஸ்தராகவும், மூன்றாவது மெம்பர் கவர்ன்மென்ட் ஊழியத்தில் லாபம் கிடைக்கும் உத்தியோகம் வகிப்பவராயிராமல், பிரதேச கவர்ன்மென்டாரால் பிரத்தியேகமாய்த் தெரிந்தெடுக்கப்பட்ட நபராகவும் இருக்கவேண்டும்.

உத்தியோகஸ்தர்களாயிருக்கும் மெம்பர்களைப் பெயரைக் குறிப்பிட்டாவது இன்ன உத்தியோகம் வகிப்பவர்களென்பதைக் குறிப்பிட்டாவது நியமிக்கலாம்.

ப்ரெஸிடென்டை நியமிப்பது.

86. ஷை நியாய சபையைச் சேர்ந்த ஒரு மெம்பரை அதன் ப்ரெஸிடென்டாயிருக்கும்படி பிரதேச கவர்ன்மென்டார் நியமிக்கலாம்.

நடவடிக்கைகள் நடத்துவது.

87. விசேஷ நியாய சபைக்குமுன் நடக்கும் சகல நடவடிக்கைகளையும் கூடுமான வரையில் ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தில் கண்ட நிபந்தனைகளை அனுசரித்து நடத்தி பைசல்செய்யவேண்டும்.

விசேஷ நியாய சபையார் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்பதும், அது முடிவானதாகுமென்பதும்.

88. விசாரணை முடிந்ததும் விசேஷ நியாய சபையார் - நியாயமாயும் சரியாயும் இருப்பதாகத் தங்களுக்குத் தோற்றக்கூடிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும்; மேலும், ஷை சபையால் பிறப்பிக்கப்படும் உத்தரவாவது, அபிப்பிராயபேதம் ஏற்படும் விஷயத்திலே அதைச் சேர்ந்த மெம்பர்களில் பெரும்பான்மையோரால் பிறப்பிக்கப்படும் உத்தரவாவது முடிவானதாகும்.

நியாய சபைகளை எடுத்துவிடலாமென்பது.

89. பிரதேச கவர்ன்மென்டார் - இந்த ஆக்டின்படி ஸ்தாபிக்கப்பட்ட யாதொரு விசேஷ நியாய சபையை எப்போதாகிலும் விளம்பரமூலமாய் எடுத்துவிடலாம்.

சாட்சிகளை ஸம்மன் அனுப்பி வரவழைத்து விசாரணை செய்ய அதிகாரம்.

90. யாதொரு விசாரணையை நடத்த இந்த ஆக்டின்படி அதிகாரம் கொடுக்கப் பெற்றிருக்கும் யாதொரு நபர் - சாட்சிகளை ஸம்மன் அனுப்பி வரவழைப்பது சம்பந்தமாகவும் அவர்களை விசாரிப்பது சம்பந்தமாகவும் ஸிவில் ப்ரொஸீஜர் கோடின்படி ஸிவில் கோர்ட்டுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சகல அதிகாரங்களையும் செலுத்தலாம்.

இந்த ஆக்டின்படிக்கான விசாரணை நீதி விசாரணை சம்பந்தமான நடவடிக்கையாகுமென்பது.

91. இந்த ஆக்டின்படி நடத்தப்படும் ஒவ்வொரு விசாரணையும் - நீதி விசாரணை சம்பந்தமான நடவடிக்கையாயிருப்பதாகக் கருதப்படும்.

13-ம் அத்தியாயம்.

குற்றங்களைக்குறித்தும் தண்டனைகளைக்குறித்தும்.

இந்த ஆக்டின்படிக்கான குற்றங்கள்.

92. தகுதியான அதிகாரம் பெறாமலும் மனதாரவும் எவராவது அடியிற்கண்ட காரியங்களில் எதையாகிலும் செய்தால், அதாவது :—

(1) யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையையாவது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையையாவது சேதப்படுத்தினாலும் மாற்றினாலும் பெரிதாக்கினாலும் தடைப்படுத்தினாலும்,

(2) யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையிலாவது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையிலாவது, தண்ணீர் சர்ப்பரா ஆவது விஷயத்திலாகிலும், அப்படிப்பட்ட கட்டுவேலையிலிருந்தாவது, அதன் மூலமாகவாவது, அதன்மேலாவது, அதன்கீழாவது தண்ணீர் பாய்வது விஷயத்திலாகிலும் பிரவேசித்தாலும், அந்தப்படி சர்ப்பரா ஆவதை அல்லது பாய்வதை அதிகப்படுத்தினாலும் குறைத்தாலும், அல்லது அந்த நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையாவது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையாவது எந்தக் காரியத்துக்காக ஏற்படுத்தப்பட்டதோ அந்தக் காரியத்துக்கு அதன் உபயோகம் குறையும்படியாய்ச் செய்யக்கூடிய யாதொரு காரியத்தைச் செய்தாலும்,

(3) யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைக்காவது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலைக்காவது அபாயமுண்டாகும்படியாகவோ, சேதமுண்டாகும்படியாகவோ, அதன் பிரயோஜனம் குறையும்படியாகவோ, யாதொரு ஆறு அல்லது ஓடையில் தண்ணீர் பாய்வது விஷயமாய்ப் பிரவேசித்தாலும், அந்தப்படி பாய்வதை மாற்றினாலும்,

(4) 8-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாக யாதொரு அணையையாகிலும் மடையையாகிலும் கரையையாகிலும் மதகையாகிலும் வாய்க்காலையாகிலும் இதர கட்டுவேலையையாகிலும் ஏற்படுத்தினாலும் அப்புறப்படுத்தினாலும் மாற்றினாலும்,

(5) 30-வது பிரிவின்படி செய்யப்பட்ட யாதொரு உத்தரவின்படி நடவாவிட்டாலும்,

(6) யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையிலுள்ள தண்ணீரானது சாதாரணமாய் எந்தக் காரியங்களுக்காக உபயோகிக்கப்படுகிறதோ அந்தக் காரியங்களுக்கு அது முன்போல் அவ்வளவு தகுதியாயிராமற்போகும்படியாக அந்தத் தண்ணீரைக் கெடுத்தாலும் அசுத்தப்படுத்தினாலும்,

(7) யாதொரு ஸர்க்கார் உத்தியோகஸ்தருடைய உத்தரவின்படி நாட்டப்பட்டிருக்கும் யாதொரு நிலவெல்லைக்குறியையாவது மட்டம் காட்டும் குறியையாவது நீரளவுக்கருவியையாவது அழித்தாலும் கெடுத்தாலும் விகாரப்படுத்தினாலும் அசைத்தாலும்,

(8) யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையைச் சேர்ந்த அல்லது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையைச் சேர்ந்த கட்டுவேலைகள், கரைகள் அல்லது வாய்க்கால்களில் எதன்பேரிலாகிலும் எதற்குக் குறுக்காகவாகிலும் பிராணிகள் அல்லது வண்டிகள் கடந்து செல்லக்கூடாதென்று ஜில்லா கலெக்டரால் தடுக்கப்பட்ட பிறகு, அந்தப்படி அவைகளைக் கடந்துசெல்லும்படிச் செய்தாலும்,

(9) யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையின் அல்லது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையின் கரை அல்லது ஓரத்திலே பிராணிகளை மேய்க்கக்கூடாதென்றாவது மேயும்படி கயிறுகொண்டு கட்டிவைக்கக்கூடாதென்றாவது ஜில்லா கலெக்டரால் தடைசெய்யப்பட்ட பிறகு, அந்தப்படி அவைகளை மேயும்படிச் செய்தாலும் கட்டிவைத்திருக்கும்படிச் செய்தாலும், மேய்க்கவோ அல்லது கட்டிவைத்திருக்கவோ அனுமதி கொடுத்தாலும்,

(10) யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையின் அல்லது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையின் பாதுகாப்புக்காக உத்தேசிக்கப்பட்ட எந்த மரத்தையாகிலும் புதரையாகிலும் புல்லையாகிலும் இதர செடிவகையையாகிலும் அப்புறப்படுத்தினாலும் கெடுத்தாலும்,

(11) 99-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படி செய்யப்பட்ட எந்த விதியை மீறி நடந்தால் அபராதம் விதிக்கலாமென்று பிரதேச கவர்ன்மெண்டார் அந்த விதிகளில் கட்டளையிட்டிருக்கிறார்களோ அப்படிப்பட்ட யாதொரு விதியை எவ்விதமாகவாகிலும் மீறிநடந்தாலும்,

அவர் - மாஜிஸ்ட்ரேட்டுக்குமுன் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல்,

தண்டனை.

(1) முதல் (4) வரையிலுள்ள உட்பிரிவுகளின்படிக்கான குற்றங்களின் விஷயத்திலே, இருநூறு ரூபாய்க்கதிகப்படாமல் அபராதமாவது ஆறு மாதத்துக்கதிகப்படாத ஒரு காலத்துக்குக் காவல் தண்டனையாவது இவ்விரண்டு தண்டனைகளுமாவது விதிக்கப்படுவதற்கும், (5) முதல் (11) வரையிலுள்ள உட்பிரிவுகளின்படிக்கான குற்றங்களின் விஷயத்திலே, ஐம்பது ரூபாய்க்கு அதிகப்படாமல் அபராதமாவது ஒரு மாதத்துக்கு மேற்படாத ஒருகாலத்துக்கு வெறுங்காவல் தண்டனையாவது இவ்விரண்டு தண்டனைகளுமாவது விதிக்கப்படுவதற்கும் உள்ளாவார்.

விதிக்கப்பட்ட அபராதத்திலிருந்து துன்பமடைந்த நபருக்குப் பிரதிபலன் கொடுக்க மாஜிஸ்ட்ரேட்டுக்குள்ள அதிகாரம்.

93. யாதொரு மாஜிஸ்ட்ரேட்டானவர் இந்த ஆக்டின்படிக்கான யாதொரு குற்றத்துக்காக எந்த நபருக்காகிலும் அபராதம் விதிக்கும்போதெல்லாம், அந்தக் குற்றத்தினால் துன்பமடைந்த நபருக்குப் பிரதிபலனாக அந்த அபராதம் முழுவதையுமாகிலும் அதில் எவ்வளவையாகிலும் கொடுக்கலாமென்று அவர் கட்டளையிடலாம்.

கெடுதி செய்திருப்பதாகக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருக்கும் நபரை அதைச் சரிப்படுத்திக் கொடுக்கும்படி உத்தரவு செய்யலாமென்பது.

94. 92-வது பிரிவின்படிக்கான யாதொரு குற்றத்தையாவது, யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலை சம்பந்தமாகவாகிலும் தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலை சம்பந்தமாகவாகிலும் இந்தியன் பினல் கோடின்படி கெடுதியென்னும் குற்றத்தையாவது யாதொரு நபர் செய்து குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டால், குற்றவாளியென்று தீர்மானிக்கும் மாஜிஸ்ட்ரேட்டானவர்-எதன் விஷயமாய்க் குற்ற ஸ்தாபனை ஆயிருக்கிறதோ அந்தத் தடங்கலை உத்தரவில் நிர்ணயிக்கப்படும் கால அளவுக்குள்ளாக அந்த நபர் அப்புறப்படுத்தவேண்டுமென்றாவது; அந்த சேதத்தை ஷை கால அளவுக்குள் சரிபடுத்திக் கொடுக்கவேண்டுமென்றாவது, அந்த நிலவெல்லைக்குறியையாகிலும் மட்டக்குறியையாகிலும் தண்ணீர் அளவுக்கருவியையாகிலும் உபகரணத்தையாகிலும் அந்தக் கால அளவுக்குள் பார்த்திசெய்யவேண்டுமென்றாவது மராமத்து செய்யவேண்டுமென்றாவது உத்தரவு பண்ணலாம். அந்தப்படி நிர்ணயிக்கப்படும் கால அளவுக்குள்ளாக ஷை நபர் அந்த உத்தரவின்படி நடக்க அசட்டை செய்தாலும் நிராகரித்தாலும், இது விஷயமாய்க் கிரமமாக அதிகாரம் கொடுக்கபெற்றிருக்கும் யாதொரு நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தர் - அந்த உத்தரவின்படி ஷை வேலையைச் செய்துமுடிக்கலாம்; அதற்காகப் பிடிக்கும் செலவானது அந்த நபரிடமிருந்து கலெக்டரால் வசூல் செய்யப்படத்தக்கதாகும்.

பிடிக்க அதிகாரம்

95. யாதொரு நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தராவது, இது விஷயமாகக் கிரமமாய் அதிகாரம்கொடுக்கப்பெற்று யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலை அல்லது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையின் விசாரணை வகிக்கிற அல்லது அதில் வேலையாயிருக்கிற வேறே யாதொரு நபராவது-92-வது பிரிவைச் சேர்ந்த (1), (2), (3), (7) குறிப்பிட்ட உட்பிரிவுகளிற்கண்ட குற்றங்களில் எதையாவது தாம் பார்த்துக்கொண்டிருக்கும்போது செய்கிற எந்த நபரையாகிலும் யாதொரு நிலத்திலிருந்தாவது அதைச் சேர்ந்த கட்டிடங்களிலிருந்தாவது அப்புறப்படுத்தலாம்; மேலும், அவருடைய பெயரும் மேல்விலாசமும் தெரியாவிட்டாலும், அவர் தம்முடைய பெயரையாவது மேல்விலாசத்தையாவது கொடுக்கமாட்டேனென்று நிராகரித்தாலும், அவர் பொய்யான பெயரையாவது மேல்விலாசத்தையாவது கொடுத்திருப்பதாக நம்புவதற்கு முகாந்தரமிருந்தாலும், அந்த நபரைப் பிடித்து, உடனே அவரை அதிசமீபத்திலுள்ள மாஜிஸ்ட்ரேட்டினிடமாகிலும் பொலீஸ் ஸ்டேஷனுக்காகிலும் கொண்டுபோகலாம் அல்லது அனுப்பலாம்.

இந்தப் பிரிவின்படி பிடிக்கப்பட்ட எந்த நபரையும், யாதொரு மாஜிஸ்ட்ரேட்டின் முன் கொண்டுவராமல் 24 மணி நேரத்துக்கு மேற்பட மறியல் செய்துவைக்கக்கூடாது.

கிரமப்பிசகாய் நீர்ப்பாய்ச்சிக்கொண்டால் உயர்த்தப்பட்ட தண்ணீர் வரி விதிப்பது.

96. (1) 12-வது பிரிவில் கண்டிருக்கும் நிபந்தனைகளுக்கு விரோதமாகவாவது 99-வது பிரிவின்படி செய்யப்பட்ட யாதொரு விதியை மீறியாவது யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையிலிருந்தாகிலும் தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையிலிருந்தாகிலும் நீர்ப்பாய்ச்சிக்கொள்ளும் காரியத்துக்காகத் தண்ணீர் கொண்டுபோகப்பட்டிருப்பதாய் கலெக்டர் அபிப்பிராயப்படும்போதெல்லாம், கலெக்டரானவர் அந்தத் தண்ணீர் விஷயமாக, இந்த ஆக்டின்படி விதிக்கப்படக்கூடிய வரி எதாகிலும் இருந்தால் அதற்கு உடன்சேர்க்கையாகவும், இது சம்பந்தமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கக்கூடிய விதிகளுக்குட்பட்டும், நீர் பாய்ச்சிப் பயிரிடப்படும் முதல்போகப் பயிருக்குச் சாதாரணமாய்ச் செலுத்தப்படத்தக்க தண்ணீர் வரிக்கு இருபது பங்குக்கு மேற்படாமல் உயர்த்தப்பட்ட தண்ணீர் வரி விதிப்பது சட்ட சம்மதமாகும்:

ஆனால், யாதொரு நபர் இந்தப் பிரிவின்படி உயர்த்தப்பட்ட தண்ணீர் வரி செலுத்துவதற்குட்பட்டிருந்து, அவர் செய்த காரியம் 92-வது பிரிவின்படி குற்றமாகவுங்கூட எற்படுகிற பட்சத்திலே, அவர் - இந்தப் பிரிவின்படி உயர்த்தப்பட்ட தண்ணீர் வரி செலுத்த உட்பட்டவராவதுடன்கூட அந்தக் குற்றத்துக்காகப் பிராது தொடரப்படுவதற்கும் உள்ளாகமாட்டார்.

(2) யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலை அல்லது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலை சேதப்படுத்தப்பட்டோ, மாற்றப்பட்டோ பெரிதாக்கப்பட்டோ அல்லது தடங்கல் செய்யப்பட்டோ இருந்து, அதை மராமத்து செய்வதற்காகிலும் அப்புறப்படுத்துவதற்காகிலும் பிடிக்கும் செலவு 18-வது பிரிவின்படி வசூலிக்கப்படக்கூடியதாயிருக்கும் விஷயங்களிலே, கலெக்டரானவர் - அந்தச் செலவுடன்கூட, அந்தப்படி சேதப்படுத்தப்பட்டதனால், மாற்றப்பட்டதனால், பெரிதாக்கப்பட்டதனால் அல்லது தடங்கல் செய்யப்பட்டதனால் பிரயோஜனமடைந்த நிலத்தின் அனுபோகதாரர்களிடமிருந்து, அப்

படிப்பட்ட தண்ணீர் விஷயமாய் நீர்பாய்ச்சிப் பயிரிடப்பட்ட முதல் போகப் பயிருக்குச் சாதாரணமாய்ச் செலுத்தப்படத்தக்க தண்ணீர் வரிக்கு இருபது பங்குக்கு மேற்படாமல் உயர்த்தப்பட்ட தண்ணீர் வரி வசூலிக்கலாம். கலெக்டருடைய உத்தரவின்மேல் ஜில்லா கலெக்டருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்; அவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

(3) இந்தப் பிரிவில் நிபந்தனை கண்டிருக்கும் உயர்த்தப்பட்ட தண்ணீர் வரியானது - தண்ணீருக்காகப் பிரத்தியேகமான வரி விதிக்கப்படுவதனின்றும் சாதாரணமாய் நிவாரணை செய்யப்பட்டுள்ள நிலங்களுக்குங்கூட விதிக்கப்படத்தக்கதாகும்.

விவரணம்.—இந்தப் பிரிவின் காரியங்களுக்காக, "சாதாரணமாய்ச் செலுத்தப்படத்தக்க தண்ணீர் வரி" என்பது - நஞ்சை வீதப்படி கவர்ன்மென்டுக்குத் தீர்வை செலுத்தும் நிலத்தின் விஷயத்திலே, நிலத்தின்மேல் முதல் போகப் பயிருக்காக ஏற்பட்டிருக்கும் நஞ்சை வீதப்படிக்கான தீர்வையென்று அர்த்தமாகும்.

14-ம் அத்தியாயம்.

உடன்சேர்க்கையான நிபந்தனைகள்.

நிலத்துக்குடையவர்களுடைய கட்டுவேலைகளின் விஷயத்திலே கட்டாயப்படுத்தி வேலை வாங்குவதும் குடிமராமத்து வேலை வாங்குவதும்.

97. 9-வது, 10-வது அத்தியாயங்களில் கண்டிருக்கும் நிபந்தனைகள் - யாதொரு பூஸ்திதியிலிருக்கும் நிலத்துக்குடையவர்களின் நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைகளுக்குங்கூட பிரயோகப்படும் :

ஆனால்,—

(1) அப்படிப்பட்ட கட்டுவேலைகளின் விஷயத்திலே, நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தரின் அலுவல்களைப் பிரதேச கவர்ன்மென்டார் நியமிக்கக்கூடிய உத்தியோகஸ்தர் செய்ய வேண்டும்;

(2) அப்படிப்பட்ட கட்டுவேலைகளின் விஷயத்திலே, வேலையாட்களை அமர்த்திக் கொள்வதற்காகவும் சாமான்களின் கிரயத்துக்காகவும் சேதத்துக்காகக் கொடுக்கப்படும் பிரதிபலனுக்காகவும் அல்லது மற்றப்படியும் கவர்ன்மென்டாரால் செய்யப்படும் சகல செலவுகளும் நிலத்துக்குடையவரிடமிருந்து வசூலிக்கப்படத்தக்கவையாகும்;

(3) பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம்ஸூத்து ஆக்டில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடி, நிலத்துக்குடையவர்களின் சொந்த நிலத்துக்கே உபயோகப்படுகிற யாதொரு கட்டுவேலையின் விஷயத்தில், குடிமராமத்து வேலை செய்யும்படி நிர்ப்பந்தப்படுத்தக்கூடாது.

வரி முதலியவைகளை வசூலிப்பது.

98. இந்த ஆக்டின்படி செலுத்தப்படத்தக்க சகல (ஸெஸ்) வரிகளும் சகாயத்தொகைகளும் செலவுகளும், இந்த ஆக்டின்படி விதிக்கப்படத்தக்க சகல அபராதங்களும் தண்டத்தொகைகளும் இதர தொகைகளும் நிலத்தீர்வை பாக்கியைப்போல வசூலிக்கப்படத்தக்கவையாகும்.

விதிகள் செய்ய அதிகாரம்.

99. பிரதேச கவர்ன்மென்டார் - இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றும் காரியத்துக்காக அப்போதைக்கப்போது முன்னதாகப் பிரசித்தம் செய்த பிறகு விதிகள் செய்யலாம், அந்தப்படி செய்யப்பட்ட எந்த விதிகளையாகிலும் மாற்றலாம் அல்லது ரத்துசெய்யலாம்.

முக்கியமாகவும் முந்திய நிபந்தனைகளின் பொதுத்தன்மைக்கு பாதகமில்லாமலும், கவர்ன்மென்டார்—

(1) இந்த ஆக்டிற்கண்ட யாதொரு நிபந்தனையின்படி எந்த விஷயத்திலாகிலும் நடவடிக்கை நடத்தவேண்டியவராகவோ அல்லது நடத்த அதிகாரம் கொடுக்கப்பெற்றவராகவோ இருக்கும் யாதொரு உத்தியோகஸ்தரின் நடவடிக்கைகளைக் குறித்தும்,

(2) இந்த ஆக்டிற்கண்ட யாதொரு நிபந்தனையின்படி செய்யப்பட்ட உத்தரவுகளின்மேலும் தீர்மானங்களின்மேலும், இந்த ஆக்டில் வேறே விதமாய் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, இன்ன விஷயங்களிலும் இன்ன உத்தியோகஸ்தர்களுக்கும் இன்ன கிட்டங்களுக்குப்பட்டும் அப்பீல் செய்துகொள்ளலாமென்று நிர்ணயிப்பதற்காகவும்,

(3) எந்தக் காரியத்தைச் செய்வதற்காக இந்த ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கிறதோ அந்தக் காரியத்தை இன்ன நபர்கள் செய்யவேண்டுமென்றும், இன்ன காலத்திலோ, இடத்திலோ அல்லது மாதிரியாகவோ செய்யவேண்டுமென்றும் நிர்ணயிப்பதற்காகவும்,

(4) இந்த ஆக்டினால் கொடுக்கப்பட்டிருக்கும் அல்லது விதிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் அல்லது அலுவல்கள் எல்லாவற்றையுமாவது அவைகளில் எதையாவது இன்ன உத்தியோகஸ்தர்களும் இன்ன பிரதேச எல்லைகளுக்குள்ளும் செலுத்தவேண்டும் அல்லது செய்யவேண்டுமென்று நிர்ணயிப்பதற்காகவும்,

(5) இந்த ஆக்ட் 11-வது பிரிவின்படி இன்ன திட்டங்களுக்குட்பட்டுத் தண்ணீர் சர்ப்பரா செய்யலாமென்று நிர்ணயிப்பதற்காகவும், யாதொரு நிலத்துக்கு இன்ன மாதிரியாய் நீர்ப்பாய்ச்சல் ஆதாரங்களை ஏற்படுத்தவேண்டுமென்று ஸ்பஷ்டமாய்த் தெரிவிப்பதற்காகவும்,

(6) மேற்பரப்பில் ஓடும் தண்ணீரை நிறுத்திவைத்துக்கொள்ளக்கூடாதென்று தடுப்பதைக் குறித்தும்,

(7) இந்த ஆக்டின்படி விதிக்கப்படக்கூடிய தண்ணீர் வரி வீதங்களை நிர்ணயிப்பதற்காகவும்,

(8) இந்த ஆக்டுக்காவது அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதிக்காவது உத்தரவுக்காவது விரோதமாகக் கொண்டுபோகப்படும் தண்ணீருக்காக விதிக்கப்படக்கூடிய உயர்த்தப்பட்ட வரி வீதங்களை நிர்ணயிப்பதற்காகவும்,

(9) 35-வது பிரிவின்படி நிலத்துக்குடையவரிடமிருந்தும் ரயத்தினிடமிருந்தும் இன்ன மாதிரியாகவும் இன்ன சங்கியாபரிமாணப்படியும் தண்ணீர் வரி விதித்து வாங்க வேண்டுமென்று நிர்ணயிப்பதற்காகவும்,

(10) மாமூல் நஞ்சை நிலத்தின் அளவை நிச்சயிப்பதற்காகவும்,

(11) மாமூல் நஞ்சை நிலத்தின் ஸ்தானத்தை நிஷ்கரிஷை செய்வதற்காகவும்,

(12) யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையாகிலும் தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலையாகிலும் பல கிராமங்களுக்கு உபயோகப்படும் பட்சத்தில் ஒவ்வொரு கிராமத்தாராவது தனி நபர்களாவது இவ்வளவு குடிமராமத்து வேலைசெய்ய வேண்டுமென்று நிச்சயிப்பதற்காகவும்,

(13) குடிமராமத்து வேலைக்கு பர்த்தியாக 69-வது பிரிவின்படி விதிக்கப்படும் வரியை நிச்சயிப்பதற்காகவும் வசூல் செய்வதற்காகவும், அதுவிஷயமாய்ப் பரிபாலனம் செய்வதற்காகவும்,

(14) பஞ்சாயத்துகளிலும் நீர்ப்பாய்ச்சல் சபைகளிலும் வேலை நடந்தேறுவதற்காகவும், அவைகளின் நடவடிக்கைகளைக் குறித்து ரெகார்ட் வைத்துவருவதற்காகவும்,

(15) பஞ்சாயத்து மெம்பர்களைத் தெரிந்தெடுப்பதற்காகவும், நீர்ப்பாய்ச்சல் சபைகளுக்குப் பிரதிநிதிகளை நியமிப்பதற்காகவும்,

(16) யாதொரு பஞ்சாயத்து அல்லது நீர்ப்பாய்ச்சல் சபையின் ப்ரெஸிடென்டைத் தெரிந்தெடுப்பதற்காகவும்,

(17) யாதொரு பஞ்சாயத்தாராவது நீர்ப்பாய்ச்சல் சபையாராவது இன்ன காரியங்களுக்குப் பணம் செலவிடலாமென்று நிர்ணயிப்பதற்காகவும்,

(18) பஞ்சாயத்தார்களும் நீர்ப்பாய்ச்சல் சபையார்களும் விசாரணைகள் நடத்துவதற்காகவும்,

(19) பஞ்சாயத்தார்களும் நீர்ப்பாய்ச்சல் சபையார்களும் வைத்துவரவேண்டிய கணக்குகள் விஷயமாகவும், அந்தக் கணக்குகளின் தணிக்கை விஷயமாகவும், நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து நிதியைக் கட்டிவைப்பதற்காகவும் பாதுகாப்பில் வைத்திருப்பதற்காகவும் செய்யவேண்டிய ஏற்பாடுகள் விஷயமாகவும்,

(20) யாதொரு நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து அல்லது சபை இன்ன உச்ச வீதப்படி வரி விதிக்கலாமென்று நிர்ணயிப்பதற்காகவும்,

(21) நோடிஸுகள், உத்தரவுகள் ஆகிய இவைகளின் நமூனாவாவது இவைகளைச் சேர்ப்பிக்கும் விதமாவது இந்த ஆக்டினாலாகிலும் வேறெந்த ஆக்டினாலாகிலும் நிர்ணயிக்கப்படாதிருக்கும் பட்சத்திலே, அவைகளின் நமூனாக்களையும், அவைகளைச் சேர்ப்பிக்கும் விதத்தையும் நிர்ணயிப்பதற்காகவும், இன்ன மாதிரியாக எந்த விளம்பரங்களையாகிலும் பிரசித்தஞ்செய்ய வேண்டுமென்று கட்டளையிடுவதற்காகவும்,

(22) இந்த ஆக்டின்படி உத்தியோகஸ்தர்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் அலுவல்களை செய்யும் விஷயத்தில் அவர்களுக்கு உதவியாயிருப்பதற்காகவும்

விதிகள் செய்யலாம்.

இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

நீர்ப்பாய்ச்சல் விஷயமாய் ராஜாங்கத்தாருடைய நிலைமை இன்னதென்று ஸ்பஷ்டமாய் நிர்ணயித்துச் சொல்லும்பொருட்டு சட்டநிருபணம் செய்வது உசிதமென்று 1856-ம் ஞூத்திலேயே கண்டறியப்பட்டது. அந்த வருஷத்தில் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - "தேசத்தின் சாதாரண சட்டம் ஸ்பஷ்டமாய் இன்னதென்பதை, எனவே, ஆறுகளும் இயற்கையாயுள்ள ஓடைகளும் அனுபோகத்திலிராத அல்லது கவர்ன்மென்டைச் சேர்ந்த நிலத்திலுள்ள ஊற்றுகளும் கவர்ன்மென்டுக்குச் சொந்தமானவை என்பதை" விளக்கிக்காட்டுவதற்காக ஒரு ஆக்டின் மசோதா தயார் செய்யும்படி கட்டளையிட்டார். அப்பிரகாரமே அந்தக் கட்டளையின்படி தயார் செய்யப்பட்ட மசோதா ஆக்டில் இந்தப்படி ஒரு நிர்ணயம் கண்டிருந்ததுமல்லாமல், மேலேகண்ட ஜலாதாரங்களிலிருந்து

ஜலத்தை உபயோகித்துக்கொள்வதற்காக "நியாயமான ஒரு வரி விதிக்க கவர்ன்மெண்டாருக்கு நிச்சந்தேகமாய் ஏற்பட்டிருக்கும் பாத்தியதையையும்" கூட அதில் விவரித்திருந்தது. ஆயினும், சட்டநிரூபணம் செய்வதற்கான ஆவசியகம் அவசரமாயிருப்பதாக அக்காலத்திலே தோற்றாதபடியால், பிற்பாடு யோசிப்பதற்காக இந்த மசோதா ஆக்டை விட்டுவைக்க வேண்டுமென்று 1861-ம்௵த்தில் உத்தரவு செய்யப்பட்டது ; அதன்மேல், அனேக வருஷகாலமாக அதுவிஷயமாய்ப் பின்னும் நடவடிக்கை எதுவும் நடத்தப்படவில்லை.

2. "சென்னை ராஜதானிக்கு நீர்ப்பாய்ச்சலைக்குறித்த சட்டம் எதுவும் இராமையினால் உண்டாயிருக்கும் பெருத்த அசௌகரியத்தை"ப் பிரத்தியேகமாய் கவனிக்கவேண்டுமென்று எழுதியிருந்த (Famine) பாமின் கம்மிஷன் என்னும் பஞ்ச விசாரணைக்கம்மிட்டியாரின் ரிபோர்ட் பிரசுரிக்கப்பட்டதன்மேல், இந்த விஷயமானது 1880-ம்௵த்தில் மறுபடியும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்தப்படி ஆரம்பிக்கப்பட்ட ஆராய்ச்சியின் பலனாக, "நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைகளைக் குறித்தும் மராக்கலம் செலுத்துவது சம்பந்தமான கட்டுவேலைகளைக்குறித்துமுள்ள சட்டத்தை ஸ்திரமாய் ஏற்படுத்தும்" நோக்கத்துடன் 1884-ம்௵த்திலே புதிதாக ஒரு மசோதா ஆக்ட் தயார்செய்யப்பட்டது. இந்த மசோதா ஆக்டானது முக்கியாம்சத்தில் 1879-ம்௵த்திய பம்பாய் நீர்ப்பாய்ச்சலைக்குறித்த ஆக்டை ஆதாரமாகக்கொண்டு தயார்செய்யப்பட்டது. இது ஒரு ஸெலெக்ட் கம்மிட்டியாரின் ஆலோசனைக்கு அனுப்பப்பட, அவர்கள் அதில் சில மாறுதல்களைச் செய்து, அவர்களில் பெரும்பான்மையோர் அதிற்கண்ட நிபந்தனைகளுக்கு அனுகூலமாக அபிப்பிராயப்பட்டு ரிபோர்ட் எழுதினார்கள். ஆயினும், அந்தப்படி மாற்றப்பட்ட மசோதாவானது சென்னை ராஜதானியின் நிலைமைகளுக்குப் பொருத்தமாயில்லையென்று ரெவினியு போர்டார் சொல்லிவிட்டார்கள். ஆகவே, 1888-ம்௵த்தில் இந்த மசோதா ஆக்டானது கவர்ன்மெண்டாருடைய உத்தரவின்படி ஆக்டாக ஜாரி செய்யபபடாமல் நிறுத்திவிடப்பட்டது.

3. பொதுஜனங்களின் க்ஷேமத்தை உத்தேசித்து நீர்ப்பாய்ச்சல் விஷயமாய் ராஜாங்கத்தார் மேல்விசாரணைபண்ணி ஒழுங்கேற்படுத்தக்கூடியவர்களாயிருக்கும்பொருட்டு நிஷ்கரிஷையாக ஒரு சட்டதிட்டம் ஏற்பட்டிராததனாலே உண்டாகும் கஷ்டங்கள் கவர்ன்மெண்டாரே கவனிக்கும்படியாக மேலுக்குமேல் உண்டாய்க்கொண்டுவந்தன. ஆகவே, சட்டநிரூபணம் செய்வது உசிதமாயிருக்குமா என்பதைப்பற்றி அவர்கள் 1898-ம்௵த்தில் ரெவினியு போர்டாருடைய அபிப்பிராயம் கேட்டார்கள். ரெவினியு போர்டாருடைய யோசனையைக் கேட்டபோது, கவர்ன்மெண்டார் - ஸிவில் கோர்ட்டுகளில் செய்யப்பட்ட பற்பல தீர்மானங்களையும் ஒப்பிட்டுப் பார்த்து, பொதுஜன நன்மைக்கு மிகவும் அனுகூலமாயிருக்கும்படியாக நீர்ப்பாய்ச்சல் விஷயமாய் விசாரணை செய்வதற்கு ராஜாங்கத்தாருக்கு சர்வாதிகாரம் ஏற்படும்படி செய்யும்பொருட்டும் அப்படிப்பட்ட அதிகாரத்தை நிஷ்கரிஷை செய்யும்பொருட்டும் எவ்வகையாகவும் எவ்வளவுமட்டிலும் சட்டநிரூபணம் செய்வது அவசியமென்பதைக்குறித்து ஜில்லா உத்தியோகஸ்தர்களுடன் கலந்து யோசித்து ரிபோர்ட் செய்யும்படி போர்டாரைக் கேட்டுக்கொண்டார்கள். இதற்கு பதிலாக போர்டார் தெரிவித்திருந்த தங்களுடைய தீர்மானத்திலே இந்த விஷயத்தைக் குறித்து விஸ்தாரமாய் எழுதியிருந்தார்கள். அதில் அடங்கியிருக்கும் சிக்கலான சில அம்சங்களைக்குறித்து இன்னும் ஆலோசனை செய்யப்பட்டுவருகையில், சட்டநிரூபணம் செய்யவேண்டுமென்று போர்டார் சிபாரிசு பண்ணினதற்கு மிகவும் அனுசரணையாக இந்துதேசத்து நீர்ப்பாய்ச்சல் விசாரணைக்கம்மிட்டியார் தங்களுடைய ரிபோர்ட்டிலே எழுதினார்கள். ஏனென்றால், ஷை விசாரணைக்கம்மிட்டியார் இந்த ராஜதானிக்கு நீர்ப்பாய்ச்சலைக்குறித்த சட்டம் ஏற்படுத்துவது அவசியமென்று தங்களுடைய ரிபோர்ட் 2-வது வால்யுமில்—முக்கியமாய் 272 முதல் 286 வரையிலுள்ள பாராக்களிலே—மனப்பூர்வமாய் எழுதினார்கள். சட்டநிரூபணம் செய்வது அவசியமென்பதைக்குறித்து இந்த அதிகாரிகள் ஒரேமாதிரியாய் அபிப்பிராயப்பட்டு முடிவுக்கு வந்திருப்பதை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டு, நீர்ப்பாய்ச்சலைக்குறித்த மசோதா ஆக்ட் ஒன்றைத் தயார்செய்யும் காரியத்துக்காகவே 1905-ம்௵த்தில் ஒரு உத்தியோகஸ்தரைப் பிரத்தியேகமாய் ஏற்படுத்தினார்கள். இந்த உத்தியோகஸ்தர் பிரயாசை எடுத்துக்கொண்டு எழுதிவைத்த விஷயங்கள நீண்டகாலமாக ஆராய்ச்சி செய்யப்பட்டுவந்தன. அதன்பயனாக, 1908-ம்௵ மார்ச் மாதத்தில் ஒரு மசோதா ஆக்டானது - தெரிந்தெடுக்கப்பட்ட சில ரெவினியு உத்தியோகஸ்தர்களுடனும் ஸர்க்காரைச் சேராமல் ஜனப்பிரதிநிதிகளாயிருக்கும் தனிநபர்களுடனும் சங்கங்களுடனும் கலந்து யோசித்து ரிபோர்ட் செய்யும்படியாக ரெவினியு போர்டாருக்கு அனுப்பப்பட்டது. மேலும், ஹைகோர்ட்டாரும் அட்வொகேட் ஜெனராலும் தங்களுடைய அபிப்பிராயங்களை கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்கும்படி ஏககாலத்திலே கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். அல்லாமலும், பிரஸ்தாப விஷயங்களைக்குறித்து பப்ளிக் வொர்க்ஸ் இலாகாவைச் சேர்ந்த தகுதியான உத்தியோகஸ்தர்கள் பொதுவாய்த் தெரிவிக்கும் அபிப்பிராயங்களைத் தெரிந்துகொள்வதற்காகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மேற்படி அதிகாரிகளிடமிருந்து கிடைத்த பதில்களினால் இந்த மசோதா ஆக்டிலே அடியோடு சில மாறுதல்கள் செய்யவேண்டிய ஆவசியகம் ஏற்படவும், 1909-ம்௵த்தின் கடைசியில் ஒரு புனர் மசோதா தயார்செய்யப்பட்டது. முந்திய மசோதா ஆக்டில் தோஷம் கூறுவதற்கு இடம் கொடுத்த முக்கியமான குறைகளை நீக்கி இந்த மசோதா தயார்செய்யப்பட்டது. இந்தியாவிலுள்ள இதர மாகாணங்களில் முந்தின 35 வருஷகாலத்திலே என்ன முறைகளை

அனுசரித்து நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான சட்டநிரூபணம் செய்யப்பட்டு வந்ததோ அந்த முறைகளைப் பெரும்பாலும் ஆதாரமாகக்கொண்டு, இந்தத் திருத்தமான மசோதா ஆக்ட் தயார்செய்யப்பட்டது. இது - ஆராய்ச்சி செய்யப்படுவதற்காக 1908-ம் வருஷத்து மசோதா ஆக்டானது எந்த அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டதோ அதே அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது; மேலும், இந்த மசோதா ஆக்டானது - பொதுஜனங்கள் குணதோஷம் கண்டெழுதித் தெரிவிக்கும் அபிப்பிராயத்தினால் உண்டாகும் பிரயோசனத்தை கவர்ன்மென்டார் பூர்த்தியாய் அடையக்கூடியவர்களாயிருக்கும்பொருட்டு, விவரமாகப் பிறப்பிக்கப்பட்ட (1909-ம் வருஷம் நவம்பர்மீ 19உ ரெவினியு இலாகாவில் பிறப்பிக்கப்பட்ட 3172-ம் நெ. கவர்ன்மென்ட் உத்தரவாகிய) ஒரு உத்தரவு சகிதமாய் சமாசாரப் பத்திராசிரியர்களுக்கு அனுப்பப்பட்டது. இந்தப்படி அனுப்பினதனால் கிடைத்த அபிப்பிராயங்கள் காரணமாக, இந்த திருத்தமான மசோதா ஆக்டானது விஷயத்திலும் ரூபத்திலும் பின்னும் மாறுதல்கள் செய்யப்பெற்றது. மேலும், அப்பிரகாரம் திருத்தப்பட்டபடிக்குள்ள மசோதா ஆக்ட் 1914-ம் வருஷத்திலே இந்தியா கவர்ன்மென்டாரால் அங்கீகரிக்கப்பட்டது. மேற்படி மசோதா ஆக்டை ஆலோசனைக்குக் கொண்டுவருவதற்காக, 1914-ம் வருஷம் நவம்பர்மீ 20உ கூடுவதாயிருந்த சட்டநிரூபண சபையின் கூட்டத்தில் பிரேரேபனை செய்யப்படுமென்று அறிக்கை செய்யப்பட்டது. ஆயினும், இந்த மசோதா ஆக்ட் விஷயமாய்ப் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருந்த கௌரவம்பொருந்திய மெம்பர் அதைச் சபையில் ஆலோசனைக்குக் கொண்டுவருவதாய்ப் பிரேரேபனை செய்வதற்கு முன்னதாக, பிரஸ்தாப விஷயத்தைப்பற்றிய ஆலோசனையை யுத்தம் முடிந்தபிறகு சௌகரியமான ஒரு தேதி வரையில் தள்ளிவைக்கவேண்டுமென்று பிரேரேபனை செய்யப்பட்டது. இந்த மசோதா ஆக்ட் விஷயமாய்ப் பொதுஜனங்கள் மனதில் கொண்டிருந்த தப்பு அபிப்பிராயங்களை நீக்கும்பொருட்டு அதை ஆலோசனைக்குக் கொண்டுவருவது உசிதமாகுமென்னும் முகாந்தரத்தைக்கொண்டு கவர்ன்மென்டார் பின்னே சொல்லப்பட்ட பிரேரேபனைக்கு ஆட்சேபனை செய்தார்கள். ஆனபோதிலும், நிறுத்திவைக்கவேண்டுமென்னும் பிரேரேபனையானது கடைசியில் நிறைவேற்றப்பட்டு, இந்த மசோதா ஆக்ட் விஷயமாய்ப் பின்னும் நடவடிக்கை நடத்துவதை யுத்தம் முடிகிறவரையில் நிறுத்திவைக்க வேண்டியிருந்தது.

4. அதற்குப் பிற்பட்டு, நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான உரிமைகள் விஷயமாய் நியாய விசாரணை முறையில் சில அபிப்பிராயங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் மிகவும் பிரதானமானது இ. லா. ரி. சென்னபட்டணம் 40-வது வால்யும் 886-ம் பக்கத்தில் ரிபோர்ட் செய்திருக்கும் உர்லாம் கேஸில் ப்ரிவிகௌன்ஸில் என்னும் மந்திராலோசனை சபையார் செய்திருக்கும் தீர்ப்பேயாகும். வரி செலுத்தாமல் நீர்ப்பாய்ச்சப் பெறுவதற்கு யாதொரு பூஸ்திதி விஷயத்திலுள்ள உரிமையை, அந்த பூஸ்திதி கொடுக்கப்பட்ட காலத்தில் எவ்வளவு தண்ணீர் பெற நிலத்துக்குடையவருக்கு பாத்தியதையிருந்ததோ அதை அனுசரித்து நிஷ்கரிஷை செய்யவேண்டுமென்று இந்தக் கேஸில் ஷை சபையார் அபிப்பிராயப்பட்டார்கள். இதற்குமுன்னே பொதுவாய் அர்த்தங்கொள்ளப்பட்டிருக்கிறபடியும் பரிபாலனம் செய்யப்பட்டு வந்திருக்கிறபடியுமுள்ள தண்ணீர் வரி விதித்து வாங்குவதற்குச் சம்பந்தப்பட்ட சட்டத்தில் மேற்படி தீர்ப்பினால் பிரமாதமான மாறுதல் ஏற்பட்டுவிட்டது. ஷை சட்டம் என்னவென்றால், நிலையாய்ப் பைசலேற்பாடு செய்யப்பட்ட காலத்திலாவது இனாம் பைசலேற்பாடு செய்யப்பட்ட காலத்திலாவது இருந்திருந்த ஜலாதாரங்களிலிருந்து வரி செலுத்தாமல் நீர்ப்பாய்ச்சப் பெறுவதற்குள்ள ஜமீன்தாரி உரிமையாகிலும் இனாம்தாரி உரிமையாகிலும் அப்போது எவ்வளவு நஞ்சைப்பயிர் இருந்ததோ அதற்கு மாத்திரமே ஏற்பட்டதென்பதாகும். நீர்ப்பாய்ச்சல் வரியைக்குறித்த 1865-ம் வருஷத்து 7-வது ஆக்டின் சொல்லமைப்பு தெளிவாயிராததன் காரணமாக ஏற்படும் கஷ்டங்களைக் குறித்தும் மேற்படி சபையார் சில அபிப்பிராயங்கள் தெரிவித்தார்கள். பிரஸ்தாப சட்டத்தைத் திருத்தியெழுதி, ஷை ஆக்டின் சொல்லமைப்பிலுள்ள குறைவு காரணமாக ஏற்படும் சந்தேகத்தை ஒழிக்கும் நோக்கத்துடன், அந்த ஆக்டைத் திருத்துவதற்கான மசோதா ஆக்ட் ஒன்று தயார் செய்யப்பட்டதுமல்லாமல், அதை ஒரு அவசரச் சட்டமாகக் கொண்டுவரவும் நிச்சயிக்கப்பட்டது. ஆனால், யுத்தத்தின்பொருட்டு இதுவும் நிறுத்திவிடப்பட்டது. இதர தீர்ப்புகள் ஆற்றங்கரை சம்பந்தமான உரிமைகளுக்கும் அந்த உரிமைகளை ஆதாரமாகக்கொண்டு ஆறுகள், ஓடைகள் ஆகிய இவைகளுக்கு ஏற்படும் சொத்துவத்துக்கும் சம்பந்தப்பட்டன. ஆனால், ஆச்சரியம் உண்டாகும்படியான அளவுக்கு அவைகளில் சில ஒன்றோடொன்று முரண்பட்டவையாயிருக்கின்றன.

5. மேற்பட்ட தீர்மானங்களின் காரணமாக ஏற்பட்ட சந்தேகங்களையும் கஷ்டங்களையும் நிவர்த்தி செய்யும்படியாக, 1914-ம் வருஷத்து மசோதா ஆக்ட் திருத்தியெழுதப்பட்டிருக்கிறது. தண்ணீர் வரிகள், அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட மாமூல் நஞ்சை விஷயம் ஆகிய இவைகளைக் குறித்தும், குடிமராமத்தைக் குறித்தும், நீர்ப்பாய்ச்சலுக்குச் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துகளைக்குறித்தும் ஏற்பட்டுள்ள நிபந்தனைகளையும் மேற்படி மசோதா ஆக்டில் சேர்த்து அதை ஒரு விரிவான சட்டமாக்க இப்போது சமயம் வாய்க்கவே அந்தப்படியே செய்யப்பட்டிருக்கிறது. நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான பிரசினைகளைக்குறித்த மசோதா ஆக்டுகள் சமீப வருஷங்களில் இந்தியா கவர்ன்மென்டாருக்கு அனுப்பப்பட்டபோதெல்லாம், அவர்கள் - முக்கியமாய்த் தண்ணீர் வரிக்கும் குடிமராமத்துக்கும் பிரயோகப்படும் விரிவான சட்டதிட்டம் ஒன்றைத் தயார்செய்யும்படி இந்த கவர்ன்மென்டாரை வற்புறுத்

தியிருக்கிறார்கள். ஆனால், இந்த கவர்ன்மெண்டார் - தங்கள் கையிலிருந்த சட்டத்தின் அவசரத்தை உத்தேசித்து அந்தப்படி செய்ய எல்லா சமயங்களிலும் ஆட்சேபனை செய்து வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆட்சேபனை இனிமேல் செய்யமுடியாது. ஆகவே, விரிவான சட்டதிட்டம் ஒன்று ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறது.

6. இந்த மசோதா ஆக்டின் வரலாற்றை இவ்விதம் விஸ்தரித்துச் சொன்னபிறகு, அதன் நிபந்தனைகளின் முக்கியமான நோக்கங்களையும் காரணங்களையும் விளக்கிக்காட்ட வேண்டியதாயிருக்கிறது.

6, 7, 10, 11, 12-ம அத்தியாயங்கள் நீங்கலாக, இந்த மசோதா ஆக்டானது - பொதுவாய் 1879-ம்௵த்திய பம்பாய் நீர்ப்பாய்ச்சலைக் குறித்த ஆக்டையும் 1905-ம்௵த்து பர்மா கனால் (கால்வாய்) ஆக்டையும் மாதிரியாகக்கொண்டு எழுதப்பட்டிருக்கிறது. ஆறுகள், ஓடைகள் முதலியவைகளின் தண்ணீர் விஷயமாய் மேல்விசாரணைசெய்ய ராஜாங்கத்தாருக்கு இன்ன உரிமைகள் உண்டென்று இந்த மசோதா ஆக்டில் நிர்ணயித்திருக்கிறது.

7. **1-ம் அத்தியாயம்.**—இந்த அத்தியாயத்திலே பிரதமத்தில் அவசியமாயுள்ள அர்த்தம் கூறும் பகுதிகள் அடங்கியிருக்கின்றன. இவைகள் பிரதேச நிலைமைகளுக்குத் தக்கபடி செய்யவேண்டிய சில திருத்தங்களைச் செய்து பெரும்பாலும் பர்மா ஆக்டிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. 'கால்வாய்' என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக 'நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலை' என்னும் சொற்றொடரை இங்கே அமைத்துக்கொண்டிருப்பதை முக்கியமாய் எடுத்துச்சொல்லலாம். இந்த ஆக்டைப் பிரயோகிக்கும் அலுவல் செய்யவேண்டியவர்களாயிருக்கிற உத்தியோகஸ்தர்களுக்கு அதன்படி அதிகாரங்கள் கொடுப்பதற்காக 5-வது பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது ; மேலும், பிரதேச கவர்ன்மெண்டார் இது விஷயமாய்த் தங்களுக்குள்ள அலுவல்களை இந்தப் பகுதியினால் இதர உத்தியோகஸ்தர்களுக்கு ஒப்பிக்கக்கூடியவர்களாயிருக்கிறார்கள்.

8. **2-ம் அத்தியாயம்.**—கவர்ன்மெண்டாரைச் சேராதவையாயிருக்கும் கட்டுவேலைகளின் விஷயத்திலுள்ள உரிமைகளைப்பற்றியும் பொதுக் காரியங்களுக்காக அவைகளின் மேல் விசாரணையை ஏற்றுக்கொள்வதைப்பற்றியும் இதில் சொல்லியிருக்கிறது.

இந்துதேசத்து வழிநடை முதலிய வசதி உரிமையைக் குறித்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளையும் இந்த ராஜதானியில் நீதி விவகார சம்பந்தமாய்ச் செய்யப்பட்ட அனேக தீர்ப்புகளையும் அனுசரித்து, ஆறு முதலியவைகளின் தண்ணீர் விஷயமாய் மேல்விசாரணை செய்வதற்கு ராஜாங்கத்தாருக்கு மேலான உரிமை உண்டென்று 6-வது பகுதியில் நிர்ணயித்திருக்கிறது.

பகுதி 7.—இந்தப் பகுதியினால், பிரதேச கவர்ன்மெண்டார் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாய் யாதொரு ஆறு அல்லது ஓடையிலுள்ள தண்ணீரையாவது இயற்கையாய்ச் சேர்ந்துள்ள தண்ணீரையாவது ஏற்கனவேயுள்ள அல்லது ஏற்படுத்த உத்தேசித்திருக்கிற நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான யாதொரு கட்டுவேலை அல்லது தண்ணீரை வடிப்பதற்கான யாதொரு கட்டுவேலையின் காரியத்துக்காக உபயோகப்படுத்துவதும், கவர்ன்மெண்டாரால் அமைக்கப்படடிராத அல்லது அவர்களால் பராமரிக்கப்பட்டுவாராத யாதொரு கட்டுவேலையின் மேல்விசாரணையை ஏற்றுக்கொள்வதும் சாத்தியமாகிறது. இந்த அத்தியாயத்தின்படி விளம்பரம் பிரசுரிப்பதன்மேல், சேதத்துக்காகப் பிரதிபலன் கொடுப்பதற்கு மாத்திரம் உட்பட்டு, மேல்விசாரணை புரிவதற்கும் ஒழுங்கேற்படுத்துவதற்கும் பிரதேச கவர்ன்மெண்டாருக்குப் பூர்த்தியான அதிகாரம் உண்டாகிறது. பிரதிபலன் கொடுப்பது விஷயமாய் 8-ம் அத்தியாயத்தில் நிபந்தனை கண்டிருக்கிறது.

பகுதி 8.—எந்தத் தண்ணீர் விஷயமாய் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதோ அந்தத் தண்ணீரின் விஷயத்திலாவது கவர்ன்மெண்டாருக்குச் சொந்தமாயுள்ள தண்ணீரின் விஷயத்திலாவது தனி நபர்கள் பிரவேசிக்காதபடி இதில் தடுத்திருக்கிறது. ஏற்கனவே உபயோகப்படுத்திக்கொள்ளப்பட்டிராத தண்ணீர் விஷயமாய் உரிமைகளை, விளம்பரத்தின் தேதிக்குப் பிறகு கொடுக்கப்படும் க்ரான்ட் (பட்டயம்) மூலமாக மாத்திரமே தனி நபர்கள் அடையலாம்.

இந்தப் பகுதியில், தனி நபர்களுக்கு இப்போது இருந்துவரும் உரிமைகளுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்தியிருப்பதுந்தவிர, க்ரான்ட் மூலமாகவன்றி மற்றப்படி இனிமேல் உரிமைகள் எவையும் ஏற்படாதபடி தடுக்கப்பட்டும் இருக்கிறது. ஆற்றங்கரை உரிமைகளுக்குச் சம்பந்தப்பட்ட சித்தாந்தத்தின் காரணமாக ஏற்படும் சிக்கல்கள் இந்த நிபந்தனையினால் நீங்கிவிடும்.

9. **3-ம் அத்தியாயம்.**—இந்த அத்தியாயமானது-பொதுவாய்த் தண்ணீர் விஷயமாகவும் கட்டுவேலைகள் விஷயமாகவும் மேல்விசாரணை செய்வதற்கும் தண்ணீர் சர்ப்பரா செய்வதற்கும் சம்பந்தப்படுகிறது. இதற்கும் பர்மா ஆக்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது. யாதொரு நீர்க்காலுக்காகிலும் யாதொரு நபருக்காகிலும் தண்ணீர் சர்ப்பரா செய்வது விஷயமாய் இன்னின்ன விசேஷ சந்தர்ப்பங்களில் பிரவேசிப்பது நியாயமாகுமென்று அந்த சந்தர்ப்பங்களை மாத்திரம் ஷை பர்மா ஆக்டில் சொல்லியிருக்கிறது.

நீர்ப்பாய்ச்சல் விஷயமாய் கவர்ன்மெண்டாருக்குள்ள பாத்தியதைகளை யாதொரு சாஸனமூலமாக வரையறுக்காதிருப்பதனால் உண்டாவதாக நீர்ப்பாய்ச்சல் விசாரணைக் கம்மிட்டியார் குறிப்பிட்டிருக்கும் அசௌகரியத்தை உத்தேசித்து, நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைகளை ஏற்படுத்துவது சம்பந்தமாகவும் தண்ணீர் சர்ப்பரா மேல்விசாரணை சம்பந்தமாகவும் கவர்ன்மெண்டாருக்கும் நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தர்களுக்கும் இன்ன அதிகா

ரங்கள் இருக்கின்றனவென்று குறிப்பிட்டு நிர்ணயிப்பது உசிதமானதென்று எண்ணப்பட்டது. அப்பிரகாரமே, இந்த மசோதா ஆக்டின் 11-வது 12-வது பகுதிகள் எழுதப்பட்டிருக்கின்றன : ஆனால், விசேஷ ஒப்பந்தங்கள் ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களை இதில் அடக்காமல் விலக்கியிருக்கிறது.

மேலே நிர்ணயிக்கப்பட்ட அதிகாரங்களை விதிமுறையில்லாமல் உபயோகிக்காதபடி தடுப்பதற்காக, நீர்ப்பாய்ச்சப்பட்ட நிலத்தின் சொந்தக்காரர்களுக்கு, உள்ளபடி நேரிட்டிருக்கும் சேதத்தின் விஷயமாய் 8-ம் அத்தியாயத்தின்படி கொடுக்கத்தக்க பிரதிபலன் ரூபமாக விசேஷ பாதுகாப்பு ஏற்படுத்திபிருக்கிறது. ஆனால், ஷை சொந்தக்காரர்கள் தடங்கல் உண்டாகும்படியாக நடவடிக்கை நடத்துவதற்கு இடம் இராதபடி பிந்தியுள்ள 83-வது பகுதியினால் தடை செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதியினால், கவர்ன்மென்டாருக்கும் கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களுக்கும் சாஸனமூலமாய்க் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைச் செலுத்துவதைத் தடுப்பதற்காக இன்ஜங்ஷன் என்னும் தடை உத்தரவு பிறப்பிக்கும்படி ஸிவில் கோர்ட்டில் யாதொரு வியாஜ்ஜியம் தொடருவதற்காவது விண்ணப்பம் செய்துகொள்வதற்காவது தடை ஏற்படுகிறது.

13 முதல் 17 வரையிலுள்ள பகுதிகள்.—ஸர்வே செய்யும் காரியத்துக்காகவும் பார்வையிடும் காரியத்துக்காகவும், நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைகளையாவது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலைகளையாவது ஒழுங்குபடுத்திப் பாமரித்து நிர்வாகம் செய்வதற்கு அவசியமான வேறே யாதொரு நடவடிக்கை நடத்தும் காரியத்துக்காகவும் நிலத்திலோ கட்டிடங்களிலோ பிரவேசிப்பதற்காக வேண்டிய அதிகாரமானது இந்தப் பகுதிகளினால் கிடைக்கிறது.

பகுதி 18.—பர்மா ஆக்ட் 36-வது பிரிவை அனுசரித்துள்ள இந்தப் பகுதியிலே, அப்படிப்பட்ட கட்டுவேலைகளுக்கு யாதொரு சேதமுண்டாக்கின நபர் இன்னாரென்று அடையாளம் கண்டுபிடிக்கமுடியாவிட்டால், அந்த சேதத்தைச் சரிப்படுத்துவதற்காகப் பிடிக்கும் செலவை, அந்த சேதத்தினால் பிரயோஜனமடையும் நிலங்களின் அனுபோகதாரர்களிடமிருந்து வசூல்செய்வதற்காக நிபந்தனை கண்டிருக்கிறது ; மேலும், எந்த சந்தர்ப்பங்களில் மராமத்து செய்வதற்காக வாஸ்தவத்தில் பிடிக்கும் செலவானது சொற்பமாயிருந்து, குற்றவாளியானவன் செல்வாக்குள்ள இதர நபர்களின் போதனையினாலேயே சேதம் உண்டாக்கியிருந்தபோதிலும், செய்யப்பட்ட கெடுதியினால் நீர்ப்பாயும்படியான நிலத்தில் ஒரு பெரிய விஸ்தீர்ணம் பாதிக்கப்பட்டு, அநியாயமாய்த் திருப்பிக் கொண்டுபோகப்பட்ட ஜலம் பாயப்பெறுவதற்குச் சிலாக்கியமான பாத்தியதையுள்ள ரயத்துகளுக்குப் பெருத்த துன்பம் உண்டாகிறதோ, அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களுக்குப் பொருந்தும்படியாக, பிரயோஜனமடையும் நிலத்தின் தண்ணீர் வரியில் இருபது மடங்குக்கு அதிகப்படாமல் ஒரு பெருத்த அபராதத்தை விதிப்பதற்காக 96-வது பகுதியில் பின்னும் நிபந்தனை கண்டிருக்கிறது.

பகுதி 19.—பூஸ்திதிகளிலுள்ள நிலத்துக்கும் ரயத்வாரி நிலத்துக்கும் கூட்டாய் உபயோகபபடுகிற நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைகளின் மராமத்துக்காகப் பிடிக்கும் செலவுத் தொகையில் ஒரு பாகத்தை வசூலிக்கும் விஷயத்தைக்குறித்து இந்தப் பகுதியில் சொல்லியிருக்கிறது. இதனால் பாதிக்கப்படும் ரயத்துகளின் க்ஷேமத்தை உத்தேசிக்கும்போது, அவசியமான மராமத்துகளை ஆலசியமில்லாமல் செய்துமுடிக்க கவர்ன்மென்டாருக்கு அதிகாரம் இருக்கவேண்டும் ; அந்தப்படி செய்திருக்கும் செலவினால் யாதொரு பூஸ்திதி பிரயோஜனமடைந்தால், அந்த நிலத்துக்குடையவர் ஜலசர்ப்பரா செய்யப்பெறுவதற்காகப் பிரத்தியேகமாய் வரி செலுத்திவந்தாலன்றி மற்றப்படி, அவர் மராமத்துக்காகப் பிடித்திருக்கும் செலவில் ஒரு பாகத்தைச் செலுத்த உட்படுவது நியாயமாகும்.

10. 4-ம் அத்தியாயம்.—இந்த அத்தியாயத்திலே நீர்க்கால்களைக்குறித்துச் சொல்லியிருக்கிறது. நீர்க்கால்களை ஏற்படுத்தும்படியாக நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளப்படுவதன்மேல், அந்த நீர்க்கால்களை ஏற்படுத்தும் விஷயத்தில் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கைமுறை இன்னதென்று 20 முதல் 27 வரையிலுள்ள பகுதிகளில் நிர்ணயித்திருக்கிறது; 28-வது பகுதியினாலோ, நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தர் தாமாகவே புதிதாய் நீர்க்கால்களை ஏற்படுத்துவதற்கோ ஏற்கெனவே, இருக்கும் நீர்க்கால்களைப் பெரிதாககவோ மாற்றவோ சீர்திருத்தவோ அவருக்கு அதிகாரம் உண்டாகிறது. நீர்ப்பாய்ச்சல் விஷயமான யாதொரு பெருத்த ஏற்பாடு சம்பந்தமாய் நீர்க்கால்களை விரைவில் ஏற்படுத்துவதற்குப் போதுமான நிபந்தனை கண்டிருப்பது முக்கியமென்பதை உத்தேசித்தும், அந்த ஏற்பாடுகள் தக்க காலத்தில் விருத்தியடைந்து திரவியசம்பந்தமாய் இன்ன காலத்துக்குள் இவ்வளவு லாபம் உண்டாகக்கூடுமென்று முன்னமே எதிர்பார்த்தபடி லாபம் தவறாமல் கிடைக்கும்பொருட்டும், தனிநபர்கள் விண்ணப்பம் செய்துகொள்ளுகிற விஷயத்திலே நிலத்தை எடுத்துக்கொள்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கைமுறையை, நூதன கட்டுவேலைகளின் காரியத்துக்காக யாதொரு நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தர் தாமாகவே நிலமெடுத்துக்கொள்ளும் விஷயங்களுக்குப் பிரயோகப்படுகிற 28-வது பகுதியைச்சேர்ந்த விலக்குநிபந்தனையிலே வேண்டுமென்று சுலபப்படுத்தியிருக்கிறது.

பகுதி 29.—நீர்க்கால்களை ஏறபடுத்துவதற்காவும் பெரிதாக்குவதற்காகவும் மாற்றுவதற்காகவும் சீர்திருத்துவதற்காகவும் நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தர் செலவழித்திருக்கும் தொகையானது - இந்தப் பகுதியின்படி, அந்த நீர்க்கால்களிலிருந்து ஜலம் பாய்ச்சப்பெறும் நிலத்தின் சொந்தக்காரர்கள் அல்லது அனுபோகதாரர்களிடமிருந்து வசூல் செய்யத்தக்கதாகும்.

இந்த அத்தியாயத்திற்கண்ட நிபந்தனைகள் பெரும்பாலும் பர்மா ஆக்டிலிருந்தும் பம்பாய் ஆக்டிலிருந்தும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆயினும், ஒரு விஷயத்தில் ஷை ஆக்டுகளில் இருப்பதைப்போலல்லாமல் வித்தியாசமாக எழுதியிருக்கிறது; அதாவது, நீர்க்கால்கள் ஏற்படுத்தப்பட்ட பிறகு கவர்ன்மெண்டாருடைய சொத்தாக இருந்து, அவைகளின் ஸ்வாதீனம் விண்ணப்பதாரர்களுக்குக் கொடுக்கப்படமாட்டாது என்பதுதான். இந்த ராஜதானியில் ஏற்பட்டிருக்கும் மாமூலை அனுசரித்துத்தான் இந்த வித்தியாசம் செய்திருக்கிறது. அந்த மாமூல் என்னவென்றால், நீர்ப்பாய்ச்சுவதற்கான வாய்க்கால்கள் - அவைகளை உபயோகித்துக்கொள்வதற்காகப் பொது ஜனங்களுக்கோ தனி நபர்களுக்கோ ஏற்பட்டிருக்கும் பாத்தியதைகளுக்குட்பட்டு, சாதாரணமாய் ராஜாங்க சொத்தாக பாவிக்கப்படுகின்றனவென்பதே. இந்தப்படி பாவிப்பதனால், இந்த மசோதா ஆக்ட் சுலபமாவதுமாத்திரமேயல்லாமல், நீர்க்கால்களின் சொத்துவ பாத்தியதையானது வெவ்வேறாகவும் அனேகமாய் ஒன்றுக்கொன்று எதிரிடையாகவுமுள்ள பாத்தியதையுடையவர்களாய் இத்தனைபேர் என்று நிஷ்கரிஷை ஏற்பட்டிராத தனிநபர்களிடம் சங்கிரமித்திருந்தால், தவறாமல் பாத்தியதைகள் விஷயமாயும் பொறுப்புகள் விஷயமாயும் உண்டாகக்கூடிய விவாதங்களை உண்டாகாதபடி தடுக்கும்படியான அனுகூலமும் இருக்கிறது.

11. 5-ம் அத்தியாயம்.—இதில் தண்ணீர் வரியைப்பற்றி சொல்லியிருக்கிறது. நீர்ப்பாய்ச்சல் வரியைப்பற்றிய 1865-ம் ஹூ த்திய சென்னபட்டணத்து ஆக்டில் கண்டிருக்கும் நிபந்தனைகளை இந்த அத்தியாயத்தில் சேர்த்திருக்கிறது. ஆயினும், 'உடன்பாடுகளை'ப் பற்றி இதில் குறிப்பிடாமல விட்டுவிட்டிருக்கிறது. ஏனென்றால், இந்த வார்த்தையின் காரணமாக ஒன்றுக்கொன்று விரோதமாயுள்ள அனேக தீர்ப்புகள் ஏற்படுவதற்கு இடம் உண்டாயிருக்கிறது. 1913-ம் ஹூ த்து 2-வது ஆக்டினால் நீர்ப்பாய்ச்சல் வரியைப்பற்றிய சென்னபட்டணத்து ஆக்டில் செய்யப்பட்ட திருத்தங்களையும் இந்த அத்தியாயத்தில் சேர்த்திருக்கிறது. ஆனால், 1-A பிரிவைச்சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவுமாத்திரம் விட்டுவிடப்பட்டிருக்கிறது. அந்த உட்பிரிவின்படி, நிலத்துக்குடையவர் 1911-ம் ஹூ த்துக்கும் 1913-ம் ஹூ த்துக்கும் மத்தியில் ஏதாவது தொகை செலுத்தியிருந்து, அந்த தொகையானது வசூல் காலத்தில் மேற்படி ஆக்ட் செலாவணியாய்க்கொண்டிருந்தால் அந்த ரயத்து செலுத்துவதற்குட்பட்டதாயிருக்கும்பட்சத்திலே, அவர் - அதை ரயத்தினிடமிருந்து வசூலித்துக்கொள்ளக்கூடியவராகிறார். இந்தப்படி விட்டுவிடப்பட்ட நிபந்தனையினால் ஆகவேண்டிய வேலை ஆய்விட்டது. அதில் சொல்லப்பட்டிருக்கும் சுதந்தரங்கள் 1916-ம் ஹூ த்து முடிவில் காலம் கடந்தவையாய்விட்டதனால், அந்த நிபந்தனை இனிமேல் அவசியமில்லை. 1901-ம் ஹூ முதல் 1903-ம் ஹூ வரையில் விசாரணைநடத்திவந்த நீர்ப்பாய்ச்சல் விசாரணைக்கம்மிட்டியார் சிபாரிசு செய்திருப்பதை அனுசரித்து, நஞ்சையாய்த் தரம் பிரிக்கப்பட்டிருக்கும் கவர்ன்மெண்ட் நிலத்துக்கு உயர்த்தப்பட்ட தீர்வையும் மாமூல் நஞ்சை நிலத்துக்குத் தண்ணீர் சர்ப்பரா கவர்ன்மெண்டாரால் அதிகப்படுத்தப்பட்டாலும் மற்றப்படி விருத்திசெய்யப்பட்டாலும் அந்த நிலத்துக்குத் தண்ணீருக்காக ஒரு கட்டணமும் விதித்து வாங்குவதற்குக்கூட நிபந்தனை கண்டிருக்கிறது.

12. 6-ம் அத்தியாயம்.—சில விசேஷ ஷரத்துகளின்மேல் கட்டுவேலைகள் ஏற்படுத்துவதைப்பற்றி இதில் சொல்லியிருக்கிறது. அந்தப்படி ஒரு நிபந்தனை இராமலிருப்பது ஒரு பெருங்குறையாகுமென்று இந்த ராஜதானியில் கருதப்பட்டுவருகிறது. சிலநீர்ப்பாசன ஏற்பாடுகள் அமைக்க உத்தேசித்திருக்கிறது. அந்தப் பாசன ஏற்பாடுகளுக்குட்பட்ட விஸ்தீர்ணத்திலுள்ள நிலத்தைக் கைப்பற்றில் வைத்துக்கொண்டிருப்பவர்கள் அவைகளிலிருந்து தண்ணீர் பாய்ச்சப்பெற விரும்பினாலுஞ்சரி விரும்பாவிட்டாலுஞ்சரி அந்த நிலத்தின் விஷயமாய்க் குறித்த ஒரு விதப்படி தண்ணீர் வரி செலுத்தப்படுமென்று உறுதி ஏற்பட்டாலன்றி மற்றப்படி, அந்தக் கட்டுவேலைகள் பிரதிபலன் தரக்கூடியவையாகமாட்டா. அந்தப்படி செலுத்தத் தாங்கள் இஷ்டப்படுவதாக ரயத்துகள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், இப்போதைய சட்டப் பிரகாரம் அந்தப்படி செய்துகொள்ளும் உடன்படிக்கைகள் நிலம் கைமாறிக்கொண்டேயிருந்தால் செல்லாதென்றும், ட்ரான்ஸ்பர் செய்யப்பெறுபவர்களை அந்த உடன்படிக்கைகளுக்கு உட்படும்படி நிர்ப்பந்தப்படுத்த முடியாதென்றும் கவர்ன்மெண்டின் சட்ட உத்தியோகஸ்தர்கள் கவர்ன்மெண்டாருக்கு ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குறையை நிவர்த்திசெய்வது இந்த அத்தியாயத்தின் உத்தேசமாகும். சில நிபந்தனைகள் நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான சிறிய கட்டு வேலைகளைக்குறித்த ஐக்கிய மாகாணத்து ஆக்டிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றன.

13. 7-ம் அத்தியாயம்.—இந்த அத்தியாயத்தில் மாமூல் நஞ்சை நிலத்தை, அதாவது யாதொரு பூஸ்திதியில் வரி செலுத்தாமல தண்ணீர் பாய்ச்சப் பெறும் பாத்தியதையுடைய நிலத்தைக் குறித்துச் சொல்லியிருக்கிறது.

46-ம் பகுதி.—அப்படிப்பட்ட நிலத்தின் அளவை நிச்சயிப்பதைக் குறித்து இந்தப் பகுதியில் சொல்லியிருக்கிறது. விளம்பரம் பிரசுரிக்கப் பெற்றிருக்கும் கட்டுவேலைகளின் விஷயத்தில் 7-வது பகுதியின்படிக்கான விளம்பரத்தின் தேதிவரையிலும், இதர நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைகளின் விஷயத்தில் இந்த ஆக்ட் ஜாரி செய்யப்படும் தேதிவரையிலும் யாதொரு வருஷத்தில் கட்டணம் ஒன்றுமில்லாமலே நீர்ப்பாய்ச்சப்பெறும் மிகவும் பெரிய விஸ்தீர்ணமானது மாமூல் நஞ்சையாக அங்கீகரிக்கப்படவேண்டுமென்று இதில் நிர்ணயித்திருக்கிறது உர்லாம் கேஸில் செய்யப்பட்ட தீர்ப்பில் நிலத்துக்குடையவரின் உரிமையை எவ்வளவு தண்ணீர்பெற அவருக்கு பாத்தியதை இருக்கிறதோ அதை

அனுசரித்து நிஷ்கரிஷை செய்யவேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறது. ஆனால், இந்த தீர்ப்பை அனுஷ்டித்து வேலை செய்வது கூடாமலிருக்கிறது. அதற்குக் காரணங்களும் வெளிப்படையானவையே. பூஸ்திதிகள் கொடுக்கப்பட்டபொழுது இருந்த கட்டு வேலைகளின் விஷயத்தில், அப்பொழுது நிலத்துக்குடையவருக்கு எவ்வளவு தண்ணீர் பெற பாத்தியதையிருந்ததென்பதை இவ்வளவு காலம் கழித்து நிச்சயித்தறிவது முடியாத காரியமாகும். இதுவுமல்லாமல், நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான பரிபாலனத்தையும் பிற்காலத்தில் நீர்ப்பாய்ச்சலை அபிவிருத்தி செய்வதையும் உத்தேசிக்கும்போது நிலத்துக்குடையவருடைய உரிமையை அவருக்குள்ள ஏகராக்களைப் பொறுத்ததாயிருக்கும்படி மாற்றுவது அவசியமாகும். இது காரியத்துக்காக, பூஸ்திதி கொடுக்கப்பட்ட பிறகு ஏதோ ஒரு காலத்தில் நிலத்துக்குடையவர் சர்ப்பரா செய்யப்படக்கூடிய தண்ணீர் முழுவதையும் உபயோகித்துக் கொண்டிருந்திருப்பாரென்று வைத்துக்கொண்டு, அதைக் கணக்கிடுவதற்கு நீர்பாய்ச்சப்பட்ட மிகப்பெரிய விஸ்தீர்ணத்தைக்கூடுமான வரையில் சரியான பரிமாணமாகக் கொள்வது நியாயமாகத் தோற்றுகிறது. நிலத்துக்குடையவர் தமது உரிமைகளை மீறிப்போகாமல் பிரஸ்தாப விஸ்தீர்ணத்தைவிடப் பெரிய விஸ்தீர்ணத்துக்கு நீர்ப்பாய்ச்சக்கூடுமென்று ஸ்தாபிக்கக்கூடுமானால், அப்பிரகாரம் உபயோகிக்கக்கூடிய உரிமையை இழந்ததற்காக, 55-வது பகுதியின்படி நஷ்ட ஈடுபெற அவருக்கு பாத்தியதை உண்டு. ஆகவே, சாத்தியமான வரையில் உர்லாம் தீர்ப்பின்படி காரியம் நடத்தப்படுகிறதென்று தெரியவரும்.

எந்த மாமூல் நஞ்சை நிலங்கள் விஷயத்திலாகிலும் 1917-ம் ௵ மேமீ 1உக்கு முன்னதாகப் பைசலேற்பாடுகள் செய்யப்பட்டிருந்து, அவைகள் விஷயமாய்க் கொண்டு வரப்பட்ட வியாஜ்ஜியம் எதுவும் அந்தத் தேதியில் பைசலாகாமலிராவிட்டால், அந்தப் பைசலேற்பாடுகள் முடிவானவையாகுமென்று இந்தப் பகுதியில் பின்னும் நிபந்தனை கண்டிருக்கிறது. இந்தப்படி நிபந்தனை கண்டிருப்பதன் நோக்கம் என்னவென்றால், தண்ணீர் வரி பிரதி வருஷமும் விதிக்கப்படுவதனால் புதிதாய் வியாஜ்ஜியமூலம் ஏற்படுகிறதென்று சென்னபட்டணம் 37-வது வால்யும் 322-ம் பக்கத்திலே கண்டிருக்கும் தீர்மானத்தை அனுசரித்து, 1917-ம் ௵ மேமீ 3உ உர்லாம் கேஸில் சொல்லப்பட்ட தீர்ப்பை ஆதாரமாகக்கொண்டு, நிலத்துக்குடையவர்கள் முடிவாய்ச் செய்யப்பட்டிருக்கும் பைசலேற்பாடுகளின் விஷயத்தில் மறுபடியும் விவகாரம் ஆரம்பிக்க யத்தனிப்பதைத் தடுப்பதேயாகும். நிலத்துக்குடையவர்களிடமிருந்து வியாஜ்ஜிய சம்பந்தமான நோடீஸுகள் பல வரப்பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவர்கள் 1906-ம் ௵த்திலேயே செய்யப்பட்ட பைசலேற்பாடுகளையுங்கூட நிராகரிக்க விரும்புகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட தாவாக்கள் ஏற்படுவதைத் தடுத்தாலன்றி மற்றப்படி, வழக்குகள் பெரிதும் அதிகரித்துவிடும்.

பகுதி 47.—மாமூல் நஞ்சை நிலம் இன்ன ஸ்தானத்திலிருக்கிறதென்று நிச்சயிப்பதைக் குறித்து இந்தப் பகுதியில் சொல்லியிருக்கிறது. மாமூல் நஞ்சை நிலம் இன்ன ஸ்தானத்திலிருக்கிறதென்று நிச்சயித்தாலன்றி மற்றப்படி, பரிபாலன துறையில் பிரமாதமான அசௌகரியமும் ஸர்க்கார் வருமானத்தில் பிரமாதமான நஷ்டமும் ஏற்படுமென்று கோதாவரி கிருஷ்ணா நதிகளின் முகத்துவாரப் பிரதேசங்களிலுள்ள மாமூல் நஞ்சை நிலங்களின் முற்காலத்து சரித்திரத்திலிருந்து ஸ்பஷ்டமாய்த் தெரியவந்திருக்கிறது. கிருஷ்ணா ஜில்லாவிலும் இதர ஜில்லாக்களிலும் ஸ்தானம் இன்னதென்று நிச்சயிக்கப்படாத நிலத்தொகுதிகள் இன்னும் ஏராளமாய் இருக்கின்றன. இப்போதிருக்கும் சட்டத்தின் பிரகாரம், அவைகளின் ஸ்தானத்தை நிச்சயிக்கும்படி நிலத்துக்குடையவர்களை நிர்ப்பந்தப்படுத்த வழியில்லை. இது சம்பந்தமாய் அனேக வழிகள் எடுத்துக்காட்டப்பட்டன. ஆனால், அவைகளில் எதுவும் பயன்படக்கூடியதாயில்லை. ஆகவே, சட்ட நிபந்தனை ஏற்படுத்துவதுதான் பரிகாரமாகத் தோற்றுகிறது. தங்களுடைய ரயத்துகள் வியாஜ்ஜியங்கள் தொடருவார்களென்று நிலத்துக்குடையவர்கள் பயப்படுவதே - அவர்கள் நிலங்களின் ஸ்தானத்தை நிச்சயிக்காதபடி தள்ளிக்கொண்டுவருவதற்கு ஒரு காரணமாகும். இப்போதிருக்கிற சட்டப்படி யாதொரு ரயத்தின் நிலமானது நஞ்சையென்று அங்கீகரிக்கப்பட்டிராவிட்டால், அவர் - அந்தப்படி அது பாவிக்கப்படவேண்டுமென்று நிர்ணயம் பெறுவதற்காக வியாஜ்ஜியம் தொடரலாம் (இ. லா. ரி. சென்னபட்டணம் 32-வது வால்யும் 423-ம் பக்கம்).

அந்தப்படி வியாஜ்ஜியங்கள் தொடருவதற்கு (2) குறிப்பிட்ட உட்பகுதியினால் தடை ஏற்படுகிறது.

14. 8-ம் அத்தியாயம்.—பிரதிபலன் தீர்மானிப்பதற்குச் சம்பந்தமான சகல நிபந்தனைகளையும் ஒருமிக்க இந்த அத்தியாயத்தில் கொண்டுவந்திருக்கிறது. இதில் அனுசரிக்கப்படும் பொதுவான கோட்பாடு என்னவென்றால், இந்த மசோதா ஆக்டினால் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைச் செலுத்துவதனால் நேரிடும் சேதத்துக்காகப் பிரதிபலன் கொடுக்கவேண்டுமென்பதே. என்ன வரையறைகளுக்குட்பட்டு அந்தக் கோட்பாட்டை அனுசரிக்கவேண்டுமோ அவை 48-வது பகுதியிலே விவரமாய்க்காட்டப்பட்டிருக்கின்றன.

அந்தப் பகுதியைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட விலக்கு நிபந்தனையானது பர்மா ஆக்ட் 10-வது பிரிவை அனுசரித்திருக்கிறது. மேலும், முதலில் சேதமுண்டான தேதி முதல் ஒரு வருஷ காலத்துக்குள்ளாக பிரதிபலனுக்குரிய தாவாக்களை சாதாரணமாய்ச் செய்ய வேண்டுமென்றும் அதில் நிர்ணயித்திருக்கிறது.

1914-ம்௵த்து மசோதா ஆக்ட் 32-வது பகுதியிற்கண்ட (2) குறிப்பிட்ட விலக்கு நிபந்தனையின்படி, சர்ப்பராவானது முந்திய பன்னிரண்டு வருஷங்களுக்குள் உபயோகித்துக்கொள்ளப்பட்டிராத விஷயங்களில் பிரதிபலன் கொடுக்கவேண்டியதில்லை. இந்த விலக்கு நிபந்தனையானது - இப்போதைய மசோதா ஆக்ட் 8-வது பகுதியில் கண்டிருக்கும் நிபந்தனையையும் உபயோகிக்கக்கூடிய உரிமைகள் நீக்கிவிடப்படுவதற்காக பிரதிபலன் பெறுவதற்குள்ள பாத்தியதையை அங்கீகரித்திருப்பதையும் உத்தேசித்து விட்டுவிடப்பட்டிருக்கிறது.

2-வது விலக்கு நிபந்தனையின்கீழ் சொல்லியிருக்கும் வரையறைகள் பம்பாய் ஆக்ட் 31-வது பிரிவையும் பர்மா ஆக்ட் 9-வது, 39-வது பிரிவுகளையும் ஆதாரமாகக்கொண்டு பெரும்பாலும் ஏற்படுத்தப்பட்டன. ஆயினும், (a), (b), (c), (j) அடையாளமிட்டிருக்கும் அம்சங்களைக்குறித்துப் பிரத்தியேகமாய்ச் சொல்லவேண்டியிருக்கிறது. நீர்ப்பாய்ச்சுவதைப் புதிதாய் விஸ்தரித்திருப்பதனால் பிரதமத்தில் செய்யும் ஏற்பாடுகள் சிறிதுமட்டில் தற்காலத்துக்காக மாத்திரம் செய்யப்பட்ட ஏற்பாடுகளாயிருந்து, சோதனை செய்து பார்த்தபிறகு அவைகளைத் திருத்தவேண்டியிருப்பதாயும், ஆனால் அதன்கீழ் புதிதாய் நீர்பாய்ச்சப் பெறும் நிலத்துக்குடையவர்கள் தண்ணீர் சர்ப்பரா செய்யப்பெற்று வருவதற்கு உடனே சட்டசம்மதமான பாத்தியதைகள் அடையும்படி அவர்களுக்கு அனுமதி கொடுத்துவிட்டால், அந்தத் திருத்தங்களை உண்டாக்குவதற்குப் பிரமாதமான தடை ஏற்படுமென்று காணப்படுகிற பட்சத்திலே, மேலேகண்டபடி நீர்ப்பாய்ச்சுவதைப் புதிதாய் விஸ்தரித்திருப்பதை மாற்றுவதற்கும் சீர்திருத்துவதற்கும் முன்னிலும் அதிகமான சுதந்தரம் ஏற்படும்படிச் செய்வதே ஷை அம்சங்களில் முதல் அம்சமாகிய (a) குறிப்பிட்ட அம்சத்தின் உத்தேசமாகும். சென்னை ராஜதானியின் ரெவினியு ஏற்பாட்டின்படி வைக்கப்பட்டுவரும் ஸர்க்கார் கணக்குகளிலே "புஞ்சை" யென்று ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் நிலத்துக்குத் தண்ணீர் சர்ப்பரா ஆவதை நிறுத்திவிடுவதற்காகப் பிரதிபலன் வேண்டுமென்று செய்யப்படும் தாவாக்களுக்கு (b) குறிப்பிட்ட அம்சத்தில் கண்ட வரையறையினால் தடையுண்டாகிறது. 1909-ம்௵த்து மசோதா ஆக்டில் எழுதிப்பட்டிருந்தபடி (c) குறிப்பிட்ட அம்சத்தில் பின்வரும் அதிகப்படியான வார்த்தைகள் அடங்கியிருந்தன:—

"அல்லது, கவர்ன்மென்டார் யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைக்கு மராமத்து செய்யவாவது அது பிரயோஜனகரமாயிருக்கும்படிச் செய்யவாவது தவறிப்போவது காரணமாக".

இந்த வரையறை 1911-ம்௵த்து மசோதா ஆக்டிலிருந்து விட்டுவிடப்பட்டது. அதற்குக் காரணம் என்னவென்றால், "அதன் சொல்லமைப்பு மிகவும் பொதுப்பட பொருள்படக்கூடியதாயிருக்கிறதென்பதும், இந்த விஷயத்தைப்பற்றி எவ்விதமாகவேனும் குறிப்பிடுவது பிரஸ்தாப பகுதியின் மூதல் பாகத்தின்படி அனுவசியமாயிருப்பது மாத்திரமேயல்லாமல் அதனால் பொதுச் சட்டத்துக்கு அர்த்தம் கொள்ளுவதற்குங்கூட பாதகமும் ஏற்படும்" என்பதேயாம்.

மேலேகண்டபடி விட்டுவிட்டிருப்பதற்கான காரணம் நன்றாய்ப் புலப்படவில்லை. நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைகளைப் பராமரித்துவர கவர்ன்மென்டார் கடமைபட்டவர்களல்லவென்று நீதி விசாரணைக் கோர்ட்டார்கள் அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள் (ம. லா. ஜ. 20-வது வால்யும், 869-ம் பக்கம்). அந்தப்படி கூறியிருப்பது ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றி சட்டம் இன்னதென்று சொல்லியதாகும். ஆகவே, பிரதிபலனுக்காகக் கொண்டுவரும் தாவாக்கள் விஷயத்தில் பிரவர்த்திக்கவேண்டியவர்களாயிருக்கும் ரெவினியு உத்தியோகஸ்தர்களுக்கு அவர்கள் அனுசரிக்கவேண்டிய முறையைக் காட்டுவதற்காக, ஷை வரையறையை மசோதா ஆக்டில் அமைத்துக்கொள்வது அவசியமென்று கருதப்படுகிறது. ஆகவே, 1909-ம்௵த்து மசோதா ஆக்டில் கண்ட மேற்படி நிபந்தனையை மறுபடியும் சேர்த்துக்கொள்ளலாயிற்று.

வண்டல் குறைந்துபோவதனால் உண்டானதாகச் சொல்லப்படும் சேதத்தை மதிப்பிடுவது அசாத்தியமாகையால், (j) அடையாளமிட்ட வரையறையை அமைத்துக்கொண்டிருக்கிறது.

பிரதிபலனுக்காகக் கொண்டுவரப்படும் தாவாக்களின் விஷயமாய்ப் பிரவர்த்திக்கையில் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கைமுறை இன்னதென்று 49 முதல் 55 வரையிலுள்ள பகுதிகளில், கண்டிருக்கிறது. இவைகளில் 55-வது பகுதியிலே, உபயோகிப்பது சாத்தியமாயிருக்கும் உரிமைகள் விஷயமாய்ப் பிரதிபலன் கொடுப்பதைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. பர்மா ஆக்டின் மாதிரியைப் பின்பற்றி எழுதியிருக்கும் 56-வது பகுதியில், ஏற்படுத்தப்பட்ட நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையிலிருந்து தண்ணீர் சர்ப்பரா செய்யப்பெறுவதற்கான உரிமை ரூபமாய்ப் பிரதிபலன் கொடுப்பதற்கு அனுமதி கொடுத்திருக்கிறது.

15. 9-ம் **அத்தியாயம்.**—அவசரமான சந்தர்ப்பங்களில் வேலையாட்களையும் சாமான்களையும் சேகரிப்பதைப்பற்றி இந்த அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறது.

கட்டாயப்படுத்தி வேலை வாங்குவதற்குச் சம்பந்தப்பட்ட 1858-ம்௵த்து சென்னபட்டணம் 1-வது ஆக்டின் சொல்லமைப்பு சிறிதுமட்டில் சந்தேகத்துக்கு இடந்தருவதாயிருக்கிறது. ஆகவே, 1879-ம்௵த்திய பம்பாய் 7-வது ஆக்டையும் 1905-ம்௵த்திய பர்மா 2-வது ஆக்டையும் மாதிரியாகக்கொண்டு ஷை ஆக்டின் நிபந்தனைகள் மாற்றியெழுதப்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்து மூலமாய்ப் பிரதிபலன் நிச்சயிக்கும் காலங்கடந்த நிபந்தனையை ரத்துசெய்திருக்கிறது.

16. 10-ம் அத்தியாயம்.—இந்த அத்தியாயத்தில் குடிமராமத்தைப்பற்றி சொல்லியிருக்கிறது. இதற்குச் சம்பந்தப்பட்ட சட்டம் இப்போது 1858-ம் ௵த்து 1-வது ஆக்ட் 6-வது பிரிவில் அடங்கியிருக்கிறது. ஆயினும், போதுமானபடி அதைப்பற்றி அதில் சொல்லியிருக்கவில்லை. இது விஷயமாய் இன்னும் பூர்த்தியான நிபந்தனைகள் விதிப்பதைக் குறித்த பிரசினை சென்ற 50 வருஷ காலத்தில் அப்போதைக்கப்போது ஏற்பட்டிருக்கிறது. நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான சிறு கட்டுவேலைகளைக்குறித்து 1870-ம் ௵த்தில் ரிபோர்ட் செய்த சபையார் இது விஷயமாகப் புதிதாய்ச் சட்டம் ஏற்படுத்தவேண்டுமென்று அபிப்பிராயம் தெரிவித்து, ஒரு மசோதா ஆக்ட் தயார்செய்தார்கள். அது ரெவினியு போர்டாருடைய அபிப்பிராயத்துக்கு அனுப்பப்பட்டது. சட்டம் விதிக்கப்படவேண்டுமென்னும் பிரேரேபனையை போர்டார் அங்கீகரித்தபோதிலும், அந்தக் காலத்தில் கவர்ன்மெண்டார் அது விஷயமாய்ப் பின்னும் நடவடிக்கைகள் எதுவும் நடத்தவில்லை. 1879-ம் ௵த்தில் பாமின் கம்மிஷன் என்னும் பஞ்ச விசாரணைச் சபையைச் சேர்ந்த நீர்ப்பாய்ச்சல் ஸப் கம்மிட்டியார் சட்டம் ஏற்படுத்தவேண்டுமென்று மறுபடியும் வற்புறுத்திச் சொன்னார்கள். அவர்களுடைய அபிப்பிராயங்களைப் பஞ்ச விசாரணைச்சபையார் பூர்த்தியாய் ஆதரித்தார்கள். அப்பிரகாரமே ஒரு மசோதா ஆக்டைத் தயார்செய்ய ஒரு கம்மிட்டி ஏற்படுத்தப்பட்டு, அந்த மசோதா ஆக்டானது 1882-ம் ௵த்தில் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்பட்டது. அந்த மசோதா ஆக்ட் சட்டநிரூபண சபையில் கொண்டுவரப்பட்டு ஸெலெக்ட் கம்மிட்டியாரின் அபிப்பிராயத்துக்கு அனுப்பப்பட்டது. ஆனபோதிலும், பிரேரேபிக்கப்பட்ட சட்டமானது 1884-ம் ௵த்தில் ஜாரியாகாமல் நிறுத்திவிடப்பட்டது. இதற்கு முக்கிய காரணமென்னவென்றால், சிறிய நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைகளைப் பராமரித்துவருவதற்கு அதிகப்படியான பணம் கிடைத்துவிட்டதென்பதேயாகும். ஆனால், இந்தக் காரணம் போதுமாயிருப்பதாகக் கருதமுடியாது. ஏனென்றால், எந்தச் சில்லறை வேலைகளின் தன்மையை நோக்கும்போது அவைகளை ஏற்படுத்தும் காரியத்தை கவர்ன்மெண்டாராவது பிரஸ்தாப இடத்திலுள்ள நபர்களைத் தவிர வேறெவராவது சரியாய்க் கவனிக்க முடியாதோ அந்த வேலைகளை நிறைவேற்றுவதற்காகக் குடிமராமத்து வேலை அவசியமாயிருப்பதே அந்த வேலையைச் செய்யும்படி நிர்ப்பந்திப்பதற்குண்டான முக்கிய காரணமாகும். மேலும், இது சம்பந்தமான மரமத்துகளை ஷை நபர்கள் மாத்திரமே செய்யக்கூடும். அன்றியும் அந்த மரமத்துகள் சொற்பமானவையாய் இருந்தபோதிலும், அவைகளை அசட்டைசெய்யும்பட்சத்தில் பிரமாதமான தீங்கு நேரிடுவதற்கு இடம் உண்டாகக்கூடும். 1901-ம் ௵ முதல் 1903-ம் ௵ வரையில் விசாரணை நடத்திவந்த நீர்ப்பாய்ச்சல் விசாரணை சபையார் இந்த விஷயத்தைப்பற்றி மறுபடியும் ஆராய்ச்சி செய்து, பின்னும் திருப்திகரமான சட்டம் ஒன்றை விதிக்கவேண்டுமென்று பலமாய் வற்புறுத்தினார்கள். இது விஷயமாய்ப் பல கலெக்டர்களுடன் கலந்து ஆலோசித்ததில், குடிமராமத்து வேலை செய்யும்படிக் கிரமமாய் நிர்ப்பந்திப்பதற்கு இப்போதைய சட்டம் போதுமானதல்லவென்றும் அதைத் திருத்தவேண்டுமென்றும் அவர்கள் பொதுவாய் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

பின் சொல்லியிருப்பவை இப்போதைய சட்டத்திலுள்ள பிரதான குறைகளாகும். குடிமராமத்து வேலை வாங்குவதற்குமுன் மாமூல் ஏற்பட்டிருக்கிறதென்று ருஜுசெய்ய வேண்டியிருக்கிறது. இன்ன தன்மையான நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைகளின் விஷயத்தில் குடிமராமத்து வேலைசெய்யும்படி கேட்கலாமென்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்பட்டிருக்கவில்லை. குடிமராமத்து வேலை செய்யத் தவறிப்போனால் விதிக்கலாமென்று நிபந்தனை கண்டிருக்கும் தண்டனை போதுமானதாயில்லை. கொடுக்கவேண்டிய தொகைகளைப் பஞ்சாயத்து நிஷ்கரிஷை செய்யவேண்டியிருக்கிறது. வசூலிக்கப்பட்ட தொகைகள் பிரத்தியேகமான கிராம நிதிகளில் போய்ச்சேரவேண்டியிருக்கிறது. ஷை வேலை செய்வதற்கு உத்தரவாதியாயிருப்பது நிலத்தின் சொந்தக்காரரா அல்லது அனுபோகதாரரா என்று நிச்சயமாய்ச் சொல்லுவதற்கில்லை. குடிமராமத்து வேலைக்கு பர்த்தியாக வரி செலுத்தும்படி ராஜி ஏற்பாடு செய்துகொள்வதற்காவது, பல கிராமங்கள் சம்பந்தபட்டிருந்து, அந்த கிராமத்தார்களுக்குள் இன்ன பங்கு வீதப்படி வேலைக்கு உதவவேண்டுமென்பது விஷயமாய் ஏற்படும் விவாதங்களைப் பைசல் செய்வதற்காவது நிபந்தனை கண்டிருக்கவில்லை. வரிவிதிப்பது விஷயமாய் 1901-ம் ௵ முதல் 1903-ம் ௵ வரையில் விசாரணை நடத்தின நீர்ப்பாய்ச்சல் விசாரணைச்சபையார் சொல்லுவதாவது: "குடிமராமத்து ஏற்பாட்டின்படி திருப்திகரமாய் வேலைசெய்ய முடியாதென்று பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் திருப்திகரமாய்த்தோற்றினாலாவது, சம்பந்தப்பட்ட நபர்கள் விரும்பினாலாவது மாத்திரமே வரிவிதிக்கும் விஷயமாய் சட்டம் ஏற்படுத்தவேண்டுமென்பது எங்கள் அபிப்பிராயம் . . . வரி வசூலிலிருந்து சேரும் நிதிகளை ஒவ்வொரு ஏரி அல்லது ஏரிகளின் தொகுதிக்காக பிரதேச பஞ்சாயத்துகள் பரிபாலனம் செய்வது மிகவும் நன்மை விளைப்பதாயிருக்குமென்றும் . . . . எப்படியிருந்தபோதிலும் அப்படிப்பட்ட ஏற்பாடுகள் விஷயமாய்ச் சட்டத்தில் நிபந்தனை காணவேண்டுமென்றுங்கூட நாங்கள் எண்ணுகிறோம்." மேலே கண்ட குறைகள் இந்த மசோதா ஆக்டில் நிவர்த்திசெய்யப்பட்டிருக்கின்றன.

17. 11-ம் அத்தியாயம்.—இதில் நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்துகளையும் சபைகளையும்பற்றி சொல்லியிருக்கிறது. ஏற்கனவே சொல்லப்பட்டபடி, குடிமராமத்து ஏற்பாட்டின் பிரகாரம் இந்த ராஜதானியிலுள்ள அனேக ஜில்லாக்களில் திருப்திகரமாய் வேலை செய்ய முடியவில்லை. கிராமங்களில் கட்சிகள் ஏற்பட்டிருப்பதும், நிலத்துக்குடையவர்கள்

ஜாகாவில் இல்லாமற்போவதும், ரயத்துகளுக்குள் ஒத்துழைப்பு இராமலிருப்பதும், கட்டாயமாய் வேலை வாங்குவதைக்குறித்த சென்னபட்டணம் 1858-ம்வருத்து ஆக்டில் கண்டிருக்கும் நடவடிக்கை முறை சிக்கலானதாயிருப்பதும் அந்த ஏற்பாட்டின்படி சரியாய் வேலைசெய்ய முடியாமலிருப்பதற்குள்ள முக்கிய காரணங்களில் சில.

இதற்கு ஒரு பரிகாரம் என்னவென்றால், இந்த மசோதா ஆக்டில் செய்திருக்கிறபடி ஷை ஆக்டைத் திருத்துவதேயாகும். பஞ்சாயத்து முறையை அபிவிருத்தி செய்வதனால் பின்னும் பரிகாரம் ஏற்படுமென்று எண்ணப்படுகிறது. 1901-ம்வரு முதல் 1903-ம்வரு வரையில் விசாரணை நடத்தின நீர்ப்பாய்ச்சல் விசாரணைச் சபையார் சொல்லியிருக்கிறபடி, குடிமராமத்து வேலைக்கு பர்த்தியாக விதிக்கப்படக்கூடிய வரியை மிகவும் திருப்திகரமாய்ப் பரிபாலனம் செய்வதற்கான வழி ஏதுவென்றால் அதைப் பஞ்சாயத்துகள் மூலமாய்ப் பரிபாலனம் செய்வதேயாம்.

தண்ணீரைப் பங்கீடுசெய்வதை ஒழுங்குபடுத்தவும், ஏரிகளுக்கும் வாய்க்கால்களுக்கும் மாமூல் மரமத்துகள் செய்வதற்கு ஏற்பாடு செய்யவும், நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான விவாதங்களைத் தீர்மானம் செய்யவும் சில கிராமங்களில் கிரமாசாரப்படி ஏற்பட்டிராத பஞ்சாயத்துகள் ஏற்கனவே ஏற்பட்டிருக்கின்றன. அந்த சபைகளின் தீர்மானங்கள் சட்டசம்மதமானவையாகும்படிச் செய்துவிட்டால், அவைகளின் செல்வாக்கு பெரிதும் அதிகரிக்கும். நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்துகளை சட்ட ஆதாரத்தின்பேரில் ஏற்படுத்துவதே இந்த மசோதா ஆகடின் நோக்கமாகும்.

ரயத்துவாரி விஸ்தீர்ணமல்லாத வேறே விஸ்தீர்ணங்களிலும் அறிக்கை செய்யப்பட்டிருக்கும் கட்டுவேலைகளின் விஷயத்தில், அதாவது 7-வதுபகுதியின்படி எந்தக் கட்டுவேலைகளின் மேல்விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதோ அந்தக் கட்டுவேலைகளின் விஷயத்தில், இந்த மசோதா ஆக்டின்படி நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கலாம்.

பகுதி 71.—பஞ்சாயத்துகள் ஏற்படுத்துவதைப்பற்றி இந்தப் பகுதியில் சொல்லியிருக்கிறது. எந்த நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைக்காகப் பஞ்சாயத்து ஏற்படுத்தப்படுகிறதோ அந்தக் கட்டுவேலையைப் பராமரிப்பதில் அக்கறையுள்ளவர்களாயிருக்கும் நில அனுபோகதாரர்களாலும் அவர்களிலிருந்தும் மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்படவேண்டும். வக்கீல்கள், சௌகார்கள் முதலியவர்களைப்போல் சம்பந்தப்பட்ட இடத்திலிராத பட்டாதாரர்களை விலக்குவதே இதன் நோக்கமாகும். நிலத்தின் அனுபோகதாரர்கள் நிலம் இருக்கிற கிராமத்தில் வாசம்செய்கிறவர்களாயிருக்கலாம் அல்லது இராமற்போகலாம். ஒரு கிராமத்திலுள்ள நிலங்கள் அடுத்த கிராமத்தில் வாசஞ்செய்பவர்களால் பயிரிடப்படுவது மிகவும் சாதாரணமாகையால், ஷை அனுபோகதாரர்கள் விஷயத்தில் பிரஸ்தாப கிராமத்தில் வாசஞ் செய்யவேண்டுமென்னும் யோக்கியதாம்சம் வற்புறுத்தப்படவில்லை. "பீசொாக்" (பாழடைந்துவிட்ட) கிராமங்களின் விஷயத்தில் இது அத்தியாவசியமாகும்.

பகுதி 77.—யாதொரு நீர்ப்பாய்ச்சல் ஏரிக்குத் தண்ணீர் வருவதைத் தடுக்கும்படியாக "அச்சுக்கட்டுகள்" என்று சாதாரணமாய்ச் சொல்லப்படும் கரைகளை அமைத்து தரையின் மேற்பரப்பிலுள்ள தண்ணீரைத் நிறுத்திவைக்காதபடி தடுப்பதைக்குறித்து இந்தப் பகுதியில் சொல்லியிருக்கிறது. சில பிரதேசங்களில் இந்தக் கெட்ட பழக்கம் அதிகமாயிருப்பதனால், அதை நிறுத்திவிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டாலன்றி மற்றப்படி, நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைகளுக்குத் தண்ணீர் வருவது அதிகமாய்க் குறைந்துவிடும். இந்தப் பகுதியில் சொல்லியிருக்கும் கோட்பாடு புதியதல்ல. ஆனால், அது - இ.லா.ரி., சென்னபட்டணம் 40-வது வால்யும், 640-ம் பக்கத்தில் அங்கீகாரமாயிருக்கும் கொள்கையைத் தர்க்க சாஸ்திர முறையில் விரிவாக்குவதனால் ஏற்பட்டதேயாகும். அந்தக் கொள்கை என்னவென்றால், யாதொரு பூஸ்திதியிலுள்ள நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைக்கு வெள்ளம் ஓடும் வழியில் இருக்கும் புஞ்சை நிலங்களைக் கைப்பற்றில் வைத்துக்கொண்டிருக்கிற பாயக்காரியானவர் - தம்முடைய நிலத்தில் வரப்புகள் அமைத்து மழைத் தண்ணீர் ஏரியில் பாயவொட்டாமல் தடுத்து, தடுக்கப்பட்ட தண்ணீரைத் தாம் பயிரிடுவதற்காக நிறுத்திவைத்துக்கொள்ளும் மாமூல் இராதபட்சத்திலே, அந்தப்படி தடுக்க அவருக்கு உரிமையில்லையென்பதே. ஆயினும், ஆட்சேபிக்கத்தக்க "அச்சுக்கட்டுகள்" இன்னவையென்று நிச்சயிப்பது சிறிதுமட்டில் கஷ்டமான காரியமே. அந்தப்படி செய்யக்கூடியவர்கள் கிராமத்தார்களே யாவார்கள். ஆகவே, இந்த விஷயங்களில் பஞ்சாயத்தார்களே பிரவர்த்திக்கும்படி விட்டுவிட உத்தேசித்திருக்கிறது.

18. **12-ம் அத்தியாயம்.**—இதில் விசாரணை அதிகாரத்தைப்பற்றியும் நடவடிக்கை முறையைப்பற்றியும் சொல்லியிருக்கிறது.

யாதொரு பிரதேசத்தின் விஷயத்திலாவது யாதொரு நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலை அல்லது தண்ணீரை வடிப்பதற்கான கட்டுவேலை அல்லது அப்படிப்பட்ட கட்டுவேலைகளின் விஷயத்திலாவது, பிரதிபலனுக்காகக் கொண்டுவரும் தாவாக்களைத் தவிர மற்ற தாவாக்களைப் பரிசீலனை செய்வதற்காக சாதாரண ஸிவில் கோர்ட்டுகளுக்கு பர்த்தியாக ஒரு விசேஷ நியாய சபையை ஏற்படுத்துவதற்கு நிபந்தனை கண்டிருக்கிறது. நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைகளின் நிர்வாகத்துக்கு உத்தரவாதிகளாயிருக்கும் உத்தியோகஸ்தர்கள் பிறப்பிக்கக்கூடிய மிகவும் சாதாரண உத்தரவின் விஷயத்திலுங்கூட வழக்காடுவதே தற்காலத்தில் சுபாவமாய்விட்டது. இப்படிப்பட்ட கேஸுகளின் காரணமாகக் கோர்ட்டுகளின் காலம் மாத்திரமேயல்லாமல் எந்த உத்தியோகஸ்தர்களின் உத்தரவுகளைக் குறித்து விவா

தம் எற்படுகிறதோ அந்த உத்தியோகஸ்தர்களின் காலமும் வீணாய்ப்போய்விடுகிறது. ஏனென்றால், ஷை உத்தியோகஸ்தர்கள் ஸிவில் வியாஜ்ஜியங்களில் பிரதிவாதிகளாவதுமன்றி, அந்த வியாஜ்ஜியங்கள் அப்பீலில் பலதடவைகளில் முன்ஸிப் கோர்ட்டிலிருந்து டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜின் கோர்ட்டுக்கும் சில சமயங்களில் ஹைகோர்ட்டுக்குங்கூட கொண்டு போகப்படுகின்றன. ஷை வியாஜ்ஜியங்கள் அநேகமாய்த் தொடர்ச்சியாகப் பல வருஷகாலம் நடந்துவந்து கடைசியில் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிற அல்லது அனுஷ்டிக்க முடியாதவைகளாயுள்ள தீர்ப்புகள் செய்யப்படுகின்றன. அந்தப்படி தொடர்ச்சியாய் வெகுகாலம் வழக்காடப்பட்டுவருவதனால் பொதுஜன நன்மைக்கு பாதகம் எற்படுவதுடன்கூட, சம்பந்தப்பட்ட நபர்களுக்கு மிகுந்த பணச்செலவும் நேரிடுகிறது. அதனால், எற்படும் பிரயோஜனமோ அந்தப் பணச்செலவுக்கு எற்றதாயிருப்பதேயில்லை. நீர்ப்பாய்ச்சலுக்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களைக்குறித்த விவாதங்களைப் பரிசீலனை செய்வதற்குப் பிரத்தியேகமான ஞானம் வேண்டியிருக்கிறது. அந்த ஞானம் சாதாரண கோர்ட்டார்களுக்கு இருக்குமென்று எதிர்பார்க்கமுடியாது. மேலும், அப்படிப்பட்ட விவாதங்களை சட்ட சம்பந்தமான கிரமாசாரங்களை அனுசரித்து விசேஷமாய் வாதம்செய்வது மூலமாகப் பைசல் செய்வதைவிட, அவைகளை எற்பட்ட இடத்திலேயே அதிக திருப்திகரமாய்ப் பைசல் செய்துவிடலாம். நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான விஷயங்களை நன்றாய் அறிந்திருப்பதாகவும் அது சம்பந்தமாய் எற்படும் சகல விவாதங்களையும் தாமதமில்லாமலும் நீதிமுறையான கோட்பாடுகளின்படியும் பைசல்செய்யும் விஷயத்தில் நம்பக்கூடியதாகவுமுள்ள ஒரு விசேஷ நியாய சபையை எற்படுத்துவது சம்பந்தப்பட்ட நபர்களுக்கெல்லாம் மிகவும் உபயோககரமாயிக்கும். எற்படுத்த உத்தேசித்திருக்கும் கட்டுவேலையின் விஷயத்தில் தாவாக்கள் பைசல் செய்யவேண்டியிருந்தால், ஷை நியாயசபை விசேஷ பிரயோஜனகரமாயிருக்கும். அப்பிரகாரமே, பிரதேச கவர்ன்மென்டாருக்கு யுக்தமாகத் தோற்றும்போதெல்லாம் விசேஷ நியாயசபை ஸ்தாபிப்பதற்கு இந்த மசோதா ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கிறது. சட்ட சம்பந்தமாக சிக்கலான பிரசினைகள் எற்படும் பட்சத்திலே, அந்தப் பிரசினைகளைக்குறித்து ஹைகோர்ட்டாரின் அபிப்பிராயத்தைப் பெற ஷை நியாய சபையாருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது.

பகுதி 83.—பிரதேச கவர்ன்மென்டாருக்காகிலும், எந்த நபர் அல்லது நபர்களுக்காகிலும், எந்த உத்தியோகஸ்தருக்காகிலும் இந்த மசோதா ஆக்டினால் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களில் எதையாவது அவர்கள் செலுத்தாதபடி யாதொரு ஸிவில் கோர்ட்டார் தடை உத்தரவு பிறபிக்கக்கூடாதென்று இந்தப் பகுதியில் கண்டிருக்கிறது. இந்தப்படி ஸிவில் கோர்ட்டாரின் விசாரணை யதிகாரத்தின் விஷயமாய் எற்படுத்தியிருக்கும் நிர்ப்பந்தத்தினால், நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைகளையும் அவைகளிலிருந்து ஜல சர்ப்பரா செய்யப்படுவதையும் ஒழுங்குபடுத்தும் விஷயத்திலும் மேல்விசாரணை செய்யும் விஷயத்திலும் தங்கள் அதிகாரத்தைச் செலுத்துவதற்கு நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தர்களுக்குத் தடை உண்டாகாதென்று உறுதி எற்படுகிறது.

19. 13-ம் அத்தியாயம்.—இதில் குற்றங்களையும் தண்டனைகளையும்பற்றி சொல்லியிருக்கிறது. அதிக பிரமாதமான குற்றங்களுக்கு பலத்த தண்டனை எற்படுத்துவதில் வேண்டுமென்றே பம்பாய் ஆக்டை அனுசரித்து இது எழுதப்பட்டிருக்கிறது.

93, 94-வது பகுதிகள்.—இந்த ஆக்டின்படிக்கான யாதொரு குற்றத்தின் விஷயத்தில் பிரவர்த்திக்கும் மாஜிஸ்ட்ரேட் துன்பமடைந்த நபர்களுக்குப் பிரதிபலன் கொடுக்கும்படி தீர்மானம் செய்வதும், நீர்பாய்ச்சலுக்கு அல்லது தண்ணீரை வடிப்பதற்குச் சம்பந்தப்பட்ட கட்டுவேலைகளுக்குச் செய்யப்பட்ட சேதத்தைச் சரிப்படுத்த நடவடிக்கை நடத்துவதும் இந்தப் பகுதிகளினால் சாத்தியமாகிறது

பகுதி 95.—தங்களுக்கு எதிரில் பிரமாதமான குற்றங்கள் செய்யப்பட்டால், சம்பந்தப்பட்ட நபர்களைப் பிடிப்பதற்கு நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தர்களுக்கும் தெரிந்தெடுக்கப்பட்ட இதர நபர்களுக்கும் இந்தப் பகுதியில் அதிகாரம் கொடுத்திருக்கிறது.

20. 14-ம் அத்தியாயம்.—இதில் உடன்சேர்க்கையான நிபந்தனைகள் அடங்கியிருக்கின்றன. யாதொரு பூஸ்திதியிலுள்ள தனி நபர்களுக்குச் சொந்தமான கட்டுவேலைகளின் விஷயத்தில் வேலையாட்களை நிர்ப்பந்தமாய்ச் சேகரிக்கலாமென்று 97-வது பகுதியில் ஸ்பஷ்டமாய்ச் சொல்லியிருக்கிறது.

பகுதி 99.—இதில் விதிகள் செய்ய அதிகாரம் எற்படுத்தியிருக்கிறது.

1922-ம்ௗு டிஸெம்பர்மீ 7உ. கே. ஸ்ரீநிவாச ஐயங்கார்.

ஆர். ராமசந்திர ராவ்,
கவர்ன்மென்ட் ஸெக்ரெடரி,
லா (லெஜிஸ்லெடிவ்) டிபார்ட்மென்ட்.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.